28°c
32 c
26 c
தெளிவான
காலநிலை
காணப்படும்

# உதயன்

பக்கம்
32

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 190 வள்ளுவர் ஆண்டு: 2045
வைகாசி 21, புதன் 04.06.2014
stay connected with: uthayan.print uthayanprint
Uthayan - A lively National Tamil Daily

04 JUN 2014

# அரசியல் தலையீடுகளை நிறுத்துமாறுகோரி நேற்றுத் திரண்டனர் பல்கலை ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

பல்கலைக்கழக நடவடிக்கைகளில் அரசியல் தலையீட்டை நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை அடங்கலாக 6 கோரிக்கைகளை முன்வைத்து நேற்று நாடளாவிய ரீதியில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஒரு நாள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர் பல்கலைக்கழக ஆசிரியர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்தப் போராட்டம் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் குறித்துக் கருத்துத் தெரிவித்த யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள்,

"யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் தொடர்ச்சியாக இராணுவத்தினராலும் பொலிஸாராலும் அச்சுறுத்த லுக்கு உள்ளாகி வருகின்றனர். அது தொடர்கதையாகவே உள்ளது. அவர்கள் மாத்திரமன்றி மாணவர்களும் அவ்வாறான சிக்கலையே எதிர்கொண்டுள்

21ஆம் பக்கம் பார்க்க




# தனித் தமிழ் ஈழத்துக்கான கருத்துக் கணிப்பு வேண்டும்

## இதை உள்ளடக்கி ஐ.நாவில் இந்தியா தீர்மானம் கொண்டுவர ஜெயலலிதா மோடியிடம் வலியுறுத்து

புதுடில்லி, ஜூன் 4

தனித் தமிழீழத்துக்கான கருத்துக்கணிப்பை ஈழத் தமிழர்களிடமும் புலம்பெயர்ந்த வாழும் தமிழர்களிடமும் நடத்த வேண்டும் என்பதை உள்ளடக்கிய தீர்மானம் ஒன்றை ஐ.நா. சபையிலே நிறைவேற்று வதற்கு இந்தியா அனுசரணை வழங்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்தியுள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.

"இலங்கையில் நடந்த இன அழிப்பைக் கண்டிக்கின்ற ஐ.நா. தீர்மானம் ஒன்றுக்கு இந்தியா கட்டாயம் அனுசரணை வழங்க வேண்டும். அந்தத் தீர்மானம் இன அழிப்புக்குக் காரணமானவர்களைப் பொறுப்புக் கூற வைப்பதுடன், தமிழர்களுக்கு நீதியை வழங்குவதாகவும் இருக்க வேண்டும். அத்தோடு தனித் தமிழீழத்துக்கான கருத்துக் கணிப்பு ஒன்றை ஈழத் தமிழர்களிடமும், உலகெங்கும் பரந்து வாழும் புலம்பெயர் தமிழர்களிடமும் நடத்த வேண்டும்

21ஆம் பக்கம் பார்க்க



## காணி அபகரிப்புக்கு எதிராக 9 பேர் நேற்று முறைப்பாடு

### யாழ்.பிராந்திய மனித உரிமைகள் ஆணைக் குழு கிளையில்

யாழ்ப்பாணம், ஜூன் 4

ஆட்சேபனைகளையும் மீறி, இராணுவத்தினர் தமது காணிகளை சுவீகரிப்பதற்கு முயற்சிக்கின்றனர் என்று தெரிவித்து 9 காணி உரிமையாளர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக்

21ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் 29 பேர் இன்று விடுவிப்பு

### ஜனாதிபதியின் பணிப்பின் பேரில்

யாழ்ப்பாணம், ஜூன் 4

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான நல்லுறவைக் கருத்தில் கொண்டு கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை உடனடியாக விடுவிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். அதையடுத்து அவர்கள் அனைவரும் இன்று விடுவிக்கப்படவுள்ளனர் என்று தெரியவருகின்றது.



இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று தெரிவித்துக் கடந்த சனிக்கிழமை இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 29 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படை

21ஆம் பக்கம் பார்க்க

## யாழ்தேவியில் இருந்து வீழ்ந்து ஒருவர் சாவு


யாழ்ப்பாணம், ஜூன் 4

கொழும்பில் இருந்து பளை நோக்கிப் பயணித்த யாழ் தேவி ரயில் இருந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை நடந்த இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த ஏறத்தாழ 60 வயதுடைய அந்த நபர் இதுவரையில் அடை

21ஆம் பக்கம் பார்க்க

## தன்னியக்க விமானத்தின் உண்மை வெளியாகியது

### தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றின் விளம்பர நடவடிக்கைக்கு உபயோகித்ததாம்



யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்ட சிறிய தன்னியக்க விமானம் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றின் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட விமானமே என்று தெரிவித்துள்ளனர் யாழ்ப்பாணம் பொலிஸார்.

21ஆம் பக்கம் பார்க்க

## மதத் தலங்களூடாக வாக்காளர் பதிவுகள்

### தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 4

வாக்காளர்கள் பதிவு செய்யப்படும் நடவடிக்கையை ஊக்குவிக்கும் விதமாக, சகல மதத் தலங்கள் ஊடாகவும் பி.சி. படிவத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணையாளர்.

அதற்கமைய அடுத்த வாரம் முதல் நாட்டில் உள்ள சகல மதத் தலங்கள் ஊடாகவும் பி.சி. படிவத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது தேர்தல்கள் திணைக்களம்.

இந்த ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த மே மாதம் 16 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வீடு வீடாகச் சென்று கிராம சேவையாளர்கள் பி.சி. படிவத்தை விநியோகித்து வருகின்றனர்.

21ஆம் பக்கம் பார்க்க

## மதகுருவை கட்டி வைத்து விட்டு 20 பவுண் நகைகள் கொள்ளை

### முல்லைத்தீவில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஜூன் 4

முல்லைத்தீவு சிலாவத்தை, அருட் தந்தையையும் காவலாளியையும் தாக்கி அவர்களைக் கட்டி விட்டு, 20 பவுண் நகை மற்றும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பணத்தை 6 பேர் கொண்ட குழு கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சிலாவத்தை சுவாமி தோட்டத்தில் நடந்துள்ளது.

21ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை விவகாரத்தால் முதலீடுகளில் பாதிப்பில்லை

### மத்திய வங்கி ஆளுநர் கூறுகின்றார்

கொழும்பு,ஜூன் 4

மனித உரிமைகள் விவகாரங்களால் இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளில் பாதிப்பு ஏற்படவில்லை என்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மத்திய வங்கி கடந்த மூன்று ஆண்டுகளில், முக்கியமான சாதனைகளை எட்டியுள்ளது.

பணவீக்கம் 5 சதவீதத்துக்கும் கீழ் சென்றுள்ளது. வட்டி வீதங்களும் குறைந்துள்ளன.

வெளிநாட்டு நாணயமாற்று ஒதுக்கமும் அதிகரிக்கவில்லை. மனித உரிமை விவகாரங்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இலங்கை மத்திய வங்கி 6 பில்லியன் டொலர் பிணைமுறிகளை உலகம் முழுவதும் விற்பனை செய்துள்ளது.

இலங்கையில் எவரும் முதலீடு செய்யலாம். அதற்கான கதவுகள் திறந்தே உள்ளன- என்றார். (ச)

# ஐ.நா. குழுவினரை அனுமதிப்பதா? பரிந்துரையை நிறைவேற்றுவதா?

### அரசு விரைந்து முடிவெடுக்கவேண்டும் என்கிறார் அமைச்சர் வாசு

கொழும்பு, ஜூன் 4

ஐ.நா. விசாரணைக் குழுவை நிராகரிப்பதன் மூலம் எழும் சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்கவேண்டுமானால், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கான பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் - இவ்வாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

ஐ.நா. விசாரணைக்குழுவை இலங்கை அரசு ஏற்காவிட்டால் சர்வதேச ரீதியில் நாட்டுக்கு எத்தகைய அழுத்தங்கள் ஏற்படும். அவற்றைச் சமாளிப்பதற்கு அரசிடம் ஏதேனும் வியூகம் இருக்கிறதா? நுழைவிசைவை வழங்க மறுப்பதன் காரணம் என்ன? என்று எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் வாசு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு நுழைவிசைவு வழங்கினாலும், வழங்காவிட்டாலும் விசாரணைகள் எவ்வாறு அமையும் என்பது எமக்குத் தெரியும். எப்படியும் இறுதி அறிக்கை அரசுக்கு எதிராகவே தயாரிக்கப்படும். அதன் காரணமாகவே அரசு சர்வதேச விசாரணையை ஏற்கப் பின்னடிக்கின்றது.

இவ்வாறு நிராகரிப்பதால் கடும் அழுத்தங்கள் ஏற்படும். அவற்றைச் சமாளிப்பதற்கு அரசு உள்நாட்டுப் பொறிமுறையைப் பலப்படுத்த வேண்டும். அதற்கான சிறந்த வழிமுறையாக நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக விரைந்து நடைமுறைப்படுத்த அரசு முன்வரவேண்டும்.

இவ்வாறு செய்தால் அனைத்துலக சமூகத்துக்கும் இலங்கை மீது நம்பிக்கை ஏற்படும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## பரந்தனில் இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தேடுதல்

கிளிநொச்சி, ஜூன் 4

பரந்தன் சிவபுரம் கிராமம் நேற்றுக் காலை 6 மணி முதல் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்டதுடன் வீடுகளில் வசிப்பவர்களது விவரங்களையும் பெற்றுச்சென்றுள்ளனர்.

வாகனங்களில் வந்திறங்கிய இராணுவத்தினர் சிவபுரம் கிராமத்தைச் சுற்றி வளைத்து இந்தத் தேடுதல் மற்றும் விவரம் சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வீடுவீடாகச் சென்று வீட்டில் உள்ளவர்களது விவரங்களை விசாரித்ததுடன் குடும்ப அட்டைகளையும் பெற்று பதிவு செய்தனர்.

குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்கள் செய்யும் தொழில் குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் 'உங்கள் வீடுகளுக்கு யாராவது புதிதாக வந்தாலோ தங்கி நின்றாலோ நீங்கள் அருகில் உள்ள இராணுவ முகாமில் அறிவிக்க வேண்டும்' என்றும் வற்புறுத்தினர் மற்றும் குடும்பத்திலுள்ள அங்கத்தவர்கள் என்ன செய்கின்றார்கள் என்று கேட்டதுடன் குடும்பப் பதிவு அட்டைகளையும் வேண்டிப் பார்த்ததுடன் வீட்டில் யாராவது வேறு இடத்தில் இருந்து புதிதாகத் தங்குவதற்கு வந்தால் உடனடியாக அருகிலுள்ள இராணுவத் தினருக்கு அறிவித்து விவரங்கள் தரப்பட வேண்டும் என்றும் இராணுவத்தினர் பணித்தனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்றைய இந்த சுற்றிவளைப்பின் போது இராணுவத்தினருடன் பொலிஸாரும் வந்திருந்தினர் என்று மக்கள் தெரிவித்தனர். (ஐ- 426)



தேர்தல் குறித்து பொதுமக்களை விழிப்பூட்டும் முகமாக கொழும்பு மாவட்ட செயலகமும் கொழும்பு மாவட்ட தேர்தல் செயலகமும் இணைந்து நடமாடும் வாகனப் பேரணி, வீதி நாடகம் மற்றும் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தன. மஹறகம ,ஹோமாகம ,மீபே ,புவக்பிடிய, மாலபே ஆகிய இடங்களில் இந்த விழிப்பூட்டும் நிகழ்வுகள் இடம்பெற்றன. கொழும்பு மாவட்டத்தில் பெரும்பாலானோர் தேர்தல் இடாப்பில் தமது பெயர்களை பதியாமல் உள்ளனர். சிலர் தேர்தலின் போது தமது வாக்குகளை பயன்படுத்தாமல் இருக்கின்றனர். இந்த நிலைமைகளை போக்குவதற்காக பொது மக்களை இது குறித்து விழிப்பூட்டுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என கொழும்பு மாவட்ட செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்தார். (ற)

## மூடப்பட்டது றுகுணு பல்கலை

கொழும்பு, ஜூன் 4

றுகுணு பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்கள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேசத்தின் மகுடம்-2014 கண்காட்சியை இந்த பல்கலைக் கழகத்தில் நடத்தக் கூடாது என்று மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த கண்காட்சியை அங்குதான் நடத்தவேண்டும் என்று பிரதியமைச்சர் சரத் ஜயசூரியவின் ஆதரவாளர்களும் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்தே பல்கலைக் கழகத்தை மறுஅறிவித்தல்வரை மூடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## வெடிப்பு சம்பவத்தில் பெண் காயம்

கிளிநொச்சி, ஜூன் 4

கிளிநொச்சியில் சாந்தபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் ஒன்றில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த 30 வயதுடைய பசுபதி தனலட்சுமி என்பவரே காயமடைந்துள்ளார்.


நேற்றுக் காலை 8 மணியளவில் சாந்தரபுரம் 20 ஆம் இலக்க வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மண்வெட்டி மூலம் குழி ஒன்றைத் தோண்ட முற்பட்டபோதே இந்த இடர் நடந்துள்ளது.

தற்போது தனலட்சுமி கிளிநொச்சி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸார் இதுகுறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-4-55)

## இராணுவத் தீர்வு கண்ட இலங்கையில் இயல்பு நிலைமை ஏற்பட்டுவிடவில்லை

### பஞ்சாப் முன்னாள் பொலிஸ்துறை தலைவர் சுட்டிக்காட்டு

புதுடில்லி, ஜூன் 4



இலங்கையில் தீவிரவாதத்துக்கு இராணுவ வழிமுறைகளின் ஊடாகத் தீர்வு காணப்பட்டுள்ள போதும், அங்கு இயல்பு நிலை ஏற்பட்டு விடவில்லை என்று தெரிவித்துள்ளார் இந்தியாவின் பஞ்சாப் மாநில முன்னாள் பொலிஸ் துறை தலைவர் ஜூலியோ றிபெய்ரோ.

1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் பஞ்சாப்பில், காலிஸ்தான் பிரிவினைவாதப் போராட்டம் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில், பஞ்சாப் பொலிஸ் துறை தலைவராகப் பதவி வகித்திருந்த அவர், இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"தீவிரவாதப் பிரச்சினைக்கு இராணுவ வழிமுறைகளின் மூலம் தீர்வு காண முடியாது. அதற்கு அயர்லாந்து மற்றும் ஸ்பெய்னின் பாஸ்க் ஆகியவற்றை உதாரணமாகக்கொள்ளலாம். ஒரு இராணுவத் தீர்வு உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்காது.

இராணுவத் தீர்வு காணப்பட்டதற்கு இலங்கையை உதாரணமாகக் கூறலாம். அங்கு இராணுவ வழியில் தீர்வு காணப்பட்டாலும், இயல்பு நிலை இன்னமும் ஏற்படவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## குறுகிய காலத்துக்குள் பெரும் அபிவிருத்திகள்

### புகழ்கின்றார் உகண்டா அமைச்சர்

கொழும்பு, ஜூன் 4

போர் முடிவடைந்த குறுகிய காலத்துக்குள் இலங்கையில் பெருமளவு அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன என்று புகழாரம் சூட்டியுள்ளார் உகண்டா உள்துறைஅமைச்சர் ஒகெல்லோ ஓரியம். இலங்கை வந்துள்ள அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் சந்திப்பின்போது, உகண்டாவும் பயங்கரவாதப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. அவற்றின் பாதிப்புகளை நன்குணர்ந்துள்ளோம் என்று தெரிவித்துள்ள அமைச்சர், உகண்டாவுக்கு வந்திருந்தமைக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், முதற்பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷவுக்கும் நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, ஆபிரிக்க நாடுகளுக்கான தனது பயணம் வெற்றியளித்துள்ளது என்று குறிப்பிட்டதுடன், உகண்டாவுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# கோபி அனானை நாட்டுக்குள் அனுமதித்தால் பெரும் போராட்டம்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 4

இலங்கைக்கு வந்து போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கு கோபி அனானுக்கு அல்ல பான் கீ- மூனுக்கும் நுழைவிசைவு வழங்கக்கூடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

அரசு தமிழ் மக்களுக்கு 13 ஆவது திருத்தத்தை வழங்கினால் அதுவே அரசின் வீழ்ச்சிக்கு வித்திடும் என்று ம் அந்த இயக்கத்தின் பொதுச் செயலர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச விசாரணைக்கு இலங்கைக்குள் இடமளிக்க மாட்டோம். அவ்வாறான விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவும் மாட்டோம் என்று அரசு கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளது. இந்தத் தீர்மானத்தை மீறி கோபி அனானுக்கு இலங்கைக்கு வருவதற்கான நுழைவிசைவை அரசு வழங்க முயற்சித்தால் மக்களை வீதியில் இறக்கி போராடுவோம். அதனை உயிர்த்தியாகம் செய்தாவது தடுத்து நிறுத்துவோம். கோபி அனான் அல்ல பான்கீ - மூனும் இங்கு வந்து விசாரணைகளை நடத்த இடமளிக்கமாட்டோம்.

ஐ.நாவின் முன்னாள் செயலர் கோபி அனானை இலங்கை தொடர்பில் விசாரணைகளை நடத்த நியமிக்கப்பட்டிருப்பதன் பின்னணியிலும் சதி உள்ளது. இவ்வாறானதொரு உயர் பதவி வகித்தவரை நியமித்தால் இங்கு வருவதற்கான நுழைவிசைவை அரசு வழங்கும் என்ற நோக்கமே இதன் பின்னணியில் உள்ளது.

கோபி அனான் இலங்கைக்கு எதிராகவே செயற்படுவார். அவர்.ஐ.நா. செயலர் நாயகமாக பதவி வகித்த போதும் அமெரிக்காவின் கைப்பொம்மையாகவே செயற்பட்டார். இன்றும் மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலையே முன்னெடுப்பார்.

பொலிஸ் அதிகாரம் இல்லாமல் 13 ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரங்களை வடக்கு தமிழர்களுக்கு அரசு வழங்கப் போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எந்த வடிவத்திலும் தமிழர்களுக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தை வழங்கினாலும் நாம் அதை எதிர்ப்போம்- என்று தெரிவித்துள்ளார். (ற)

# சிவில் அதிகாரிகளின் ஒத்தாசையுடன் அரசு இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பு

## வட மாகாண விவசாய அமைச்சர் காட்டம்

அச்சுவேலி, ஜூன் 4

சிவில் அதிகாரிகள் மற்றும் பொது மக்களோடு நெருங்கிய தொடர்பு நிலையில் உள்ள கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மூலம் அரசு இராணுவத்துக்கு ஆள்களை சேர்த்துக் கொள்கின்றது. இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்களும் தமது கடமைகளை புறம்தள்ளிவிட்டு இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் முயற்சியில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு காட்டமாகத் தெரிவித்தார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

அச்சுவேலியில் காணி சுவீகரிப்புக்கு எதிரான அறவழிப் போராட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் ஐங்கரநேசன் கோபம் மேலிட்ட நிலையில் பொலிஸ், கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் முன்னிலையில் இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் நடைமுறையைமுன்னிலைப்படுத்தி கூறி விசனம் தெரிவித்தார்.

காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டம் கடந்த திங்கட்கிழமை அச்சுவேலி யூனியன் இராணுவ முகாமுக்கு அருகில் நடைபெற்றது. போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு நேரில் வருகை தந்திருந்த அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸாரோடும் - நில அளவை அதிகாரிகளோடும் ஆக்ரோஷமான கருத்துப் பரிமாறல் இடம்பெற்றது. பெருமளவில் பொது மக்களும் கூடி இருந்தனர். கிராம அலுவலர் மற்றும் அதிகாரிகளும் காணப்பட்டனர்.

அமைச்சர் கோபமடைந்த நிலையில் கூறிய கருத்துக்களை பொலிஸார் மற்றும் அலுவலர்கள் ஏற்றுக் கொண்ட தோடு சமயோசிதமாக பேசிக்கொண்டனர். அத்துடன் வலி.கிழக்கு பிரதேச செயலருடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அமைச்சர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்:

அரசின் முறைகேடான செயற்பாடுகள் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறாக உள்ளன. சிவில் கட்டமைப்புகள், சிவில் அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் தொடர்பு நிலை அலுவலர்களை முறைகேடான முறையில் அரசு பயன்படுத்தி இராணுவத்துக்கு ஆள்சேர்ப்புச் செய்கின்றது.

இந்த விடயத்தில் அலுவலர்களும் தமது நாளாந்த கடமைகளைத் தவிர்த்து இராணுவத்துக்கு ஆள்களைத் திரட்டும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையிலேயே.காணி சுவீகரிக்கும் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர்" - என்று தெரிவித்தார். (வ-11)

### மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி

கரணவாய், ஜூன்.4

வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான மாகாண மட்டத் தமிழ்த் தினப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 9 மணிமுதல் வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் இடம் பெறவுள்ளன.

இதில் விவாதப் போட்டிகள், விநாடிவினாப் போட்டிகள் முஸ்லிம் மாணவர்களுக்கான நிகழ்ச்சி, சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு மற்றும் எழுத்துப் போட்டிகளும் நாளை இடம்பெறவுள்ளன.

இதேவேளை-திறந்த போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை மாணவர்கள் குறித்த நேரத்துக்கு வருகைதந்து போட்டிகளில் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துமாறு வட மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.(வ-108)

### அனுமதியின்றி மணல் ஏற்றியோர் கைது

தென்மராட்சி, ஜூன் 4

மச்சாய்ப்பகுதியில் காணியொன்றில் அனுமதியின்றி மணல் ஏற்றியவரை நேற்று கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த பாலாவி தெற்கைச் சேர்ந்த மூவரைக் கைது செய்துள்ளனர்.

அனுமதியின்றி காணி யொன்றில் 50 தடவைகள் (லோட்) மணல் ஏற்றியதாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டி நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். ஆதாரங்களை பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பிக்காததால் வழக்கை ஒகஸ்ட் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து அவர்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார் நீதிபதி. (வ-9)



எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினர் 21 மில்லியன் ரூபா செலவில் இரு மாடிகள் கொண்ட கட்டடமொன்றை அமைக்கவுள்ளனர். இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் மாட்டீன் ஸ்ருவ்டர் மற்றும் நிறுவனப் பிரதிநிதி லீசா ஆகியோரும் கைச்சாத்திட்டனர். (வ-9)

### பசுவை மோதி காயப்படுத்திய சாரதிக்கு தண்டம்

தென்மராட்சி, ஜூன் 4

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் ஏ - 9 வீதியில் வேகமாகச் செலுத்தப்பட்ட லொறியால் பசு மாட்டை மோதியமைக்காக சாவகச்சேரி நீதிமன்றில் லொறியின் சாரதிக்கு 8 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

ஏ - 9 வீதியில் மணல் ஏற்றிச் சென்ற லொறி வீதியைக் கடந்த பசு மாட்டை மோதிக் காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் லொறிச் சாரதிக்கு 8 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (க-9)

# வடக்கு கல்வி அமைச்சர் தலைமையில் மன்னாரில் விசேட கலந்துரையாடல்

## புத்தளத்தில் இயங்கும் வடக்கு மாகாணத்துக்குரிய பாடசாலைகள் குறித்து இறுதி முடிவு தொடர்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 4

வடக்கு மாகாணத்துக்குச் சொந்தமான 6 பாடசாலைகள் புத்தளத்தில் இயங்கி வருகின்ற நிலையில், அந்தப் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்கள் - மாணவர்கள் தொடர்பில் இறுதி முடிவு எடுப்பதற்காக எதிர்வரும் 10 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் வடக்கு கல்வி அமைச்சர் தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்திலிருந்து போர்க்காலத்தில் இடம் பெயர்ந்து சென்ற முஸ்லிம் மக்கள் புத்தளம் மாவட்டத்தில் தங்கியுள்ளனர். இவ்வாறு தங்கியுள்ள மன்னார் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்காக 6 பாடசாலைகள் புத்தளத்தில் இயங்கி வருகின்றன. இதில் கல்வி கற் பிக்கும் 230 ஆசிரியர்களுக்குமான மாதாந்தச் சம்பளம் வடக்கு மாகாண கல்வி அமைச்சினாலேயே வழங்கப்பட்டு வருகின்றது.

இதுதொடர்பில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கல்வி அமைச்சின் செயலாளரிடமும் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

வேறு எந்த மாகாணத்திலும் இந்த நடைமுறை பின்பற்றப் படுவதில்லை என்றும், தற்போது வடக்கில் மீள் குடியமர்வு நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளமையால், குறித்த மாணவர்களையும், பாடசாலைகளையும் வடக்கு மாகாணத்துக்குக் கொண்டு வர வேண்டும். இல்லையெனில் புத்தளம் மாவட்டத்துடன் இணைத்து விட வேண்டும் என்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் இதுதொடர்பில் குறித்த ஆசிரியர்கள் மற்றும் அந்தச் சமூகத்தினரை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

அதன்பின்னரே அந்தப் பாடசாலைகளை தொடர்ந்தும் புத்தளத்தில் இயங்க அனுமதிப்பதா? இல்லையா? என்று முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# ஆரியகுளம் சந்திக்கு அருகில் ரயில் கடவையில் திருத்தப் பணி

## வெள்ளியன்று வீதி மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 4

ரயில்வே கடவை வேலைகளுக்காக யாழ் - பருத்தித்துறை வீதியில் (2 ஆம் கி.மீ. இல்) ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள ரயில்வே கடவை பகுதி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம்மாலை7மணிவரை மூடப்பட்டிருக்கும் என மத்திய பொறியியல் உசாவுத்துறை பணியகம் அறிவித்துள்ளது.

கனரக வாகனங்களும், பஸ்களும், ஆஸ்பத்திரி வீதி, விகடோரியா வீதி, ஸ்ரான்லி வீதியூடாக யாழ்.நகரத்தை அடையலாம். அத்துடன் யாழ்.மாநகர சபையினர், நீர் வழங்கல் குழாய்களை நகர்த்தும் முகமாக மேற்படி வீதியின் அரைவாசிப் பகுதியை மூடி வேலை செய்வார்கள். வாகனங்கள் மீதிப் பகுதியூடாக பிரயாணம் செய்யலாம் என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது. (ஒ)

# சாரதிகளுக்கு தண்டம்

தென்மராட்சி, ஜூன் 4

ஆவணங்களின்றி மது போதை யில் வாகனங்களைச் செலுத்தி இருவருக்கு சாவகச்சேரி நீதி மன்றில் தலா 19 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சாரதிய அனுமதிப்பத்திரம், வாகன வரி, காப்புறுதிப் பத்திரம் ஆகியவை இல்லாத நிலையில் மது போதையுடன் வாகனங்களைச் செலுத்திய இந்த இருவருக்கும் எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். வழக்குகளை விசாரித்த நீதிவான் இருவருக்கும் தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார். (க-9)

### மரம் நடுகை திட்டம் ஆரம்பிப்பு



கோப்புப்படம்

தென்மராட்சி, ஜூன் 4

சாவகச்சேரி பிரதேச இளைஞர் சம்மேளனத்தினர் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை தென்மராட்சி பிரதேசத்தில் மரம் நடுகை திட்டத்தை ஆரம்பிப்பதுடன் சுற்றாடல் கொடி வாரத்தையும் அனுஷ்டிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வுகளில் இளைஞர் கழகங்களைப் பங்குபற்றுமாறு சம்மேளனத் தலைவர் க.மதியுகன் அறிவித்துள்ளார். (வ-9)

# அதிக அழிவு ஏற்படுவது பெண்' புயல்களால்தான்

## ஆய்வில் தெரிவிப்பு

ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பார்கள். புயலில் கூட, பெண் பெயர் வைக்கப்பட்ட புயல்களால், கூடுதல் அழிவு ஏற்பட்டுள்ளது என்று ஒரு ஆராய்ச்சி கூறுகிறது.

பெண் என்றால் அலட்சியம் செய்யும் மனோபாவம்தான் இந்தக் கூடுதல் அழிவுக்குக் காரணமாகிறதாம்.

புயலுக்குப் பெண் பெயர்களை வைத்தால் அதனால் அழிவு அதிகம் ஏற்படுகிறது என்கிறார்கள் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள்.

ஆண் பெயர்களை புயலுக்கு வைக்கும்போது அந்த ஆண் பெயர்கள் காரணமாக அதிக முன்னெச்செரிக்கையை மக்கள் எடுத்துக்கொள்கிறார்கள் என்றும், ஆனால் பெண் பெயர்களை வைக்கும் போது, அந்தளவு அச்ச உணர்வை அது மக்கள் மனதில் ஏற்படுத்துவதில்லை என்றும். அதனால், மக்கள் குறைந்த அளவு முன்னெச்சரிக்கையையே எடுத்துக் கொள்கிறார்கள் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

அமெரிக்காவில் கடந்த 60 ஆண்டுகளில் ஏற்பட்ட புயல்களைப் பற்றி ஆராய்ந்த இந்த ஆராய்ச்சியாளர்கள், பெண் பெயர்கள் சூட்டப்பட்ட புயல்கள், ஆண் பெயர்கள் சூட்டப்பட்ட புயல்களைக் காட்டிலும், இரட்டிப்பு உயிரிழப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்று கண்டறிந்திருக்கிறார்கள்.

இந்த பாலின வேறுபாட்டு மனோபாவம் காரணமாக தயாராக இல்லாத நிலை அழிவை ஏற்படுத்துவதால், புயல் மற்றும் சூறாவளிகளுக்கு பெயர் சூட்டும் முறையில் மாற்றம் வேண்டும் என்று அந்த விஞ்ஞானிகள் யோசனை கூறுகிறார்கள். (வ)

# லட்சக்கணக்கானோரின் படங்களை இரகசியமாகச் சேகரிக்கிறது அமெ.

## 'நியூயோர்க் ரைம்ஸ்' தகவல்

**இந்தப் புதிய முறை மூலம், உலகம் முழுவதும் உள்ள தீவிரவாதிகள் மற்றும் பிற நாடுகளின் உளவாளிகளை அடையாளம் காண முடியும் என்று அமெரிக்க கருதுகிறது.**

வொஷிங்கடன், ஜூன் 4

அமெரிக்க உளவுத்துறையால், உலகம் முழுவதும் லட்சக்கணக்கானோரின் முகத்தோற்றப் படங்கள் நாள்தோறும் இரகசியமாகச் சேகரிக்கப்பட்டு வருவதாக அந்த நாட்டின் பிரபல பத்திரிகையான 'நியூயோர்க் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் தேசிய புலனாய்வு அமைப்பான என்.எஸ்.ஏயின் முன்னாள் உளவாளி ஸ்னோடென் வெளியிட்ட ஆவணங்களை மேற்கோள்காட்டி, அந்த பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், என்.எஸ்.ஏ. அமைப்பு, முன்பு தனது உளவு வேலைகளுக்காக கைபேசி வாயிலாக அனுப்பப்படும் குறுந் தகவல்கள், மின்னஞ்சல் செய்திகள், பிறரது தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டது. ஆனால் தற்போது உலகம் முழுவதும் உள்ள மக்களின் முகத்தோற்றம், கைரேகை பதிவுகள் உள்ளிட்டவைகளைச் சேகரித்து வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளாக புதிய தொழில்நுட்பத்தின் மூலம், மின்னஞ்சல், கைபேசி மூலம் அனுப்பப்படும் செய்திகள், சமூக வலைத் தளங்கள், காணொலி தொடர்பாடல்கள் ஆகியவற்றில் இருந்து முகத்தோற்றப் படங்களைச் சேகரித்து வருகிறது.

இந்தப் புதிய முறை மூலம், உலகம் முழுவதும் உள்ள தீவிரவாதிகள் மற்றும் பிற நாடுகளின் உளவாளிகளை அடையாளம் காண முடியும் என்று அமெரிக்கா கருதுகிறது.

இதுவரை எத்தனைபேரின் முகத்தோற்றப் படங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன என்றும், அதில் எத்தனைபேர் அமெரிக்கர்கள் என்றும் தெரியவில்லை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து என்.எஸ்.ஏ செய்தித் தொடர்பாளர் வைனி எம் வின்ஸ் தெரிவிக்கையில், "ஓட்டுநர் உரிமம் கோரும் விண்ணப்பம், கடவுச்சீட்டு கோரும் விண்ணப்பங்களில் உள்ள புகைப்படங்களை சேகரிக்க என்.எஸ்.ஏ.வுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை' என்றார்.

வெளிநாடுகளில் இருந்து விசா கோரி விண்ணப்பிப்போரின் புகைப்படங்கள், பேஸ்புக் மற்றும் ஏனைய சமூக வலைத் தளங்களில் உள்ள புகைப்படங்களை என்.எஸ்.ஏ. சேகரிக்கிறதா? என்ற கேள்விக்கு அவர் பதில் அளிக்க மறுத்து விட்டார். (வ)

# தமிழக மீனவர் பிரச்சினைக்கு உடன் தீர்வு காண வேண்டும்

## மத்திய அரசை வலியுறுத்துகின்றார் ராமதாஸ்

சென்னை, ஜூன் 4

தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுவது தொடர்பில் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ராமதாஸ்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு அவர் வலியுறுத்தியுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"வங்கக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 29 பேரை இலங்கைக் கடற்படை கடந்த சனிக்கிழமை நள்ளிரவு கைது செய்துள்ளது. அதன்பின் நேற்றுமுன்தினம் மேலும் 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்குச் சொந்தமான 7 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழக மீனவர்களுக்கு எதிரான இந்த அடாவடிச் செயல் கண்டிக்கத்தக்கது.

வங்கக்கடலில் மீன்பிடிக்க விதிக்கப்பட்ட தடைக்காலம் முடிந்ததையடுத்து 45 நாள்களுக்குப் பின்னர் கூடந்த சனிக்கிழமையே ராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடிப்பதற்குச் சென்றிருந்தனர். ஒன்றரை மாதங்களாக வருமானமின்றித் தவித்த மீனவர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் கடலுக்குச் சென்ற நிலையில், அவர்களை கைது செய்திருப்பது மனித நேயமற்ற செயலாகும். அதுவும் கச்சத்தீவுக்கும் தலைமன்னாருக்கும் இடைப்பட்ட இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களைக் கைது செய்திருப்பது கடுமையான அத்துமீறலாகும். இத்தகைய செயலை இனியும் அனுமதிக்கக் கூடாது.

மத்தியில் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமைந்த பின்னர் மீனவர்கள் மீதான அத்துமீறல் ஓயும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஆட்சி மாற்றத்திற்குப் பிறகும் தமிழக மீனவர்களை சிங்களப்படையினர் கைது செய்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

நரேந்திரமோடி அரசு பதவி ஏற்பதையொட்டி நல்லெண்ண நடவடிக்கையாக இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என ஒருபுறம் அறிவித்துவிட்டு, அவர்களில் ஒருவர் கூட இன்னும் விடுதலை செய்யப்படாத நிலையில் மேலும் 33 மீனவர்களை சட்ட விரோதமாக கைது செய்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

இலங்கை அரசின் இடையூறுகளாலும், அத்துமீறல்களாலும் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பாதிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள், நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசு தான் தங்களுக்கு விடிவு காலத்தை ஏற்படுத்தித் தரும் என்று நம்புகிறார்கள். இலங்கை அரசின் இந்தப் போக்குத் தொடர அனுமதிக்கப்பட்டால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் அடியோடு அழிக்கப்படும் ஆபத்து இருக்கிறது.

எனவே, கைது செய்யப்பட்ட 33 மீனவர்களையும் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மீனவர்கள் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணவும் மத்திய அரசு முன்வர வேண்டும்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# இணை சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்பில் புதிய முறை

> "இணை சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்பில் 120 மதிப்பெண்கள் என்ற முறையை பின்பற்றுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது

கொழும்பு, ஜூன் 4

சர்வதேச கல்வித் தரங்கள், நிர்ணயங்கள் மற்றும் பூர்வாங்க ஆய்வுகளைக் கவனத்திற் கொண்டு இணை சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்பில் 120 மதிப்பெண்கள் என்ற முறையை பின்பற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற பேச்சின்போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தப் பேச்சில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு, உயர்கல்வி அமைச்சு, பேராதனை மற்றும் ருகுணு பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பேராதனை பல்கலைக் கழக இணை சுகாதார விஞ்ஞான பீடாதிபதி உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இணை சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்பு தொடர்பில் நீதிமன்றத்தினால் தீர்ப்பொன்று வழங்கப்பட்டுள்ளதால் பேரசுக்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள் குறித்து நீதிமன்றத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் நீதிமன்ற ஆலோசனைகளைமைய எதிர்கால செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சுகாதாரத் துறையின் தரத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதோடு மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்குவதன் அவசியம் குறித்து இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ற-10)

# மோட்டார் குண்டு சண்டிலிப்பாயில் மீட்பு

யாழ்ப்பாணம் 04

சண்டிலிப்பாய் கரைப்பிட்டி பிள்ளையார் கோவில் தோட்டக் காணி கிணற்றில் இருந்து நேற்று வெடிக்காத மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது. குறித்த பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள தோட்டக்காணியில் உள்ள கிணற்றினை உரிமையாளர்கள் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்ட போதே, மோட்டார் குண்டு இருப்பதைக் கண்டு அருகில் இருந்த இராணுவ முகாமிற்கு தகவல் கொடுத்துள்ளனர்.

அந்த தகவலின் அடிப்படையில், குறித்த பகுதிக்கு சென்ற இராணுவத்தினர் மோட்டார் குண்டை மீட்டுள்ளனர். (ற-106)

## 13ஆம் ஆண்டு நினைவுகளில்...



### துஷ்யந்தி இலங்கநாயகம்

பிறப்பு: 11.09.1984 — இறப்பு: 27.05.2001

ஆசைக்கோர் புத்திரியென்று
அன்பாய் நாம் பெற்றெடுத்து
அன்னமிட்டு அழகுப் புடைவையுடுத்தி - நீர்
அசைந்து வரும் அழகு கண்டு நாம்
அகம் மகிழ்ந்து இன்புற்றிருந்தோம்
அணியணியாக அன்பர்கள் வாழ்த்த
மணக்கோலங் காணும் மகிமையை எண்ணி
சொரியும் ஆவல் கொண்டு நாம் நின்றோம்
பார்த்துப் பார்த்துக் கட்டிய எம் கோட்டையை
பரிவின்றித் தகர்த்தான் கொடிய காலனவன்.

பிரிவை எண்ணித் தவிக்கும்
அம்மா, அப்பா, அண்ணன்மார், அண்ணிமார், மருமக்கள்.


(48/27) (10)

## உடுவிலில் திருட்டு

உடுவில் அம்பலவாணர் வீதியில் பட்டப்பகலில் வீடுபுகுந்த திருடர்கள் பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெறுமதிமிக்க மடிகணினி, கையடக்கத்தொலைபேசி, கமரா மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் என்பனவே திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4)

# சுவிஸில் குடியுரிமை கோரியோரின் விண்ணப்பங்கள் மீள் பரிசீலனைக்கு



கோப்புப்படம்

சுவிற்ஸர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ள இலங்கையர்களின் விண்ணப்பங்களை மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள அந்தநாட்டு குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கையர்கள் தமக்கு சுவிஸ் குடியுரிமையை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனடிப்படையில் ஆயிரத்து 800 விண்ணப்பங்களை மீள் பரிசீலனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுவிஸ் குடியேற்ற விவகாரங்கள் தொடர்பான அலுவலகம் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது.

மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் விண்ணப்பங்களில் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களுக்குரியவர்களை சுவிஸ் அதிகாரிகள் நாடு கடத்த மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 2 ஆயிரம் இலங்கையர்கள் அரசியல் தஞ்சம் கோரி சுவிற்ஸர்லாந்து குடியேற்ற விவகாரங்கள் தொடர்பான அலுவலகத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

இலங்கையில் தற்போது நிலவும் அமைதியான சூழ்நிலை காரணமாக அந்த விண்ணப்பங்களை நிராகரிக்க சுவிற்ஸர்லாந்து அரசாங்கம் முயன்று வந்தது.

எனினும் புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கையை அடுத்து விண்ணப்பங்களை நிராகரிப்பதை அதிகாரிகள் நிறுத்தி வைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## வாக்காளர் பதிவில் மாற்றம் வேண்டும்

### 'கபே' அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு.ஜூன் 4
வாக்காளர் பதிவு முறைமையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்று 'கபே' அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டிலும் ஜூன் மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரையிலான காலப் பகுதியில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வாக்காளர் பதிவு இடம்பெறுகிறது.

இந்த நடவடிக்கையால் பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர்கள் வாக்களிக்கும் உரிமையை இழந்து விடுகின்றனர் என்று 'கபே' அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கணக்கெடுப்பில் பங்கேற்க வாக்காளர்கள் நாட்டம் காட்டாமை , வாக்காளர் பதிவு தொடர்பிலான நடவடிக்கைகளை அதிகாரிகள் உரிய முறையில் மேற்கொள்ளாமை ஆகிய காரணிகளால் இவ்வாறு வாக்காளர் பதிவு துல்லியமான முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை என்று குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு தடவையும் சுமார் 400,000 புதிய வாக்காளர்களை வாக்காளர் இடாப்பில் இணைத்துக் கொள்ளும் அதேவேளை, பெரும் எண்ணிக்கையிலானவர்களின் பெயர்கள் விடுபட்டு போய் விடுகின்றன.

வாக்காளர் பதிவு சரியான முறையில் நடைபெறா விட்டால் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் தேர்தலை நடத்த முடியாது என்று கபேஅமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள வாக்காளர் பதிவு முறைமை காலம் கடந்த ஒன்றாகும் என்று கபே அமைப்பு அறிவித்துள்ளது.

புதிய முறைமை ஒன்றை அறிமுகம் செய்து துல்லியமாக வாக்காளர்களை பதிவு செய்ய வேண்டியது அவசியமாகின்றது என்று கபே அமைப்பு குறிப்பிட்டுள்ளது.(ச)

# ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை தேவை

## இனவாதமற்ற பொது வேட்பாளரைத் தேடுவது சிரமம் என்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு.ஜூன்4
வெளிநாட்டுச் சக்திகள் மஹிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து அகற்றும் நிலை உருவானால், நாட்டின் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட நேரிடும். அதனால் அதற்கு முன்னர் உள்நாட்டுச் சக்திகள் அவரை பதவியில் இருந்து அகற்ற வேண்டும் என்று நவசமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-


விக்கிரமபாகு கருணாரட்ன

இன்றைய அரசை பாதுகாப்பது என்பது நிறைவேற்று அதிகாரத்துக்கும் அப்பால் சென்ற பாசிசவாதம் உருவாக இடமளிப்பதாகும்.


ராவணா பலய, பொதுபல சேனா போன்ற அமைப்புகளை வீதியில் இறக்கி அரசு தனது தேவையை நிறைவேற்றி வருகிறது.

> இன்றைய அரசை பாதுகாப்பது என்பது நிறைவேற்று அதிகாரத்துக்கும் அப்பால் சென்ற பாசிசவாதம் உருவாக இடமளிப்பதாகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க இனவாதமற்ற பொது வேட்பாளரை தேடுவது சிரமமானது.

அதேவேளை- 1988ஆம், 1989 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கொலைகளுக்கு ஜே.வி.பி மன்னிப்பு கோருவது கேலிக்குரியது.

அவர்கள் கொண்டிருந்த தவறான கொள்கை தொடர்பிலேயே ஜே.வி.பியினர் மன்னிப்பு கோர வேண்டும்- என்றார். (ச)


கொழும்பு லும்பினி வித்தியாலயத்துக்கான மஹிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்துவைக்கப்பட்டது. ஆய்வு கூடத்தை ஜனாதிபதியுடன் இணைந்து கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன உட்பட அமைச்சர்கள் பார்வையிடுகின்றனர்.

## ரூ.4,996 மில்லி. செலவில் சிறைச்சாலை

கொழும்பு.ஜூன் 4
ஆசியாவின் மிகப்பெரிய சிறைச்சாலையொன்று 4,996 மில்லியன் ரூபா செலவில் அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்வுள்ளது.

இந்தச் சிறைச்சாலைக் கட்டடத் தொகுதியில் இரண்டாயிரம் கைதிகளைத் தங்க வைக்கக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இந்தச் சிறைச்சாலையில் பேக்கரி உணவுப் பண்டங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றை சிற்றுண்டிச்சாலைகளுக்கு விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இரசாயன மருந்துப் பொருள்கள் பயன்படுத்தப்படாத மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்பட்டு அவற்றை பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

## மண் சரிவுப் பிரதேசங்களாக காலி, களுத்துறை பிரகடனம்

கொழும்பு.ஜூன் 4
களுத்துறை,காலி மாவட்டங்களிலுள்ள சில பிரதேசங்கள் மண் சரிவு அபாய முள்ள பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள் ளன.

பெரும்பாலான பகுதிகள் இடர்கள் ஏற்படக் கூடிய பகுதிகளாகஅறிவிக்கப் பட்டாலும் எவரும் அதனை பொருட் படுத்துவதாக தெரியவில்லை என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் ஆர்.எம். எஸ். பண்டார தெரிவித்தார்.

அதனால் மக்கள் பிரச்சினைகளுக்கும் ஆபத்துக்களுக்கும் முகம்கொடுக்கின்றனர்.

களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்கள, மத்துகம, அகலவத்த, பாலிந்தநுவர, களுத்துறை, பகுதிகளும், காலி மாவட்டத்தில் நெலுவ, தவலம போன்ற பகுதிகளும் மண் சரிவு அபாயமுள்ள பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ச)

## அரசின் மாய வலையில் மோடி சிக்கவே மாட்டார்

### ஜே.வி.பி.வேட்பாளர் தெரிவிப்பு

கொழும்பு. ஜூன் 4
இந்தியாவின் மோடி தலைமையிலான அரசு 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உறுதியாக இருக்கிறது. இலங்கை அரசின் மாய வலையில் மோடி சிக்கி விடமாட்டார்.

இவ்வாறு கூறினார் ஜே.வி.பியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் ;

இந்தியாவின் ஆட்சி மாற்றத்தால், இலங்கைக்கு நன்மைகள் ஏற்படப் போவதில்லை. இந்தியாவினால் கொண்டு வரப்பட்ட13ஆவதுதிருத்தத்தை நீக்கவோ, மாற்றவோ இந்தியா விரும்பமாட்டாது. இங்கு சத்தம் போடுவதால் எந்த மாற்றமும் வரப்போவதில்லை.

ஜனாதிபதி மஹிந்தவுடனான பேச்சின் போதும் 13 ஆவது திருத்தம் குறித்து மோடி குறிப்பிட்டுள்ளார். அதன் முக்கி யத்துவம்பற்றி எடுத்துக் கூறியுள்ளார். எனவே அதில் மாற் றம் ஏதும் வரப் போவதில்லை. இதனை உறுதிப்படுத்தும் வகையில் அவரது கருத்துக்கள் உள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவுடன் நல்ல தொரு உறவைப் பேணி வருகின்றனர் என்றும் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

## வெள்ளம், மண்சரிவால் 23 பேர் உயிரிழப்பு

### 4,820 பேர் இடம்பெயர்வு; வீடுகளும் சேதம்

கொழும்பு,ஜூன் 4
கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் பெய்த அடை மழையால் 23 பேர் உயிரிழந்ததுடன் 4,820 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். 15 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

திடீரென ஏற்பட்ட சீரற்ற கால நிலையால் களுத்துறை மாவட்டமே அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் அடை மழையால் களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதனால் போக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதுடன் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.


வெள்ளத்தில் மூழ்கும் வீடுகள்

களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம் 1,209 குடும்பங்களைச் சேர்ந்த 4,820 பேர் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. களுத்துறை மாவட்டத்தில் 15 வீடுகள் முற்றாகவும் 2 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. வெள்ளம் மண்சரிவு ஆகிய இடர்களால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளில் முப்படையினரும் களமிறங்கியிருந்தனர். 500 இராணுவ வீரர்களும் எட்டு படகுகளுடன் கடற்படையினரும் இரண்டு ஹெலி கொப்டர்களுடன் விமானப் படையினரும் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில்ஈடுபட்டிருந்தனர். (சு-10)

## குவைத் பிரதிநிதிகள் இலங்கை வருகை

கொழும்பு,ஜூன் 4
குவைத் நாடாளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் முபாரக் அல் குரய்னிஜ் தலைமையிலான பிரதிநிதிகள் குழு நேற்றுமுன் தினம்திங்கட்கிழமை இலங்கைக்கு வருகை தந்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடியின் அழைப்பின் பேரில் இந்தப் பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்குவருகைதந்துள்ளனர். இந்தப் பிரதிநிதிகள் இன்று புதன்கிழமை வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள்.

இந்தப் பிரதிநிதிகள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா உட்பட பலரை சந்திக்க உள்ளனர். (ச)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு அபராதம்

அம்பாறை.ஜூன்4
அம்பாறை, ஹிங்குராணை பிரதேசத்தில் 2 கிராம் கஞ்சா வைத்திருந்த இளைஞனை ஆயிரத்து 500 ரூபாவை அபராதமாக செலுத்துமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஹேமந்த பெரேரா நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை உத்தரவிட்டார்.
தமனபொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து ஹிங் குராணை பிரதேசத்தில் சோதனை செய்த பொலிஸார் 2 மில்லிகிராம் கஞ்சாவைத் தனது உடமையில் மறைத்து வைத்திருந்த நிலையில் குறித்த இளைஞனை கைதுசெய்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


கல்முனையில் இருந்து மத்திய முகாம் நோக்கி பயணிகளுடன் சென்ற இலங்கை போக்குவரத்து பஸ்ஸொன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை கல்முனை, கிட்டங்கி தாம்போதியில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த பஸ்ஸில் பயணித்த பயணிகளுக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## பதவியை இழந்தார் மீராசாஹிப்

அம்பாறை.ஜூன் 4
கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சிராஸ் மீராசாஹிப் தொடர்ச்சியாக மூன்று சபை அமர்வுகளுக்கு சமுகமளிக்கத் தவறியமையினால் தனது மாநகர சபை உறுப்பினர் பதவியை இழந் துள்ளார் என்று கல்முனை மாநகர முதல்வர் நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சிராஸ் மீராசாஹிப் தனது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதாக எமது கட்சியின் செயலருக்கு கடிதம்


சிராஸ் மீராசாஹிப்

அனுப்பி இருந்த போதிலும் அதன் மூலம் அவரது உறுப் பினர் பதவியை வெற்றிடமாக அறிவிப்பதற்கு சட்டம் இடம ளிக்கவில்லை.
ஓர் உறுப்பினர் ராஜினாமா செய்வதாக இருந்தால், அவர் தனது பதவி விலகல் கடி தத்தை மாநகர முதல்வரிடமே கையளிக்கவேண்டும். அதனை பொறுப்பேற்கும் முதல்வர் உரிய நடவடிக்கைக்காக அதனை மாநகர ஆணை யாளரிடம் கையளிப்பார்.
அவர் அதனை ஏற்றுக்கொண்டு தமது மாநகர சபையில் உறுப்பினர் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டிருப்பதாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணை யாளருக்கு அறிவிப்பார். அதன் பின்னரே உறுப்பினர் வெற்றி டம் ஏற்பட்டிருப்பதாகவும் புதிய ஒருவரை நியமிக்குமாறும் உதவித் தேர்தல் ஆணையாளர் கட்சியின் செயலரைக் கோருவார்.
ஆனால் சிராஸ் மீராசாஹிப் பின் பதவி விலகல் விடயத்தில் இந்த சட்டப்படியான முறை பின்பற்றப்படவில்லை.
எனினும் அவர் 3 மாநகர சபை அமர்வுகளுக்கு அறிவித் தல் எதுவுமின்றி சமுகம ளிக்காததால் அவரது உறுப் புரிமை இழக்கப்படுகிறது- என்றார். (ச)

# சிங்கள மொழியில் தேசிய கீதம் களுதாவளை தமிழ்ப் பாடசாலையில்

## மனித உரிமையை மீறும் செயல் என்கிறார் துரைரெட்ணம்

மட்டக்களப்பு.ஜூன் 4
கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள்செறிந்து வாழும்பிரதேச பாடசாலையொன்றில் தமிழ் மொழியுடன் தொடர்புடைய நிகழ்வொன்றில்சிங்களமொழி யில் தேசிய கீதம் இசைக்கப்பட் டமை மனித உரிமையை மீறும் செயல் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரை ரெட்ணம் குற்றம் சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
களுதாவளை மகா வித்தியால யத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கிழக்கு மாகாண தமிழ் மொழித் தின விழாவில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை தொடர் பில் எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.
ஒரு சிலரின் அழுத்தங்களால் இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது என்று தக வல்கள் கிடைத்துள்ளன.
இலங்கை அரசமைப்பில் சிங் களமொழியும்,தமிழ்மொழியும் தேசிய மொழியாக அங்கீகரிக் கப்பட்டுள்ளன. அந்த வகையில்




தமிழ்மொழிப் பயன்பாடு அந்த தந்த பகுதிகளில் மேற்கொள் ளப்படவேண்டும் என்று பல் வேறு தரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.
இந்தக் கருத்தை தேசிய மொழிகள், ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவநாண யக்கார கூட அண்மையில் வலியுறுத்தியிருந்தார்.
தமிழ்ப் பாடப் புத்தகங்களில் இலங்கையின் தேசிய கீதம் தமிழ் மொழியிலேயே உள் ளது. அலுவலகங்களில் தமிழ் பிரதேசங்களில் தமிழ் தேசிய கீதம் இசைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.
தமிழ் பிரதேசங்களில் சிங்க ளத்தில்தான் தேசியகீதம் இசைக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படவில்லை.
ஆனால் பெரும்பான்மையாக தமிழ்பேசும்மக்கள்உள்ளகிழக்கு மாகாணத்தில் நடை பெற்ற நிகழ்வில் சிங்கள மொழியில் தேசியகீதம் இசைக்கப்பட்டநிகழ் வானது அனைவரையும் வேத னையடையச் செய்துள்ளது.
தமிழ் மொழிக்கு கௌரவம் வழங்க வேண்டியவர்களே அதனை செய்யாமல் வேறு ஒரு மொழிக்கு அனுசரணை வழங்குவது கவலை தரும் விடயமாகும்.
கிழக்கு மாகாண தமிழ் மொழித்தின நிகழ்வில் தேசிய கீதம் இசைக்கப்பட்டுள்ளமை யானது தமிழ் பேசும் மாண வர்களின் அடிப்படை மனித உரிமை மீறலாகவே பார்க்கப் படவேண்டும். இது தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச் சரின் கவனத்துக்கும் கொண்டு செல்லவுள்ளேன்-என்றார். (ச)

## ஊதி உண்ண உமியும் நெல்லும்...

...... இந்தியாவில் நரேந்திர மோடியின் பதவியேற்பு நடந்த அதே தினத் தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் வடக்கில் மாங்குளம், முள் ளியவளை போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகளில் திறப்பு விழா உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். ஆனால் இவற்றில் கலந்துகொள்ளுமாறு வடமாகாண முதலமைச்சருக்கோ, மாகாண கல் வியமைச்சருக்கோ அழைப்பு ஏதும் விடுக்கப்படவில்லை. அப்படி யானால் மாகாணசபையும் , மாகாணக் கல்வி அமைச்சும் இருந்து என்ன பயன்? மாகாணசபையை ஒதுக்கி விட்டு செயற்படுவதுதானா இலங்கை அரசின் நல்லிணக்கம்? வட மாகாணத்தில் நடக்கும் நிகழ்வுக்கே அந்த மாகாணத்தின் முதலமைச்சரை அழைக்காத அரசாங்கம்தான் இந்தியப் பிரதமரின் பதவியேற்புக்கு அழைப்பு விடுத்ததில் இருந்தே அதில் உள் குத்து இருப்பதை உணரமுடியும். ஆனால் இவையெல்லாம் டக்ளஸ் தேவானந்தாவுக்கோ, வாசுதேவ நாணயக்காரவுக்கோ, அஸ்வருக்கோ உறைக்கப்போவதில்லை. ஊது குழல்களாக ஊதியடிப்பதிலும் தொண் டரடிப் பொடியராக ஜனாதிபதிக்கு தேவாரம் படிப்பதிலும், தமிழ் மக் களின் கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைப்பதிலும்தான் ........




## ஓவிய கண்காட்சி 5 முதல் ஆரம்பம்

மட்டக்களப்பு.ஜூன் 4
கிழக்குப் பல்கலைக் கழக சுவாமி விபுலா னந்த அழகியற் கற் கைகள் நிறுவகத்தின் விரிவுரையாளர் வே. கோகுலரமண னின் முதலாவது கூத்து என்ற தனி நபர் ஒவியக் கண் காட்சி எதிர்வரும் 5ஆம், 6ஆம், 7 ஆம் திகதிகளில் மட்டக்க ளப்பு, கல்லடி சுவாமி விபுலானந்த அழகி யற் கற்கைகள் நிறுவ கத்தில் நடைபெற வுள்ளது. (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் சின்னத்துரை குமாரு
(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)
திதி: ஷஷ்டி



தோற்றம் 24.07.1929
மறைவு 17.05.2013

ஓராண்டு ஆனதப்பா
அன்புறவே!
நீங்கள்
மறைந்த நாள் முதலாய்
ஆறாத் துயரில்
வாடுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.
துர்க்காபுரம், தெல்லிப்பழை.
077 1510306

## களவாடப்பட்டன தையல் இயந்திரங்கள்



வலி.வடக்கு, ஜூன் 4
சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான இரண்டு தையல் இயந்திரங்கள் களவாடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் சனிக்கிழமை வட்டுக்கோட்டையில் இடம்பெற்றுள்ளது.
வட்டுக்கோட்டை செம்பாட்டான் தோட்டம் என்னும் இடத்தில் உள்ள அம்பாள் சனசமூக நிலையம் போதிய பாதுகாப்பு அற்ற நிலையில் காணப்படுவதுடன் அங்கு தையல் இயந்திரங்கள் வைக்கப்பட்டிருந்த அறை ஒரு வார காலத்துக்கு முன்னர் திறந்துவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் சனசமூக நிலைய நிர்வாகம் மற்றும் பிரதேச சபையின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி அலுவலருக்கும் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்கள்.
ஆயினும் உரிய பாதுகாப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிராத நிலையில் தற்போது அங்கிருந்த இரண்டு தையல் இயந்திரங்கள் களவாடப்பட்டுள்ளன. இது தொடர்பாக சன சமூக நிலைய நிர்வாகத்தினால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (வ-86)

# வடக்கில் 91 பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள்

## வேலணை மத்திய கல்லூரியிலும் திறந்துவைப்பு



விருந்தினர்கள் திறந்து வைத்த வேளையில்...

யாழ்ப்பாணம், ஜூன் 4
வட மாகாணத்தில் 91 பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் அமைக்கும் பணி ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அவற்றுள் தெரிவு செய்யப்பட்ட 19 பாடசாலைகளில் தலா 60 மில்லியன் ரூபா செலவில் தொழில்நுட்ப பீடங்கள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கான நிதியை உலக வங்கி வழங்குகிறது என்று வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.
வேலணை மத்திய கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில் நுட்ப ஆய்வு கூடம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டதோடு தொழில் நுட்ப பீடத்துக்கான அடிக்கல்லும் நடப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
"ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் வடக்கில் தெரிவு செய்யப்பட்ட 91 பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அவை சுமார் 10 மில்லியன் ரூபா செலவில் கட்டடமும் மற்றும் உபகரணங்களுமாக ஒவ்வொரு பாடசாலைக்கும் 16 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு பணிகள் இடம்பெற்று வருகின்றன. அந்த 91 பாடசாலைகளில் 19 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றில் தொழில் நுட்ப பீடங்கள் நிர்மாணிக் கப்பட வுள்ளன.
அதற்கான கட்டடங்களுக்கு என சுமார் 21 மில்லியன் ரூபாவும் உபகரணங்களுடன் சேர்த்து 60 மில்லியன் ரூபா செலவில் ஒவ்வொன்றும் அமையப் பெறவுள்ளன. தொழில் நுட்ப தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதாக அந்தப் பீடங்கள் விளங்கும். தொழில் நுட்ப ஆய்வு கூடத்தில் கணித, உயிரியல், தகவல் தொழில் நுட்பம் மற்றும் மொழியியல் பிரிவுகள் உள்ளடங்குகின்றன. கிராமப்புற மாணவர்களுக்கு கல்வி யைச் சரியான முறையில் எடுத்துச்செல்ல இத்தகைய ஆய்வு கூடங்கள் உதவும். எதிர்காலத்தில் தொழில்சார் பயிற்சிகளை மாணவர்கள் கற்க வேண்டும்" - என்றார்.
வடக்கில் முதன்முதலாக வேலணை மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் தொழில் நுட்ப பீடத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், வேலணை பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் அதிபர்கள் பாடசாலைச் சமூகத்தினரின் பங்குபற்றுதலுடன் நிகழ்வு இடம்பெற்றது. (வ-4-7)

குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்

275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 4
அல்வாய் அரசடி விநாயகர் ஆலய பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 12 ஆம் திகதி தேர்த் திருவிழா இடம்பெறும். திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (க-9)

♦ ♦ ♦

வலி.மேற்கு தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயப் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். "கிரியா ஜோதி" சிவஸ்ரீ கௌ.லிங்கேஸ்வரக் குருக்கள் தலைமையிலான குருமார்கள் திருவிழாக் கிரியைகளை நடத்துவர்.
பெருந்திருவிழாவின் தேர், தீர்த்தத் திருவிழாவின் பின்னர் 14 ஆம் திகதி கிராம ஊர்வலமும், மறுநாள் அன்னப்பாவாடை உற்சவமும் இடம்பெறும். (வ-9)

## செயலமர்வு

விளைவு சார் மற்றும் இலக்கு நோக்கிய திட்டமிடல் தொடர்பான செயலமர்வு நாளை வியாழக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், பிரதேச மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் தெரிவித்தார். (வ-7)

பதவி வெற்றிடம்
நிர்மாணத்துறை நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
01. கணக்கியல் உதவியாளர் (Accounting Assistant)
(B.Com HNDA, or Equivalent தகமையுடையவராக இருத்தல் வேண்டும்.)
02. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
NCT (CIVIL), யாழ்.மாவட்டத்துக்கு வெளியேயும் தீவுப்பகுதிகளிலும் வேலை செய்ய விரும்புவராக இருத்தல் வேண்டும்.
03. களஞ்சிய உதவியாளர்
(தங்கியிருந்து வேலை செய்ய விரும்புவராக இருத்தல் வேண்டும்)
உங்களது சுயவிவரக்கோவையை பக்ஸ் அல்லது ஈமெயில், மூலமாக 3 நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.
Fax: 021 205 3080 / Email: sarukaya10@gmail.com



புதுக்கடை திறப்பு விழா
மீண்டும் புதுக்குடியிருப்பு மண்ணில்
இன்று முதல் உதயமாகின்றது
தெய்வம் புடவை மாளிகை
காலம் : 04.06.2014 (புதன்கிழமை)
நேரம் : முற்பகல் 11 மணி முதல்
அன்பர்கள், நண்பர்கள்
வாடிக்கையாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.



ப.தெய்வேந்திரம்
தெய்வம் புடவை மாளிகை

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, ஜூன் 4
மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவ ரோதய மகா வித்தியாலய பரிசில் நாள் விழா இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.
அதிபர் வே.கந்தசாமி தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்பு பீடா திபதி பேராசிரியர் ச.சத்திய சீலனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியமும் கலந்துகொள்வர். பரிசில்களை திருமதி அ.சத்தியசீலன் வழங்குவார். (வ-9)

♦♦♦

கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
கல்லூரி முதல்வர் ஆர்.பாலச்சந்திரன் தலைமை யில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுல ராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் பூநகரி கோட்டக் கல்வி அதிகாரி சு.தர்மரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-55)

## மதிலை உடைத்து கால்வாயில் இறங்கியது பஸ்



காரைநகரில் இருந்து யாழ்.நோக்கி வந்து கொண்டிருந்த அரச பஸ்ஸும் எதிர்ப்பக்கமாகச் சென்று கொண்டிருந்த ஐஸ் கிறீம் வானும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் ஐஸ்கிறீம் வான் சிறிய சேதங்களுக்கு உள்ளானது. வேகக் கட்டுப்பாட்டை இழந்த அரச பஸ் வீதியின் அருகே கட்டப்பட்டிருந்த தனியார் வீட்டு மதில் ஒன்றை உடைத்துக் கொண்டு கால்வாய்க்குள் புகுந்த சம்பவம் ஒன்று நேற்று சண்டிலிப் பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-21-29)

# பால்மாவின் விற்பனை வரியை அரசு உடன் நிறுத்த வேண்டும்

### அரசு நாளாந்தம் 231 லட்சம் ரூபாவை கொள்ளையிடுகிறது என ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 4
சர்வதேச சந்தையில் பால் மாவின் விலை குறைந்துள்ள போதும் அதன் விலையை அரசு குறைப்பதாயில்லை.
விலை குறைப்பைக் கருத்தில் கொண்டு பால்மாவின் விற்பனை வரியை அரசு உடன் நிறுத்த வேண்டும்- இவ்வாறு ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.
மக்கள் விடுதலை முன்னணி பத்தரமுல்லையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
விலை அதிகரிப்பின் மூலம் அரசினால் நாளொன்றுக்கு 231 லட்சம் ரூபா கொள்ளையிடப்படுகிறது.
சர்வதேச சந்தையில் பால் மாவின் விலை பெப்ரவரி மாதத்தில் ஒரு மெட்ரிக் தொன் 5,500 டொலராக இருந்தது. ஆனால் மே மாதத்தில் அது 3,775 டொலராகக் குறைந்து விட்டது. ஆனால் இங்கு விலை குறைக்கப்படவில்லை.
அரசு மக்களின் உணவுப் பொருள்களுக்கு அதிக வரி அறவிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். பால்மா வரியின் மூலம் அரசு ஒரு நாளில் 231 லட்சம் ரூபாவை மக்களிடம் இருந்து சூறையாடுகிறது. இந்த வரியை அரசு நீக்க வேண்டும். அப்பாவி மக்களின் பணத்தை சுரண்டுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். (ஓ)

## கட்டடத் திறப்பு விழா

தொல்புரம் பாணாவெட்டியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு கட்டடத் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் பிரதம அதிதிகளாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.
விசேட அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், சங்கானை பிரதேச செயலர் எ.சோதிநாதன், ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க-28)

## உதவு சாதனங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி சங்கத்தினால் சிவபூமி முதியோர் இல்லத்துக்கு சில உதவு சாதனங்கள் வழங்கப்படவுள்ளன.
இதற்கான நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புப் பிரிவில் இடம் பெறவுள்ளது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சாதனங்களை வழங்கவுள்ளார். (க)

## பிரிவுபசார விழா

சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையில் கடந்த 5 வருடங்களாக தவிசாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற ப.நடராஜாவுக்கு பிரிவுபசார விழா நேற்று முன்தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.
சபையின் தற்போதைய தவிசாளர் செ.சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், நிதிஅமைச்சரின் அபிவிருத்தி அலுவலர் ப.சனாதனசர்மா, மருத்துவர் ச.அம்பிகைபாகன், கிராம அலுவலர் க.வாமதேவன் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். (வ-9)

# சுற்றாடல் தினத்தையொட்டிய போட்டி முடிவுகள் வெளியீடு

கிளிநொச்சி, ஜூன் 4
சர்வதேச சுற்றாடல் தினத்தையொட்டி இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
பாடசாலை சுற்றாடலை பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையற்ற வகையில் வைத்திருப்பதுடன் சுக்திச்சேமிப்பைப் பேணுதல், பாடசாலைச் சுற்றாடலை பசுமையாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருத்தல் போன்றவை தொடர்பாக போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக் கிழமை கொழும்பு றோயல்கல்லூரியில் நடைபெறும். மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-
கிளிநொச்சி மாவட்டம் - கண்டாவளை ம.வி., கிளிநொச்சி முருகானந்தா ம.வி., கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி
முல்லைத்தீவு மாவட்டம் - மாங்குளம் ம.வி., பாலிநகர் ம.வி., முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி. (க-9)

இலங்கை கணக்காளர் சேவை (SLA/CS)
இலங்கை கணக்காய்வாளர் சேவை (SLAUS)
திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2014
2ஆவது பிரிவு வழிகாட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்: 07.06.2014 காலை 9 மணி - 5 மணி வரை
குறிப்பு: 1) ஏற்கனவே SLACSபரீட்சைக்கான மட்டுப்படுத்தப்பட்ட வயது மட்டம் 28 இல் இருந்து 30 வயதாக அனுமதிக்கப்பட்டு இருப்பதால் புதிதாக விண்ணப்பிக்கும் மாணவர்களின் நலன் கருதி இப்பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.
2) சகல பாடங்களும் நேர அட்டவணையின்படி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.
(சி13974) (12.3.6)
நிர்வாகி, புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

தூய ஆவியார்
திருவிழிப்பு ஆராதனை
07.06.2014 சனி இரவு 6.30 மணி முதல்
அதிகாலை வரை யாழ். புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் இடம்பெறும்
மாலை 6.30 மணிக்கு திருச்செபமாலை
இரவு 7 மணி–தூய ஆவியார் திருவிழிப்புத் திருப்பலி
தொடர்ந்து திருவிழிப்பு ஆராதனைகள்
அதிகாலை 4 மணி–தூய ஆவியார் பெருவிழாத்திருப்பலி
ஆயத்த வழிபாடுகள்
ஜூன் 4, 5, 6 (புதன், வியாழன், வெள்ளி) ஆகிய தினங்களில்
மாலை 4.30 முதல் 6 மணிவரை.
தூய ஆவியார் பெருவிழா ஆயத்த வழிபாடுகள்
யாழ். இறைதியான இல்ல மண்டபத்தில் நடைபெறும்.
6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆயத்த வழிபாடுகளிலும், திருவிழிப்பு ஆராதனையிலும் கொழும்பு உயிர்த்த ஆண்டவர் சமூகத்தினர் சகோ.லலித் பெரேரா தலைமையில் இணைந்து சிறப்பிப்பார்கள்.
தூய ஆவியாரின் அபிஷேகம் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இறைதியானக்குழுவினர். (சி/13936)(4.3.6) ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

சாவகச்சேரி நகராட்சிமன்றம்
சாவகச்சேரி நகராட்சிமன்றத்திற்குச் சொந்தமான கடையை வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல்.

டச்சு வீதியிலிருந்து A9 வீதியை இணைக்கும் முதலாவது ஒழுங்கையில் வர்த்தக வங்கிக்கு தெற்குப் பக்கமாக அம்பிகா டிஸ்பென்சறியிலிருந்து மேற்குப் பக்கமாக மூன்றாவதாக அமைந்துள்ள இந் நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான NB–13 ஆம் இலக்க (பழைய இல. TS-24) கடையை வாடகைக்கு விடுவதற்கான கேள்விகள் **20.06.2014ஆம்** திகதி **வெள்ளிக்கிழமை மு.ப.9.00மணி** வரை சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்று **மு.ப. 9.30** மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியையும் இணைப் பிரதியையும் தனித்தனியாக **தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி** என்னும் முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **மூலப்பிரதி, இணைப்பிரதி** எனத் தெளிவாகக் குறிப்பிட்டு இரு விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறைகளையும் ஒரு கடித உறையினுள் வைத்து **"தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு இதற்கென அலுவலகத்தில் தவிசாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் அன்று **முற்பகல் 9.00** மணிக்குப் பின்னரும். **பதிவுத்தபால்** மூலம் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சிமன்ற அலுவலகத்தில் **19.06.2014ஆம்** திகதி **வியாழக்கிழமை நண்பகல் 12.00**மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் தமது தேசிய அடையாளஅட்டை, தமது நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் (குடும்ப அட்டை) ஆகியவற்றின் மூலப்பிரதியையம் நிழற்படப்பிரதியையும் கொண்டுவரல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளவேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தவிசாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

| கடை இலக்கம் | ஆகக்குறைந்தகேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்விவைப்புப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது. வரிகள் தவிர) |
|---|---|---|---|
| NB-13(பழையஇல.TS-24) | ரூபா.1,000,000.00 | ரூபா.10,000.00 | ரூபா.1,000.00 |

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.
03.06.2014

இ.தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.
(C/7701)(5.3)

## நல்லூர் சங்கிலியன் மன்றம் நடத்திய மருத்துவ முகாம்



யாழ்ப்பாணம், ஜூன் 4

நல்லூர் சங்கிலியன் மன்றம் தனது 69 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தும் சமூக நலத் திட்டத்தின் ஐந்தாம் கட்டமாக அரியாலை பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் அந்தப் பகுதியைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

கிராம அலுவலர் இ.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவமுகாமில் இரத்த அழுத்தம், நீரிழிவு உட்பட பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெற்று மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.

வைத்திய நிபுணர் வீ.ஜெனகன் தலைமையிலான வைத்தியர்கள் குழு வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டது. மன்றத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி சங்கிலியன் மன்றத்தினர் தமது பகுதியில் மட்டுமன்றி அயல் கிராமங்களிலும் மக்களுக்கான சேவைகளையும் வழங்கி வருகின்றனர். (ஒ-7)

# பலநாள்கலப் படகுகளுக்குரிய துறைமுக வசதி இங்கு இல்லை

### கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.மாவட்டத்தில் பலநாள் கலப் படகுகளுக்குரிய துறைமுக வசதியில்லை என்றும், அவ்வாறான துறைமுக வசதி கொண்ட மயிலிட்டித் துறைமுகமும் இராணுவக் கட்டுப் பாட்டுக்குள் இருப்பதாகவும் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த வாரம் இடம்பெற்றபோது, கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தொடர்பிலான அபிவிருத்தி மீளாய்வு இடம்பெற்றது. இதன்போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.

> யாழ்.மாவட்டத்தில் தற்போது 43 பலநாள்கலப் படகுகள் உள்ளன. இருப்பினும் அவற்றுக்குரிய துறைமுகங்கள் இங்கு இல்லை.

யாழ்.மாவட்டத்தில் தற்போது 43 பலநாள்கலப் படகுகள் உள்ளன. இருப்பினும் அவற்றுக்குரிய துறைமுகங்கள் இங்கு இல்லை. வசதி குறைவாக உள்ள பருத்தித்துறை மற்றும் காரைநகர் கண்ணகி அம்மன் துறைமுகம் ஆகியவற்றையே அதற்காகப் பயன்படுத்துகின்றனர். இதனால் படகு உரிமையாளர்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர் என்று கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

"இதற்குரிய துறைமுகம் ஏன் இங்கு அமைக்கப்பட வில்லை" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரனால் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த நீரியல் வளத் திணைக்களத்தினர், மயிலிட்டி இறங்குதுறையே இதற்குப் பொருத்தமானது என்றனர். இதன்போது, இணைத் தலைவர்களுள் ஒருவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீன்பிடி நடவடிக்கைகளுக்காக மயிலிட்டித் துறைமுகம் விடுவிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை - பலநாள்கலப் படகுகளுக்குரிய துறைமுகத்தில், எரிபொருள் நிரப்பு நிலையம், உப்பு அரைக்கும் ஆலை, ஐஸ் தொழிற்சாலை என்பன ஒருங்கே இணைந்து காணப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

## புத்தாண்டுச் சேமிப்பில் கைதடி சமுர்த்தி வங்கி சங்கம் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி வங்கிகளினூடான புத்தாண்டுச் சேமிப்பில் கைதடி சமுர்த்தி வங்கிச் சங்கம் முதலிடம் பெற்றுள்ளதுடன், யாழ்.மாவட்டத்தின் மொத்த சேமிப்பு கடந்த ஆண்டை விட இரு மடங்காக அதிகரித்திருப்பதாகவும் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் தெரிவித் தார்.

ஒவ்வொரு வருடமும் புது வருடத்தை முன்னிட்டு சமுர்த்திச் சங்கங்கள் மூலம் பயனாளிகள் மத்தியில் புத்தாண்டுச் சேமிப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் பணத்தில், பயனாளிகளின் சம்மதத்துடன் அதில் ஒரு தொகுதிப் பணம் சேமிப்புச் செய்யப்படும்.

கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் புத்தாண்டுச் சேமிப்பின் மூலமாக 48.94 மில்லியன் ரூபா சேமிப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த ஆண்டு அது 85.85 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இந்தவருடச் சேமிப்பில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கைதடி சமுர்த்தி வங்கிச் சங்கம் ஒரு கோடியே 5 லட்சம் ரூபாயைச் சேமித்து முதலிடத்தையும், உடுவில் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுன்னாக சமுர்த்தி வங்கிச் சங்கம் 78 லட்சத்து 52 ஆயிரம் ரூபாயைச் சேமித்து இரண்டாம் இடத்தையும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள நெல்லியடி சமுர்த்தி வங்கிச் சங்கம் 67 லட்சம் ரூபாயைச் சேமித்து மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. (வ-5)



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய கொடியேற்றம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நவநாள் வழிபாடுகள் இன்று புதன்கிழமை தொடக்கம் தினமும் மாலை 5 மணிக்கு நடைபெற்று 13 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திரு விழாத் திருப்பலியும் மாலை 4.30 மணிக்கு தேர்ப் பவனியும் இடம்பெறவுள்ளன. (ஒ-135-23)

## கிளாலி வீதியை புனரமைக்க கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 4

கிளாலி வீதி புனரமைக்கப்பட வேண்டும் என்று வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் போதே குறித்த வேண்டுகோளை அவர் விடுத்தார். எழுதுமட்டுவாழ் சந்தியில் ஆரம்பித்து கிளாலி கிராமம் வரையான 5 கி.மீ. வரையான வீதி மீள்குடியேற்றம் நடைபெற்ற நாளிலிருந்து புனரமைக்கப்படவில்லை. 30 ஆண்டுகளாக புனரமைக்கப்படாமல் உள்ள குறித்த வீதியால் கடலுணவுகளை சந்தைக்கு எடுத்துச் செல்வதில் கடற்றொழிலாளர்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் பளை, சாவகச்சேரி ஆகிய நகரங்களுக்கும் மருத்துவமனைகள், பிரதேச செயலகம் உட்பட பல தேவைகளுக்கு பயணிக்கும் மக்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டுள்ளனர். மின்சார வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (வ-18)

## சுற்றுலாப் பயணியிடம் திருடிய மாணவன் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 4

ஊர்காவற்றுறை, சாட்டி கடற்கரைக்குச் சென்ற சுற்றுலாப் பயணியொருவரின் பணம் மற்றும் பொருள்களைத் திருடிய 13வயதுடைய பாடசாலை மாணவனொருவனை ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

வேலணை அம்பிகை நகர் பகுதியைச் சேர்ந்த மாணவனொருவரே இவ்விதம் கைது செய்யப்பட்டவராவார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாட்டி கடற்கரையில் குளித்துக் கொண்டிருந்த சுற்றுலா பயணியிடம் இருந்த 18 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 3 கையடக்கத் தொலைபேசிகளைக் குறிப்பிட்ட மாணவன் திருடிச் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட சுற்றுலா பயணி இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் பிரகாரமே குறித்த மாணவன் நேற்று ஊர்காவற்றுறைபொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

கைதுசெய்யப்பட்ட மாணவனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம், அவனிடமிருந்து 3 தொலைபேசிகளும், 18 ஆயிரம் ரூபாவும் மீட்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி சிறுவனை இன்று புதன்கிழமை யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் ஊர்காவற்றுறைபொலிஸார் தெரிவித்தனர். (வ-106)

# தவறணைகளுக்கு வழங்கப்படும் கள் விற்பனையின்றி வீணாகிறது

### வடமராட்சி தொழிலாளர் கவலை

கரணவாய், ஜூன் 4

கள்ளுத் தவறணைகளில் நாளாந்தம் கையளிக்கப்படும் கள் விற்பனை செய்யப்படாது ஊற்றப்படுவதால் தாம் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுவதாக வடமராட்சிப் பகுதி சீவல் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். திக்கம் வடிசாலை இயங்காத காரணத்தாலேயே இவ்வாறு ஏற்படுவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சீவல் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கள்ளை தவறணைகளில் ஒப்படைக்க வேண்டும் என்பது கட்டாயம். அவ்வாறு கையளிக்கப்படும் கள்ளுக்கு குறைந்த விலையிலேயே விலை நிர்ணயம் செய்யப்பட்டு வாராந்த அடிப்படையில் பணம் வழங்கப்படுகின்றது.


திக்கம் வடிசாலை இயங்கிய காலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற கள்ளில் தவறணைகளுக்கு வழங்கப்படுவதை விட மேலதிகமானவற்றை வடிசாலைக்கு வழங்கி குறிப்பிட்ட வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

தற்போது அது இயங்காத காரணத்தால் கள் விற்பனை நிலையங்களில் வழங்கப்படும் பெருமளவான கள் விற்பனை செய்யப்படாது மறுநாள் ஊற்றப்படுகின்றது. அல்வாய் பகுதியில்அமைந்துள்ள இத்தகைய நிலையம் ஒன்றில் நாளாந்தம் ஆயிரம் போத்தல்களுக்கு மேற்பட்ட கள் ஊற்றப்படுகின்றது. இவ்வாறு ஊற்றப்படும் போது அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை.

இதேவேளை - வீடுகளில் ஒரு போத்தல் கள் 50 ரூபாவுக்கு விற்பனை செய்யக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றபோதும் மதுவரித் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைகளால் அவற்றை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சிப் பகுதியில் குறிப்பிட்டதொரு தொகையினர் சீவல் தொழிலையே ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே சீவல் தொழிலாளர்களது பொருளாதார நலனை மேம்படுத்தும் வகையில் திக்கம் வடிசாலையை மீள இயக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பதோடு, சீவல் தொழிலை நம்பியுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் நன்கொடை, கடன் திட்டங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சீவல் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-103)



ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள வெடுக்கு நாறிக்குளத்தின் துருசு சேதமடைந்துள்ளது. (ச-500)

## நீண்ட நேரம் பஸ்கள் தரித்தால் நடவடிக்கை

### முல்லைத்தீவு அரச அதிபர் எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 4

மாங்குளம் சந்தியில் பயணிகளுடன் நீண்ட நேரம் தரித்து நிறுத்தி வைக்கப்படும் பஸ்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

> மாங்குளம் சந்தியில் பயணிகளுடன் பஸ்கள் நீண்ட நேரம் தரித்து நிறுத்தி வைக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு காலை 7.45 மணிக்கு மாங்குளம் சந்தியை வந்தடையும் தனியார் பஸ் 8.15 மணி வரையும் மாங்குளம் சந்தியில் தரித்து நிறுத்தப்படுகிறது.

இதனால் மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதி பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய ஆசிரியர்கள் பாடசாலைக்கு காலதாமதமாகவே செல்ல நேரிடுவது குறித்து அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதனையடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு அரச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் போக்குவரத்துச் சபை ஆகியவற்றுடன் கலந்துரையாடி பஸ்களை நீண்ட நேரம் தரித்து நிறுத்தி வைக்கக் கூடாது என்று கூறப்பட்டது. எனவே மாங்குளம் சந்தியில் பயணிகளுடன் பஸ்கள் நீண்ட நேரம் தரித்து நிறுத்தி வைக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ச-18)

## மதுபோதையில் களியாட்டத்தில் ஈடுபடும் இளைஞர்கள்

வவுனியா, ஜூன் 4

வவுனியா தேக்கவத்தை மைதானத்தில் இளைஞர்கள் மதுபோதையில் பண்பற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதால் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா தேக்கவத்தை மைதானத்தில் இளைஞர்கள் மது அருந்திவிட்டு வீதியால் செல்லும் பெண்களுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்கின்றனர் என்று மக்கள் கூறுகின்றனர்.

இந்த விடயம் குறித்து சிவில் பாதுகாப்புக் குழுக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

## பயனாளிகள் தெரிவில் அரசியல் பழிவாங்கல்

### கிளிநொச்சி மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூன் 4

கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகள் தெரிவில் அரசியல் பழிவாங்கல்கள், என்ற விதத்தில் முறையற்ற தெரிவுகளால் பல பாதிப்புகளை எதிர்கொள்கின்றோம் என்று அம் மாவட்டப் பொது மக்கள் தெரிவித்தனர்.

> பயனாளிகள் தெரிவில் அரசியல் தலையீடுகள் மற்றும் முறையற்ற தெரிவு என்பன மூலம் பயனாளிகள் தெரிவு நியாயமான விதத்தில் இடம்பெறவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களில் முப்பது வீதமான குடும்பங்கள் சமுர்த்திப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பயனாளிகள் தெரிவில் அரசியல் தலையீடுகள் மற்றும் முறையற்ற தெரிவு என்பன மூலம் பயனாளிகள் தெரிவு நியாயமான விதத்தில் இடம்பெறவில்லை என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ச-55)

## ரூ.14 லட்சம் பெறுமதியான தங்க நகைகள் அபகரிப்பு

வவுனியா, ஜூன் 4

மட்டக்களப்பில் இருந்து தனியாக பஸ்ஸில் பயணம் செய்த வவுனியாவைச் சேர்ந்த பெண்ணொருவரிடம் ரூபா 14 லட்சம் பெறுமதியான நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா கோயில் குளத்தைச் சேர்ந்த பெண் மட்டக்களப்பில் உள்ள உறவினரின் திருமணத்துக்கு கடந்த வாரம் சென்று பின்னர், கடந்த 28 ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து பஸ்ஸில் வவுனியாவை நோக்கி வந்து கொண்டிருந்தார். அதேவேளை அவரது கைப்பையில் இருந்த ரூ.14 லட்சம் பெறுமதியான நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று குறித்த பெண் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ச-402)

## புலமைப்பரிசில் பரீட்சை பரிசளிப்பு

வவுனியா, ஜூன் 4

தேசிய சேமிப்பு வங்கியின் வவுனியா கிளை நடத்தும் புலமைப்பரிசில் பரீட்சை பரிசளிப்பு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தமிழ் மத்தியமகா வித்தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-402)

## மத வழிபாட்டுப் பிணக்கால் கைதானோர் மன்னார் நீதிமன்றால் விடுதலை

### அறிக்கை சமர்ப்பிக்கவும் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 4

மத வழிபாடு தொடர்பில் ஏற்பட்ட பிணக்கை அடுத்து கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்ட 5 பெண்கள் உட்பட 21 பேரும் மன்னார் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றில் நீதிவான் ஆனந்தி கனகரத்தினம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் போதே பிணை வழங்கப்பட்டது.

கடந்த மாதம் 12 ஆம் திகதியன்று மன்னார், மடுவிலுள்ள மாதா கிராமம் என்ற இடத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பெந்திகொஸ்தே போதகரும்வேறுசிலரும் கத்தோலிக்க சமயத்தவர்களால் கடுமையாக தாக்கப்பட்டதோடு போதகரின் காரும் அடித்து நொறுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் பொலிஸார் நீதிமன்றில் உடனடியாக அறிக்கை எதுவும் தாக்கல் செய்திருக்கவில்லை.

14 நாள்களின் பின்னரே பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

பொலிஸாரின் செயலில் திருப்தியின்மையால் மடு பொலிஸ் நிலையம் உள்ளடங்கும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களான சுகதபால, சோமவங்ச மற்றும் மடு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குணசேகர ஆகியோரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதி மன்றம் உத்தரவிட்டது.

அதனையடுத்து அவர்கள் நீதிமன்றில் முன்னிலையாகினர். அதன்போது குறித்த பிணக்குத் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டதோடு குறிப்பிடப்பட்ட சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 26 ஆம் திகதியன்று அது தொடர்பில் பொலிஸார் மன்னார் நீதவான் நீதி மன்றில் முதல் அறிக்கையைத் தாக்கல் செய்தனர். பொலிஸார் பிரச்சினை தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்க வில்லை என்று குற்றஞ் சுமத்தப்பட்டது.

அதன்போது பொலிஸாரை எச்சரிக்கை செய்த நீதிவான் உடனடியாக சந்தேகநபர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தார். அதனையடுத்து சந்தேகநபர்கள் சட்டத்தரணிகள் மூலம் அன்றையதினமே நீதிமன்றில் சரணடைந்தனர். அவர்கள் அனைவரையும் விளக்கமறியலில்வைக்குமாறுநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் பிணை கோரி விண்ணப்பம் செய்திருந்தனர். அதனைப் பரிசீலித்த நீதிமன்று அவர்களுக்கு பிணை அனுமதி வழங்கியுள்ளது. சந்தேக நபர்கள் ஒவ்வொருவரையும் 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்ட நீதிவான் சமாதானத்தை கடைப்பிடிக்குமாறு எச்சரித்துள்ளார். மேலதிக அறிக்கை எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ச-4 - 103)

## வன்னிவிளாங்குளத்தில் ஜோதிலிங்க தரிசனம்

மல்லாவி, ஜூன் 4

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஜோதிலிங்க தரிசனம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மல்லாவி வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரிஅம்மன் கோவிலில் காலை 8 மணி முதல் மறுநாள் 7 ஆம் திகதி காலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்த ஜோதிலிங்க தரிசன நிகழ்வில் பாரதத்தின் மகிமை வாய்ந்த 12 ஜோதிலிங்கங்களில் ஒன்றான சோமசநாதர் ஆலயத்தின் ஜோதிலிங்கம் பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்படவுள்ளது.

அத்துடன் பக்தர்கள் தமது மனக் குறைகள், வேதனைகள் சுமைகளை அர்ப்பணம் செய்யும் யக்ய குண்டமும் வைக்கப்படவுள்ளது.

நாளாந்த வாழ்க்கையில் வருகின்ற மனக் குழப்பங்கள் மன அழுத்தப்பிரச்சினைகள்அனைத்துக்கும் முகம் கொடுத்து எதிர் நோக்கி சமாளிக்கும் சக்தியை அடைய வழி வகுக்கும் இராஜ யோக படவிளக்கக் கண்காட்சியும்மனசாந்திதரும்தியானஅனுபவமும்இடம்பெறவுள்ளன. (ஓ)

## வாக்காளர் பதிவுகளை வலியுறுத்தி விழிப்புணர்வு

### கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்

வாக்காளர் பதிவுகளை தவறாது மேற்கொள்ள வைப்பிக்க விழிப்புணர்வுக் கருத் தரங்கொன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.



கருத்தரங்கில் கலந்து கொண்டோர்..


யாழ்ப்பாண தேர்தல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

வாக்காளர் பதிவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற நோக்கில் வருடாந்தம் ஜூன் மாதம் முதலாம் திகதி இலங்கையில் வாக்காளர் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் கிராம மட்ட மக்களின் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி அவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு ஒவ்வொரு அதிகாரிகளும் அக்கறை காட்டிச் செயற்பட வேண்டும் என்று இந்தக் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலக அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-55)



# வெண்டிக்காய் சாப்பிட்டால் புத்திக்கூர்மை அதிகரிக்கும்



வெண்டிக்காய் அதிகமாகச் சாப்பிட்டால் புத்திக்கூர்மை அதிகரிக்கும். எந்த விடயத்தையும் தெளிவாக அணுகும் ஆற்றல் நமக்கு ஏற்படும் என்று ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.
வெண்டிக்காயில் இதயத்துடிப்பை சீராக்கும் மெக்னீசியம் என்ற வேதிப் பொருளும் உள்ளது.
வெண்டிக்காயைச் சாப்பிடுவதன் மூலம் நமது உடலுக்கு 66 கலோரி கிடைக்கிறது.
அதனாலேயே இந்தக் காய் மகத்துவம் நிறைந்ததாக திகழ்கிறது.
வெண்டிக்காயை நறுக்கும்போது பிசுபிசுவென்று ஒரு திரவம் வெளி வருவதை உணர்ந்திருப்பீர்கள். அதைச் சிலர் அறியாமல் தண்ணீரில் கழுவி விட்டு சமைப்பது உண்டு. இந்தப் பிசுபிசு திரவத்தோடு சமைத்து சாப்பிட்டால்தான் அது மூளைக்கு புத்துணர்ச்சியும், இதயத்துக்கு இதமும் தருகிறது.
காயோடு இலை, விதை, வேர் ஆகியவற்றுக்கும் ஏராள்மான மருத்துவக் குணஙகள் உண்டு. படிக்கும் குழந்தைகளுக்கு நாள்தோறும் உணவில் வெண்டிக்காயை பொடியாக நறுக்கி, வதக்கி சாப்பிடக் கொடுத்தால் நினைவாற்றல் அதிகரிக்கும்.



# பரசூட்டிலிருந்து குதித்த முதியவர்

அனுபவமிக்க வீரர் ஒருவருடன் ரால்ப், சுமார் 14,000 அடி உயரத்திலிருந்து குதித்து சாதனை படைத்துள்ளார்.

கனடாவில் முதியவர் ஒருவ்ர் பரசூட்டிலிருந்து குதித்து சாதனை படைத்துள்ளார்.
கனடாவின் ரொறன்ரோ மாகாணத்தில் ரால்ப் மெவில்லி (வயது-92) என்ற முன்னாள் இராணுவ வீரர் வசித்து வருகிறார்.
இரண்டாம் உலகப்போரில் பங்கேற்று ஓய்வு பெற்ற இந்த முதியவருக்கு, பரசூட்டில் பயணிக்க வேண்டும் என்ற ஆசையுண்டு. எனவே தமது நீண்டநாள் ஆசையை தனது பேத்தி, லூவென் வைட் என்பவரிடம் கூறியுள்ளார்.
இதனையடுத்து ரால்பிற்கு சிறிது காலம் பயிற்சி அளிக்கப்பட்டு, பின்னர் அனுபவமிக்க வீரர் ஒருவருடன் ரால்ப், சுமார் 14,000 அடி உயரத்திலிருந்து குதித்து சாதனை படைத்துள்ளார்.

# பலாப்பழத்தில் அதிக சத்துக்கள்



பலாப்பழத்தில் விற்றமின் 'ஏ' உயிர்ச் சத்து அதிகம் காணப்படுகிறது. இது உடலுக்கும், மூளைக்கும் வலுவை அளிக்கும்.

பலாச்சுளைகள் பொட்டாசியம், கல்சியம், பொஸ்பரஸ் ஆகிய உப்பு சத்துக்களும் உயிர்ச்சத்து 'ஏ' மற்றும் 'சி' யும் அதிக அளவில் கொண்டுள்ளன.
பலாப்பழத்தில் புரதச்சத்துக்களும், மாச் சத்துக்களும், விற்றமின்களும் அதிகம் காணப்படுகின்றன.
பலாப்பழத்தில் விற்றமின் 'ஏ' உயிர்சத்து அதிகம் காணப்படுகிறது. இது உடலுக்கும், மூளைக்கும் வலுவை அளிக்கும்.
மேல் தோலை மிருதுவாக்கும், பல் தொடர்பான நோய்களைப் போக்கும் ஆற்றலும் இதற்கு உண்டு. தொற்றுக்கிருமிகளை அழிக்கும் சக்தியும் இதற்கு உண்டு.

# ஆரோக்கியம் தரும் தேங்காய்

நாம் சமைக்கும் உணவு வகைகளில் தேங்காய் சேர்க்காத வகைகள் குறைவு. தேங்காயில் பல அத்தியாவசிய சத்துக்கள் அடங்கியுள்ளன. அதிக ஆற்றல் வழங்கக் கூடியது. விற்றமின்கள், தாதுக்கள் மிகுதியாக கிடைப்பதால் முழு உணவாகவே தேங்காயைச் சாப்பிடலாம்.
மனிதனுக்கு அழகும் ஆரோக்கியமும் தரும் உணவு தேங்காய். அருந்திய உடனேயே புத்துணர்ச்சியை அளிக்கக் கூடியது இளநீர். அசைவ உணவு சாப்பிடாதவர்கள், கண்டிப்பாக தேங்காயைச் சாப்பிட வேண்டும்.
ஏனெனில், தேங்காயில் கொழுப்புச் சத்து, புரதம், தாது, விற்றமின் ஈ மற்றும் நீர்ச்சத்தும் உள்ளன.
சராசரியாக 400 கிராம் உள்ள தேங்காயை சாப்பிட்டு தண்ணீர் பருகினால், இறைச்சி உண்பதற்கு நிகரான ஆற்றல் கிடைக்கும். அன்றைய தினத்துக்கு உடலுக்குத் தேவையான தாது உப்புக்கள், விற்றமின்கள் மற்றும் ஆற்றலை உடலுக்கு வழங்கிவிடும்.
அதிக அளவில் கொழுப்புச்சத்தும், புரதச்சத்தும் தேங்காயில் நிறைந்துள்ளன. ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துச் சத்துகளும் தேங்காயில் அடங்கி



உள்ளன. நீரிழிவுக்கு தேங்காய் மிகவும் பயன் தரக் கூடியது. புதிய இளநீரில் உள்ள நீரானது நீரிழிவு நோயைப் போக்க கூடியது. தாய்ப்பாலுக்கு இணையானது. தேங்காய் எண்ணெய் உடலை குளிர்ச்சியுடன் பாதுகாக்கும்.

# தலையைச் சொறிந்தால் ஞாபக சக்தி அதிகம்



மனிதன் என்ன காரணங்களுக்காக தலையைச் சொறிகிறான்? பேன் தொல்லையால் மட்டும்தானா சொறிகிறான்? இல்லை. கேட்ட கேள்விக்கு பதில் தெரியாமல் தலையைச் சொறிந்து நிற்கும் மாணவர்களைப் பார்த்திருக்கிறீர்கள் தானே? பதில் தெரியாததற்கும் தலையை சொறிவதற்கும் என்ன சம்பந்தம்? தலையைச் சொறிந்தால் மறந்து போன ஒன்று நினைவுக்கு வர வாய்ப்பிருக்கிறதா? நிச்சயம் இருக்கிறது. எமது உடல் செய்யும் எந்த ஓர் அனிச்சையான செயலுக்கும் அர்த்தம் இல்லாமல் இல்லை.
விரல்களில் அடிக்கடி சொடுக்கு எடுக்கிறோமே அது ஏன்? அது கடும் வேலைக்குப் பின்னர் உடல் அசதியை நொடிகளில் போக்கி உற்சாகத்தை வரவழைக்கும். அந்த அக்கு சிகிச்சையை நமக்கு சொல்லித் தந்தது யார்? நாடியில் விரல் வைத்து யோசிக்கிறோம். கோபத்தை அடக்கும் போது பல்லைக் கடிக்கிறோம்.
இதெல்லாம் எதற்காக? பதற்றம், எதிர்பார்ப்பு என்றால் கையைப் பிசைந்து குறுக்கும் நெடுக்கும் அலைவது எம்மிடம் இயல்பாக உள்ள பழக்கம். அந்தச் செயல் நமக்குள் எண்டார்ஃபின் என்ற பொருளைச் சுரக்கச் செய்து, ஆசுவாசப்படுத்துகிறது என்பது தெரியுமா?
அதேபோலத்தான் கை தட்டுவதும். மகிழ்ச்சியின் போதும் மற்றவர்களைப் பாராட்டவும்தான் நாம் கை தட்டுவதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். கைதட்டலின் போது உள்ளுறுப்புகளில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக, அசிட்டைல் கொலைன் என்கிற சுரப்பு சுரந்து, உடலையும் மனதையும் ஒருசேர உற்சாகப்படுத்துகிறது.
இந்த அனிச்சை செயல்கள் தவிர, நம் முன்னோர்கள் சம்பிரதாயமாகச் சொல்லி வைத்த சில மருத்துவ முறைகளும் உள்ளன. காது குத்துவது என்பது எமது அறிவுத் திறனை வளர்க்கும் விடயம்.
எனவேதான் பொய் சொல்கிறவரைப் பார்த்து, எனக்கு ஏற்கெனவே காது குத்தியாச்சு என்கிறோம். சாமி சிலையைப் பார்த்தால் கன்னத்தில் போட்டுக் கொள்கிறோம். பிறந்த குழந்தைக்கு மூன்று முறை முடி எடுப்பது ஆரோக்கியம் என்று நம்புகிறோம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 13 மீதான காதலை இந்தியா கைவிடவேண்டும்

இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைகள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க முடியாது என்பதே அரசின் நிலைப்பாடு என மீண்டும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தத்தின்கீழ் வழங்கப்பட்டிருப்பது உண்மையில் பொலிஸ் அதிகாரங்கள் இல்லை என்றபோதும், பெயரளவிலான அதிகாரத்தைக்கூட மாகாண சபைகளுக்கு - குறிப்பாக வடக்கு மாகாண சபைக்கு - வழங்குவதற்கு தயாரில்லை என்பதே அரசின் நிலைப்பாடு என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார் அமைச்சர். அரசிலுள்ள வேறு வேறு அமைச்சர்கள் எவரும் இது குறித்துத் தெரிவிக்கும் - அதாவது அதிகாரங்களைப் பகிர்வது குறித்து - கருத்துக்கள் அவர்களது சொந்தக் கருத்துக்கள் என்றும் பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதில்லை என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுவிட்டது என்றும்கூட அவர் விளக்கியிருக்கிறார். எனவே அமைச்சர் கெஹலியவின் கருத்து அரசினது அறுதியும் இறுதியுமான முடிவு என்று திட்டவட்டமாக எடுத்துக்கொள்ளலாம்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதற்கும் அப்பால் சென்று தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொடுக்கும்படி இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவிடம் வலியுறுத்தியதற்கான, அரசின் உத்தியோகபூர்வ பதிலாக இதனை எடுத்துக்கொள்ளலாம்.

தீர்வு குறித்து இந்தியப் பிரதமர் வலியுறுத்தியிருந்த விடயத்தை, அது குறித்துத் தாம் வெளியிட்டிருந்த உத்தியோகபூர்வ அறிக்கையில் ஏற்கனவே இருட்டடிப்புச் செய்து தமது எதிர்ப்பைப் பதிவு செய்திருந்தது இலங்கை அரசு. இப்போது பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்றும் சொல்லியிருக்கிறது.

பொலிஸ் அதிகாரங்களை வழங்கவில்லையாயின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் என்பது நடக்கப்போவதில்லை என்பது வெளிப்படை. ஏற்கனவே 13ஆவது திருத்தத்தின் கீழ் இணைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டமை, திவிநெகுமவின் கீழ் மாகாணங்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை, 18ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரப் பறிப்பு என்று சேடம் இழுக்கும் 13ஆவது திருத்தத்தில் இருந்து பொலிஸ் அதிகாரங்களும் நீக்கப்பட்டால் அது இறந்து போனதற்குச் சமம்.

இறந்துபோன ஒரு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் எப்படி நிகழ முடியும்? 13ஆவது திருத்தமே முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாது என்கின்றபோது அதற்கும் அப்பால் செல்வது என்ற இந்தியாவின் வற்புறுத்தல் எப்படிச் சாத்தியம்? அவை எதுவும் நடக்கப்போவதில்லை. இப்படியே போனால் இந்தியா வலியுறுத்துவதும் அதற்கு கொழும்பு காரணங்கள் கூறுவதுமாகத்தான் இனிவரும் 5 ஆண்டுகள் காலமும்கூட கடந்துபோகும்.

எனவே 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் அதற்கும் அப்பால் செல்லுதல் என்ற வட்டத்தைவிட்டு - பெட்டிக்கு வெளியே பார்த்தல் கொள்கை - புதுடில்லி உடனடியாக வெளியே வரவேண்டும். இன்று இருக்கக் கூடிய இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் இத்தகைய - புதுடில்லியும் கணிசமான அளவில் ஏற்றுக்கொண்டு தமிழர்களுக்கும் ஓரளவுக்காவது திருப்தியளிக்கக்கூடிய - தீர்வு ஒன்று சாத்தியமற்றது என்பதை இந்திய அரசியல் வழிகாட்டல் புத்திகள் உணர்ந்து புதிதான ஒன்றை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

13ஆவது திருத்தத்தில் எதுவும் இல்லை என்று தமிழர்களும் நிராகரித்த, அதில் ஏதோ இருக்கிறது என்பதாகப் பாவனை செய்துகொண்டு சிங்களவர்களும் நிராகரித்த ஒரு தீர்வுத் திட்டத்தைத் திணிப்பதனால், இரு தரப்புப் பகையையும் சம்பாதித்துக்கொள்வதைத் தவிர வேறு என்ன நன்மையைப் புதுடில்லி அடைந்துவிடப் போகிறது?

இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு 13 மீதான தனது காதலை இந்தியா புறமொதுக்கிக்கொண்டு, புதியதொரு தீர்வுத் திட்டத்தை, அரசமைப்பை இலங்கையில் ஏற்படுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகளில் மேற்கு நாடுகளையும் துணைக்குச் சேர்த்துக்கொண்டு இந்தியா இறங்க வேண்டும்.


அதற்கான முதற்படி, தமிழர் தரப்புடனான பேச்சுக்களை கொழும்பு அரசு மீண்டும் ஆரம்பிப்பது மட்டுமே. மோடி அரசு உடனடியாகச் செய்யவேண்டியதெல்லாம், இரு தரப்புப் பேச்சுக்களை ஆக்கபூர்வமானதாக முன்னெடுப்பதற்கான அழுத்தங்களையும் அதில் எட்டப்படும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தங்களையும் கொழும்புக்கு வழங்குவதுதான்.

# இளையோரை வளைத்துப் பிடிக்கும் இராஜதந்திரம் பிரதமர் மோடியிடம்

## அவரது அமோக வெற்றிக்கு காங்கிரஸும் மறைமுக உதவி

மவ்பிம, லங்காதீப பத்திரிகைகளிலிருந்து தொகுத்து வழங்குபவர் – சரா

அமோக வெற்றியின் பின்னர் மிகக் கோலாகலமாக இந்தியாவின் 15 ஆவது பிரதமராகக் கடந்த 26 ஆம் திகதி நரேந்திரமோடி பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். அவரது இந்த வெற்றிக்குக் காரணம் தீர்க்கதரிசனமும் அயராத உழைப்புமே எனக் கூறினால் அது மிகையல்ல.



குஜராத்தின் முதலமைச்சராக 13 ஆண்டுகளாக அவர் பதவி வகித்த போது இந்தியாவிலேயே குஜராத் மாநிலத்தை சகல துறைகளிலும் விசேடமாக, பொருளாதாரத்தில் முன்னிலைப்படுத்தினார். இதனை மக்கள் மிக ஆழமாக அவதானித்து வந்துள்ளனர் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. மோடி கூட இந்திய மக்களின் அவதானிப்பை மிக நன்றாகப் புரிந்து கொண்டே நாடாளுமன்றத்தின் மக்களவைத் தேர்தலில் குதித்திருந்தார். மோடி ஏனைய அரசியல்வாதிகளைப் போன்று வெறுமனே வாக்குறுதிகளை அள்ளி வீசுபவர் அல்ல என்பதையும் அவரது குஜராத் நிர்வாகத்திறன் இந்திய மக்களுக்கு உணர்த்தியிருந்தது.

இந்தியாவின் பிரதமராவதற்குத் தகுதியான- பொருத்தமான நபர் நரேந்திர மோடிதான் என்பதைத் தீர்மானித்திருந்த பாரதீய ஜனதாக் கட்சி அவரையே பிரதமர் வேட்பாளராக்கி விட்டதன் பின்னர் அவரது ஆரம்ப நகர்வு இளைய சமுதாயத்தைக் குறி வைத்திருந்தது. பல்கலைக்கழக மாணவர்களையே அவர் முதன் முதலாக சந்தித்திருந்தார். இந்தியாவின் சனத்தொகையில் 35 வயதுக்குக் குறைந்த கணிசமான தொகையினரான இளைய சந்ததியே அவரது முக்கிய குறியாகவிருந்தது.

தமக்கு இந்தியாவின் பிரதமர் பதவி கிடைக்குமாயின் இந்தியா முழுவ



திலும் குஜராத்தைப் போன்ற அபிவிருத்தியை ஏற்படுத்திவிட முடியுமென அவர் சூளுரைத்திருந்தார். ஒட்டு மொத்த இந்தியாவுடன் குஜராத் மாநிலத்தை ஒப்பிட்டு நோக்கும்போது, குஜராத்தின் தனிநபர் வருமானம், சராசரி தேசிய உற்பத்திக்கு வழங்கும் பங்களிப்பு, கல்வி, சுகாதாரம் போன்றவற்றின் உயர்வான பெறுமதி, வேலை வாய்ப்புகள், அதிகளவு தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளமை போன்ற சாதனைகளில் குஜராத் மாநிலம் முன்னிலை வகிப்பதைக் காண முடியும்.

இன்றைய இந்தியா தொழில்நுட்பம் மற்றும் கல்வியில் முன்னிலையில் உள்ளதொரு நாடாகும். இந்திய மக்கள் சமுதாயம் இன்று மிகத் தெளிவான அரசியல் ஞானத்தைப் பெற்றுள்ளது. நாட்டில் நடப்பது என்ன என்பதை அவர்களால் மிக நன்றாகவே உணர முடிகிறது. முன்னைய காலத்தைப் போன்று தேர்தல் வாக்குறுதிகளால் அவர்களை ஏமாற்றிவிட இயலாது. இந்தியாவின் இளைய சமுதாயம் மட்டுமல்லாது அனைத்து மக்களும் நாட்டில் நடப்பது என்ன என்பதை மிக நன்றாகவே அவதானிக்கின்றனர்.

எனவேதான் இந்திய மக்கள் நரேந்திர மோடியின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்தனர். நரேந்திரமோடியும் தனது கொள்கைகளை முன்வைத்து இந்தியா முழுவதிலுமுள்ள மக்களைச் சந்திப்பதற்கென மூன்று லட்சம் கிலோமீற்றர் தூரம் பயணம் செய்துள்ளார். அவர்களின் மனங்களில் இடம்பிடித்துக் கொண்டார். தனது தேர்தல் பரப்புரைகள் முடிவுற்றபோது அவர் 5,885 தடவைகள் மக்கள் முன் தோன்றியிருந்தார். அவரது அயராத, தளராத, தன்னம்பிக்கைப் பயணமே காங்கிரஸின் பாதையில் இருந்து திரும்பி மக்களை பாரதீய ஜனதாக் கட்சிக்கு வாக்களிக்கச் செய்திருந்தது.

மறுபுறத்தில் கடந்த 10 ஆண்டுகள் கால இந்திய அரசியல் நிர்வாகம் குறித்தும் சற்று ஆழமாக நோக்க வேண்டியுள்ளது. ஒரு விதத்தில் கடந்த 10 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியும்கூட மோடியின் இந்த வரலாற்று வெற்றிக்கு மறைமுகமாக பேருதவி புரிந்துள்ளது என்பதும் தெளிவு.

உள்நாட்டு அரசியல் சிக்கல்களை சாதுரியமாக வெற்றி கொண்டு பயணிக்கக்கூடிய நிலையில் காங்கிரஸ் தலைமைத்துவம் இருந்திருக்கவில்லையென்றே கூறலாம். கவர்ச்சியான புன்னகையுடன் மிக எளிமையானதொரு பெண்மணியாகத் தோற்றமளித்த இந்திராகாந்தி தம்மை இறுக்கமானவராகக் காட்டிக் கொள்ளாமலேயே இறுக்கமாகச் செயலாற்றியிருந்த பெண்மணியாவார். அந்த இந்திரா காங்கிரஸ் காலப்போக்கில் மெது மெதுவாகவே தடம் மாறிச் சென்று வலுவிழந்து போயுள்ளது. இன்று பலமான எதிர்க்கட்சியொன்றாகக் கூட செயற்பட இயலாத நிலைக்கு காங்கிரஸ் கட்சி தள்ளப்பட்டுவிட்டது.

இனி புதிய பிரதமரான நரேந்திரமோடி மீது இந்திய மக்கள் வைத்துள்ள நம்பிக்கை எந்தளவுக்குக் கட்டிக் காக்கப்படும் என்பதும் மிகப் பெரும் கேள்வியாக மாறியுள்ளது. அவர் இந்திய மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளில் மிக முக்கியமானது ஊழல்கள் இல்லாத நல்லாட்சி என்பதே. இது கடுமையானதொரு சவாலாகவே இருக்கப் போகின்றது. இந்த விடயத்தில் பெரும் அரசியல் நெருக்கடிகளையும், சோதனைகளையும் அவர் சந்திக்கக்கூடும் என எதிர்பார்க்கலாம். குஜராத் மாநிலத்தைக் கட்டியாண்டது போல் பாரதக் கண்டத்தைக் கட்டியாள்வது என்பது இலேசுப்பட்ட காரியமொன்றல்ல. இருந்தாலும் மோடியிடம் தன்னம்பிக்கையும் அரசியல் அனுபவமும் கூடவே இருப்பதால் அவரால் இந்த அரசியல் பேராற்றை நீந்திக் கரைசேர முடியும் என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்து வெளிப்பாடாகியுள்ளது. குறிப்பாக பதவியேற்ற பின்னர் நரேந்திரமோடி வெளிப்படுத்தியிருந்த கருத்துக்கள் அவர் தனது கொள்கைகளில் உறுதியாக நின்று செயற்படுவதில் இறுக்கமானவராகவும் அதே சமயத்தில் புன்சிரிப்புடன் அனைத்தையும் 'அட்ஜஸ்' செய்து கொண்டே காரியத்தைச் சாதித்துக் கொள்பவர் என்பதையும் உணர்த்தியுள்ளன எனக் கொள்ள முடிகிறது.

> குஜராத் மாநிலத்தைக் கட்டியாண்டது போல் பாரதக் கண்டத்தைக் கட்டியாள்வது என்பது இலேசுப்பட்ட காரியம் ஒன்றல்ல. இருந்தாலும் மோடியிடம் தன்னம்பிக்கையும் அரசியல் அனுபவமும் கூடவே இருப்பதால் அவரால் நீந்திக் கரைசேர முடியும் என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்து வெளிப்பாடாகியுள்ளது.

வறுமை காரணமாக தற்போது

# இலங்கையில் அதிகரித்த சிறுவர் தொழிலாளர்கள்

செல்வி.கந்தசபேசன் அர்ச்சனா,
3 ஆம் வருடம், மெய்யியல் துறை.
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

இன்றைய தென்னாசிய வளர்முக நாடுகளில் காணப்படுகின்ற பிரச்சினைகளில் ஒன்றாக சிறுவர்கள் தொழிலில் ஈடுபடல் காணப்படுகின்றது. இதற்கு வறுமையே முக்கிய காரணமாகும். அந்த வகையில் இலங்கையிலும் சிறுவர்கள் வேலையில் ஈடுபடுவது மற்றும் ஈடுபடுத்தப்படுவது மிக முதன்மையான சமூக, ஒழுக்கப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

ஐ.நா. சபையின் சிறுவர் உரிமைக்கான அமையம் சிறுவர் உரிமை தொடர்பான சாசனத்தை வெளியிட்டுள்ள போதிலும் அதில் உள்ள அனைத்து உரிமைகளும் சிறு வர்கள் அனைவருக்கும் கிடைப்பதில்லை. இது சிறுவர் சமூகமயமாக்கலில் ஏற்படும் பிரச்சினையாகும். ஜேர்மனி தேசத்தைச் சேர்ந்த சிறுவர் உள ஆய்வாளரான பிரெட்ரிக் புரோல் "சிறுவர்களின் உடல், உள ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அவர்களோடு தொடர்புடைய சமூகத்தின் பங்களிப்பு மிக முக்கியமானது" என்கிறார். குழந்தைப் பருவத்திலே தனது தாயை இழந்த இவருக்கு அதனால் ஏற்பட்ட இழப்பும், தவிப்பும், கிராமப் புறச் சூழலும் இந்தச் சிந்தனைக்கு வழிகோலியது.

ஆகவே சமூகமயமாக்கலில் இருந்து எதிர் சமூக நடத்தையை கற்றுக் கொள்ளல், ஒத்துப்போகாத நடத்தையை தவிர்த்துக் கொள்ளல், அச்சமூக நடத்தையை தவிர்த்துக் கொள்ளல் என்பவற்றில் ஏதோவொன்று அல்லது அனைத்தும் ஒரு சிறுவரின் வாழ்வியல் ஒழுக்கத்தில் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றது. மேலும் சிறுவரின் உடல், உள, ஆளுமை வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணமாக குடும்பச் சமூகச் சூழல் அமைகின்றபோது அது அந்தக் குழந்தையின் வளர்ச்சிக்கு சாதகமாக அமைகின்றது. மாறாக குடும்ப சமூக சூழலில் காணப்படும் குறைபாடுகள் அந்தச் சிறுவர்களின் உடல், உள, ஆளுமை வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இந்தப் பாதிப்பு அவர்கள் நடத்தையிலும் பாதிப்பை ஏற்படுத்தி சமூக குடும்ப தனிப்பட்ட ஒழுக்க நடத்தையில் பெரும் பாதகத்தை ஏற்படுத்துவதைக் காணமுடியும். ஆகவே சிறுவர் வறுமையும் அதனால் ஏற்படும் சிறுவர் தொழிலாளர் என்ற கட்டமைப்பையும் குறித்து ஒழுக்கவியலாளர் என்ற முறையில் சிந்திக்க வேண்டியது அவசியமாய் உள்ளது.

### சிறுவர் தொழிலும் இலங்கையும்

இலங்கையில் சிறுவர் தொழிலில் ஈடுபடுதல் என்பது ஒரு பாரம்பரியமான முறையாக இருந்த போதிலும், அது இன்று முழுநாட்டின் அபிவிருத்திக்குப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இலங்கையின் மனித வள அபிவிருத்திச் சுட்டி 97 ஆக உள்ளது. இது தென்னாசியாவின் முதலிடமாக உள்ள போதும் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் ஆள்கடத்தல், சிறுவர் தொழிலாளர் என்பன நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

உதாரணமாக இலங்கையில் ஒன்பது லட்சம் சிறுவர்



தொழிலாளர்கள் உள்ளதாக சிறுவர் மகளிர் அமைச்சு தனது 2012 ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அதில் மூன்று லட்சம் சிறுவர்கள் ஆபத்தான அல்லது பாலியல் ரீதியான தொழிலில் ஈடுபடுவதாக அந்த அறிக்கை கூறுகின்றது. இதில் 4 லட்சத்து 75 ஆயிரம் சிறுவர்கள் 15 வயதுக்கு உட்பட்டவர்கள்.

மேற்படி விகிதமானது இலங்கையின் மொத்த சிறுவர்களில் 26 வீதமாகும். அதில் பெரும்பாலானவர்கள் கிராமப் புறத்தைச் சார்ந்தவர்கள்.

மேற்படி தரவுகளை நோக்கும்போது இலங்கையிலே சிறுவர் தொழிலாளர், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன எந்தளவுக்கு ஒரு பெரியளவிலான சமூக ஒழுக்கப் பிரச்சினையாக உள்ளதென்பதைப் புரிந்து கொள் ளக்கூடியதாக உள்ளது. மேலும் தர, சமூக நிலை வேறுபாடு இன்றி அனைத்துக் குடும்பப் பிரிவுகளைச் சேர்ந்த சிறுவர்களும் குற்றச் செயலில் ஈடுபடுவதையும் காணலாம். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் சிறுவர்கள் ஒழுக்க விதிகளை மீறுவதுடன் தமது ஆசான்களுக்கு எதிராகவும் குற்றச் செயல் களில் ஈடுபடுவதைக் காண்கின்றோம். மேலும் இன்றைய நாளில் பெற்றோர்களையும், சகோதரர்களையும் சிறுவர்கள் கொலை செய்யும் அளவுக்கு நிலைமை மோசமாகவுள்ளது. ஆகவே இது நாளாந்தம் சமூகத்தில் வளர்ந்து வருகின்ற தீர்க்க முடியாத ஒழுக்கவியல் பிரச்சினையாக உள்ளது.

இலங்கையில் தமிழ், சிங்கள, இஸ்லாமியர்களுடைய பாரம்பரிய முறை யில் குருகுலக் கல்வி முறை என்று ஒன்று உண்டு. அது பெற் றோரின் தொழிலில் சிறு வர்களை ஈடுபடுத்துவதுடன் அந்தத் தொழிலில் ஈடுபடுத்துவது பெரிய குற்ற மாகக் கருதப்படவில்லை. ஆகவே சிறுவர் பெற்றோரோடு இணைந்து தொழிலில் ஈடுபட்டனர். 1930 ஆம் ஆண்டு இலங்கையில் கல்வி மேம்பாடு அவசியம் என கருதப்பட்டு வலியுறுத்தப்பட்ட பின்பு அனைத்து சிறு வர்களும் குறிப்பாக 18 வயதுக்கு உட்பட்ட சிறு வர்கள் அனைவரும் கல்வியில் ஈடுபட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

குடும்ப, சமூக சூழலில் காணப்படும் குறைபாடுகள் அந்தச் சிறுவர்களின் உடல் , உள, ஆளுமை வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இந்தப் பாதிப்பு அவர்களது நடத்தையில் பாதிப்பை ஏற்படுத்தி சமூக குடும்ப தனிப்பட்ட ஒழுக்க நடத்தையில் பெரும் பாதகத்தை ஏற்படுத்துவதை காணமுடியும்.



எனினும் 1998 ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் சிறுவர் உரிமை சட்டத்தில் இலங்கையின் பிரதிநிதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கைச்சாத்திட்டதன் மூலம் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வேலையில் ஈடுபடுத்தப்படுவது குற்றமாக இலங்கையில் சட்ட வரைபுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

### சிறுவர் தொழிலாளர்

சிறுவர் தொழிலாளர் என்பது 18 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் முழுநேரமாக ஒரு தொழிலில் ஈடுபடுவதாகும். மேலும் சிறுவர்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதும் சிறுவர் தொழில் என்று வரையறுக்கப்படுகின்றது. மானிடப் பிரிவினருக்கு அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய கல்வி, ஊட்டச்சத்து, மாண்பு, ஆளுமை வளர்ச்சிக்கான பயிற்சி, உடல் ஆரோக்கியம், பராமரிப்பு மற்றும் பொழுதுபோக்குக்கான வாய்ப்புகளில் ஏதோ ஒன்று மறுக்கப்பட்டு தொழிலில் ஈடுபடுத்தல் சிறுவர் தொழிலாகும். சிறுவர் தொழிலில் ஈடுபடுவதனால் அவர்கள் கல்வியைக் கற்பதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்படுகின்றது அல்லது இழக்கப்படுகின்றது. அவர்களுடைய ஆற்றல், ஆளுமை வளர்ச்சிகள் சுரண்டப்படுகின்றன. உடல்,உள ரீதியாக பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. சமூகத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு மதிப்பை இழக்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. எதிர்காலத்தில் சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஆரோக்கியமாக, வளமாக இருக்க வேண்டிய சந்தர்ப்பம் ஆரம்பத்தில் அழிக்கப்படுகின்றது. உடல், உயிர் ரீதியான பாதிப்புகள் ஏற்படுவதனால் அவர்களுடைய ஆயுள் காலம் குறைக்கப்படுகின்றது. அல்லது சிறுவயதிலே மரணம் ஏற்படுகின்றது.

மேற்படி காரணங்களினால் சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவது தவறென்றும் அதற்கு மேலாக சட்டரீதியான குற்றமென்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவது பெரிய குற்றமாகும்.

சிறுவர் தொழிலில் ஈடுபடுவதற்கு மிக முக்கிய காரணமாக இருப்பது சிறுவர் வறுமையாகும். சிறுவர் வறுமை சிறுவர்களுக்குரிய நல்வாழ்வில் ஏற்படுகின்ற குறைபாடுகளாகும். உதாரணமாக ஒரு சிறுபிள்ளையின் ஆரோக்கியமான நல்வாழ்வுக்கு அமைய வேண்டிய சுற்றுச் சூழல், கலாசாரம், கல்வி, ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றில் ஒன்றோ அல்லது அனைத்துமோ கிடைக்காமல் விடுவது சிறுவர் வறுமை ஆகும். சிறுவர் வறுமை என்பதைப் புரிந்து கொள்வதற்கு மூன்று முக்கியமான பகுப்பாய்வு அம்சங்கள் காணப்படுகின்றன.

**1. மறுத்தல்**

மறுப்பு என்பது ஒரு சிறுவருக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகளான உணவு, உடை, பாதுகாப்பான நீர், ஆரோக்கியம், கல்வி என்பதாகும். இவை கட்டாயம் கிடைக்க வேண்டும். அவை அது கிடைக்காதபோது அது மறுத்தல் எனப்படும்.

**2. புறந்தள்ளல்**

புறந்தள்ளல் என்பதை ஒரு சிறுவருடைய வளர்ச்சிப் பருவத்தில் அவருடைய ஆளுமை, உணர்வுகளுக்கு சமூகத்தால் கிடைக்கப்பட வேண்டிய ஒத்துழைப்புக்களிலிருந்து புறந்தள்ளப்படுவதாகும்.

**3. பாதிப்புக்கு உள்ளாகும் நிலை**

சிறுவர் வாழும் வளரும் பருவத்தில் அவருக்கான உயிர் வாழ்வதற்கு அவருக்கு முழு உரிமை உண்டு ஆனால் இன, மத, சாதிய மற்றும் பால்நிலை பாகுபாடுகளினால் சிறுவர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது.

உதாரணமாக இனத்துக் கெதிராக போர் நடைபெறுகின்றபோது சிறுவர் உயிரும் பறிக்கப்படுகின்றது. ஆணா திக்கம் நிறைந்த சமூகத்தில் சிறுமிகள் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே வறுமை சிறுவர் துஷ்பிரயோகத்துக்கும் சிறுவர் தொழிலில் ஈடுபடுவதற்கும் முக்கிய காரணமாக அமைகின்றது. மேலும் குடும்பச் சிதைவு ,நல்லா ளுகை அற்ற அரசியல் சமூக கட்டமைப்பு, விழிப்பு[illegible]ர் வற்ற சமூகம் என்பன சிறுவர் தொழி[illegible]ல் ஈடுபடுவதற்கு இதர காரணிகளாக அ[illegible]ம கின்றன.


சிறுவர் உரிமை தொடர்பான சட்டம் உ[illegible]ா போதிலும் அது முறையான வித[illegible]ல் அனைத்து தரப்புகளாலும் நடைமுறை[illegible]த் தப்படுகின்ற போது மேற்படி பிரச்சினை[illegible]கு முடிவு காண முடியும்.

ஆயினும் இன்று அரசியலில் உள்ள மு[illegible]ன பாடுகள் மற்றும் கல்வி, சமூக, சிறு[illegible]ர் துறைசார் உத்தியோகத்தர் களின் அக்[illegible]ற யின்மை, முதலாளிவர்க்கத் தின் ப[illegible]ச் செல்வாக்கு, ஏழை பாமர மக்களின் [illegible]ய லாமை என்பன சிறுவர்கள் துஸ் பிர யோ[illegible]ம், சிறுவர் தொழிலில் ஈடுபடல் என்பன நா[illegible]த நாள் அதிகரிக்க காரணமாக அமைகின்[illegible]ன. இன்றைய கல்வி அமைச்சு இது தொடர்[illegible]ன விழிப்புணர்வை முன்னெ டுத்து வ[illegible]து சிறப்பான அம்சமாகும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். எனவே சிறுவர்கள் தொழிலாளிகளாவதை எமது நாட்டிலிருந்து ஒழிக்க எம்மாலான பங்களிப்புகளை நல்குவோம்.



# நரேந்திர மோடிக்கு உதவுகிறார் ஒபாமா


நரேந்திர மோடி


ஒபாமா

புதுடில்லி, ஜூன் 04
ஒபாமா தலைமையிலான அமெரிக்க அரசு, இந்திய விமானத் துறையின் தரக் குறியீடு தொடர்பான பிரச்சினைக்கு உதவ முன்வந்துள்ளது.
இந்திய விமானப் போக்குவரத்தில், தரைக் கட்டுப்பாட்டுப் பொறியியலாளர்கள், விமானப் பயண ஆய்வாளர்கள் ஆகியோர் போதிய அளவு இல்லை என்பது உள்ளிட்ட அம்சங்களைச் சுட்டிக் காட்டிப் பாதுகாப்பான விமான சேவைக்கான தரக் குறியீட்டை அமெரிக்க விமான போக்குவரத்துத் துறை குறைத்துள்ளது.
இந்த நடவடிக்கையால், எயார்-இந்தியா, ஜெட் எயார் வேஸ் நிறுவனங்கள், அமெரிக்காவுக்குப் புதிய விமான சேவைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
அது மட்டுமன்றி, ஐரோப்பிய கூட்டமைப்பு, ஜப்பான், மற்றும் இதர முன்னேறிய நாடுகளும், இந்தியாவின் பாதுகாப்பான விமான சேவை தொடர்பான தரக் குறியீட்டைக் குறைக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.
இதையடுத்து, அமெரிக்க விமான போக்குவரத்துத் துறை, சுட்டிக்காட்டிய இரு முக்கிய அம்சங்களை பூர்த்தி செய்யும் நோக்கில், முதற்கட்டமாக, 35 ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக, விமான போக்குவரத்து தலைமை இயக்குரகம் அமெரிக்க விமான போக்குவரத்து துறைக்கு கடிதம் எழுதியுள்ளது.
அதில், தரக் குறியீட்டை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது.
இதனிடையே, இப்பிரச்சினை தொடர்பாக, இந்திய விமான துறைக்கு உதவ, அமெரிக்க விமான போக்குவரத்து துறை முன்வந்துள்ளது.
இதற்காக, அமெரிக்க வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு முகாமையின் நிதியுதவியில், டி.டபிள்யு.ஜி., என்ற தனியார் ஆலோசனை நிறுவனம் அமர்த்தப்பட்டுள்ளது.
இந்திய விமான போக்குவரத்தில் பாதுகாப்பு சார்ந்த ஆலோசனைகளை, இந்நிறுவனம் ஓராண்டுக்கு வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## பள்ளிச் சிறுவனைப் போல் நவாஸை நடத்தியது இந்தியா

### இம்ரான் கான் கண்டனம்


நவாஸ் ஷெரீப்

இஸ்லாமாபாத், ஜூன் 04
மோடி பதவி ஏற்பு விழாவுக்கு வந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை, இந்தியா பாடசாலைச் சிறுவனைப் போல் நடத் தியதாக இம்ரான் கான் கருத்து தெரிவித்துள்ளார்.
இந்தியாவின் 15ஆவது புதிய பிரதமராக கடந்த மாதம் 26ஆம் திகதி நரேந்திர மோடி பதவி ஏற்றார். அந்த விழாவில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் பங்கேற்றார்.
பதவியேற்பு விழாவைத் தொடர்ந்து இரு நாட்டுத் தலைவர்களும் நேரில் சந்தித்துப் பேசினர். அப்போது காஷ்மீர் பிரச்சினை,எல்லை தாண்டும் தீவிரவாதம்குறித்தும், அவற்றை ஒடுக்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.
ஆனால், காஷ்மீர் பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. மேலும் ஹூரியத் மாநாட்டு தலைவர்களையும் நவாஸ்ஷெரீப் சந்திக்கவில்லை.
இந்நிலையில், இந்தத் தகவலைப் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாதுகாப்பு செயலாளரும், வெளியுறவுத் துறை ஆலோசகருமான சர்தாஜ் அஷீஷ் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.
அவர் கூறுகையில், இதுபோன்ற விழாவில் முதன் முறையாக பாகிஸ்தான் பிரதமர் கலந்து கொண்டது மிகவும் பரபரப்பான சம்பவமாகும் என்று தெரிவித்துள்ளார். அதை தொடர்ந்து நவாஸ் செரீப்பின் இந்திய பயணத்துக்கு முன்னாள் கிரிக்கட் வீரரும் பாகிஸ்தான் தெக்ரீக் இஇன் சாப் தலைவருமான இம்ரான் கான் கண்டனம் தெரிவித்துள்ளார்.
இது பற்றிக் கருத்து தெரிவித்துள்ள அவர், டில்லி சென்ற பிரதமர் நவாஸ் ஷெரீப் இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். அதே நேரத்தில் ஹூரியத் மாநாட்டுப் பிரதிநிதிகளை அவர் சந்திக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (த)



## இந்திய மாம்பழத்தை சோதிக்க வருகின்றது ஐரோப்பியக் குழு

புதுடில்லி, ஜூன் 04
மாம்பழ ஏற்றுமதிக்கான தடையை நீக்க ஐரோப்பிய நிபுணர்கள் இந்தியா வருகின்ற னர்.
ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மாம்பழங்கள் அடங்கிய சில பெட்டிகள் பாதிக்கப்பட்டமை பிரஸ்ஸல்சில் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து இந்த ஆண்டு மே மாதம் முதல் மாம்பழ ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை உத்தரவினால் இந்திய மாம்பழ வியாபாரிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் திவாலாகும் நிலைமை யில் உள்ளனர். இங்கிலாந்தின் வர்த்தகமும் பெரும்நட்டத்தைச்சந்தித்துள்ளது.
இந்தத் தடை அடுத்த ஆண்டு வரை தொடர்ந்தால் இது இந்தியா-ஐரோப்பிய ஒன்றியத்தின் உறவுகளைச் சீர் குலைக்கும்.
இந்தத் தடை உத்தரவு அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதம் வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந் தத் தடை உத்தரவை விலக்க பிரிட்டிஷ் நாடாளு மன்றத்தின் உறுப்பினரான கெய்த் வாஸ் பெரும் முயற்சி செய்து வருகின்றார். கடந்த புதன் கிழமை அன்று பிரஸ்ஸல்ஸ் சென்றிருந்த அவர் இந்தத்தடை விடயமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் விவசாயத்துறை ஆணையாளரான டசியன் சியலோசையும் மற்ற மூத்த அதிகாரிகளையும் சந்தித்தார். இதன் விளைவாக ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டக் குழு எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் இந்தியாவருகைதரஉள்ளது. (த)

## மோடிக்கு எதிராக பேஸ்புக் கருத்து

### பொலிஸார் விசாரணை

புதுடில்லி, ஜூன் 04
பேஸ்புக்கில் மோடிக்கு எதிராக அவதூறாகப் பதிவு செய்ததாகப் புகார் எழுப்பப்பட்ட தேவு சோதங்கர் என்பவரிடம் 7 மணி நேரத்துக்கு மேல் கோவா பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.
சைபர் கிரைம் பிரிவில் முன்னிலையான சோதங்கரை அவரது வழக்கறிஞர் முன்னிலையில் பொலிஸ் உயரதிகாரி கார்த்திக் காஷ்யப் விசாரணை செய்துள்ளார்.
இதற்கிடையே சோதங்கர் மீது விசாரணை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்த சமூக ஆர்வலர்கள் பொலிஸ் நிலையத்தில் கூடியுள்ளனர்.
விசாரணைக்குப் பிறகு வெளியே வந்த சோதங்கர், சட்ட நடைமுறைப்படுத்தல் பிரிவின் மீது தனக்கு முழு நம்பிக்கை இருப்பதாகவும், அவரது பேஸ்புக் கருத்துக்கள் அரசியல் சட்டத்தை அவமரியாதை செய்தவர்களுக்கு எதிரானதே என்று தெரிவித்துள்ளார்.
அவரது வழக்கறிஞர் செய்தியாளர்களிடம் கூறுகையில்; ஶ்ரீராம் சேனா தலைவர் பிரமோத் முதாலிக் பா.ஜ.கவில் சேர்க்கப்பட்டதை அடுத்து சோதங்கர் பேஸ்புக்கில் தனது பதிவை வெளியிட்டார்.
ஆனால் கட்சியில் அவருக்கு இடமில்லை என்று தெரிந்தவுடன் தனது பதிவை உடனே நீக்கிவிட்டார்.
மேலும் சோதங்கர் தலைமறைவாகி விடவில்லை, அவர் விசாகப்பட்டிணத்தில் கடமை நிமித்தமாகச் சென்றிருந்தார் என் றும், பொலிஸாரிடம் தான் முன்னிலைப்படுத்துவதற்கு கால அவகாசமும் வழங்கியிருந்தார் எனவும் தெரிவித்துள்ளார். (த)

## ஜூன்- 9 ஜெயலலிதாவை முன்னிலையாக உத்தரவு


ஜெயலலிதா

சென்னை, ஜூன் 4
வருமான வரி கணக்கை தாக்கல் செய்யாத வழக்கில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலாவும் ஜூன் 9ஆம் திகதி முன்னிலையாக, சென்னை - எழும்பூர் பொருளாதார குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த 1991 -92 மற்றும் 1992-93 ஆகிய நிதியாண்டுகளில் சசி எண்டர்பிரைசஸ் நிறுவனம் வருமான வரிக்கணக்கு தாக்கல் செய்யவில்லை என்று கூறி அதன் பங்குதாரர்களான ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோருக்கு எதிராக வருமான வரித் துறையினர் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.
இந்த வழக்குகளுக்கு எதிராக ஜெயலலிதா தாக்கல் செய்த மேன்முறையீடுகள் சென்னை உயர் நீதிமன்றம் நிராகரித்தது. அதன் தொடர்ச்சியாக உச்ச நீதிமன்றத்தில் முறையிடப் பட்டது.
வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், வருமான வரி கணக்கை தாக்கல் செய்யாதது குற்றம் என்று கூறி, இந்த வழக்கை நான்கு மாதங்களுக்குள் விசாரணையை நடத்தி தீர்ப்பை வழங்க கடந்த ஜனவரியில் உத்தரவிட்டது.
இந்த நிலையில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலாவும் ஏப்ரல் 3ஆம் திகதி முன்னிலையாகச், சென்னை - எழும்பூர் பொருளாதார குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டது.
ஆனால், நாடாளுமன்ற தேர்தல் பரப்புரையைச் சுட்டிக்காட்டி நேரில் முன்னிலையாவதில் இருந்து விலக்குஅளிக்கப்பட்டது. தேர்தல் நேரம் என்பதால் இப்போது முன்னிலையாக உத்தரவிட முடியாது என்று கூறிய நீதிபதிகள், தேர்தல் முடிந்ததும் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட வழக்கில் தொடர்புடையவர்கள் கண்டிப்பாக நீதிமன்றத்தில் முன்னிலையாகவேண்டும் என உத்தரவிட்டனர்.
அதன் பின்னரும், ஜெயலலிதா, சசிகலா முன்னிலையாகவில்லை. இந்நிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலாவும் ஜூன் 9ஆம் திகதி முன்னிலையாக, சென்னை - எழும்பூர் பொருளாதார குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டது. (த)

# இந்திய அமைச்சர் கோபிநாத் கார் விபத்தில் நேற்றுச் சாவு

### விமான நிலையம் சென்றுகொண்டிருந்தவேளை


கோபி நாத்

புதுடில்லி, ஜூன் 04
இந்தியாவின் ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர், கோபிநாத் முண்டே, டில்லியில் நேற்றுக் காலை நடந்த கார் விபத்து ஒன்றில் கொல்லப்பட்டார்.
அவருக்கு வயது - 64.
கடந்த வாரம்தான், நரேந்திர மோடி அமைச்சரவையில் அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட முண்டே, தனது சொந்த மாநிலமான மஹாராஷ்டிரா செல்ல டில்லி விமான நிலையத்துக்குக் காரில் சென்று கொண்டிருந்தபோது, அவரது கார், எதிரில் வந்த மற்றொரு காருடன் நேருக்கு நேர் மோதியதில், அவர் இறந்தார்.
டில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டபோது, அவருக்கு செயற்கைச் சுவாசம் தந்து உயிர்ப்பிக்க மருத்துவர்கள் எடுத்த முயற்சிகள் பயன் அளிக்கவில்லை.
முண்டேயின் சாவு குறித்து பிரதமர் மோடி டுவிட்டரில் தனது வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார். முண்டே ஒரு மக்கள் தலைவர், பிற்படுத்தப்பட்ட சமூகத்திலிருந்து வந்த அவர், பெரிய அளவுக்கு வாழ்க்கையில் உயர்ந்தார் என்று மோடி கூறியிருக்கிறார்.
கோபிநாத் முண்டே 1995-1999 கால கட்டத்தில் மஹாராஷ்டிர மாநிலத் துணை முதல்வராகவும் இருந்தவர். இரண்டு முறை (2009,2014) நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.
மறைந்த பா.ஜ.க தலைவர் பிரமோத் மஹாஜனுடைய மைத்துனன் தான் கோபிநாத் முண்டே என்பது குறிப்பிடதக்கது.
பொது மக்கள் அஞ்சலி செலுத்துவதற்கு ஏதுவாக அவரது உடல் பா.ஜ.க தலைமையகத்தில் வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது மறைவுக்கு பல தலைவர்களும் அரசியல் கட்சிகளும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (த)

# லிபிய மோதலில் 21 பேர் சாவு

திரிபோலி, ஜூன் 04
லிபியாவின் பெங்காஷி நகரில் ராணுவப் படையினருக்கும் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது ராணுவத்தினர் வான்வழியே குண்டு வீசித் தாக்கியதில் 21 பேர் கொல்லப்பட்டனர்.

வட ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான லிபியாவில், ராணுவத்துக்கும் இஸ்லாமிய கிளர்ச்சியாளர் அமைப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து வெடித்த சமரில் அந்நாட்டு ராணுவப்படை விமானத்திலிருந்து குண்டுகளை வீசித் தாக்கியது. இதில் ருஹூர், ஒன்பாத், சிதி பராக் ஆகிய இஸ்லாமிய அமைப்பினர் 21 பேர் உயிரிழந்தனர்.

இந்த உயிரிழப்பு எண்ணிக்கை உறுதி செய்யப்படாத நிலையில், இவை மேலும் அதிகரிக்கலாம் எனத் தகவல் வெளியாகி உள்ளது. மேலும் இந்தத் தாக்குதலில் 110 பேர் படுகாயமடைந்துள்ளனர். (த)

# ஐரோப்பிய ஒன்றியத்தை மிரட்டுகின்றார் கமரூன்

## ஜேர்மனியின் வெற்றியால் அதிருப்தி

லண்டன், ஜூன் 04
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளார்.

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட 28 நாடுகள் இணைந்து, ஐரோப்பிய ஒன்றியம் என்ற பொதுவான அமைப்பின் நாடாளுமன்றம் பெல்ஜியம் நாட்டின் தலைநகர் புருஸல்ஸ் நகரில் செயல்பட்டு வருகிறது.



டேவிட் கமரூன்

கடந்த வாரம் இங்கு நடைபெற்ற தேர்தலில், ஜேர்மனியின் ஜனாதிபதி ஏஞ்சலா மேர்கல் தலைமையிலான, 'கிறிஸ்ரியன் டெமோகிராட்ஸ்' அணியினர் மொத்தமுள்ள, 751 இடங்களில், 213 இடங்களைப் பிடித்து அமோக வெற்றி பெற்றுள்ளனர். ஜேர்மனியின் இந்த வெற்றி காரணமாக அதன் ஆதிக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிகமாகத் தொடர்ந்தால் பிரிட்டன் கடும் அதிருப்தி அடைந்துள்ளது. இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றிய ஆணையத்தின் தலைவராக, லக்சம்பேர்க் நாட்டி[...] முன்னாள் பிரதமர் ஜீன் க்ளா[...] ஜங்கர் பெயரை, ஜேர்மனிய[...] ஜனாதிபதி ஏஞ்சலா மோர்க[...] இரண்டு நாள்களுக்கு மு[...] அறிவித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள பிரிட்டன் பிரதமர் டேவிட் க[...] ரூன், ஐரோப்பிய ஆணை[...] கத் தலைவராக ஜங்கர் நி[...] மிக்கப்பட்டால், ஐரோப்பி[...] ஒன்றியத்திலிருந்து பிரிட்ட[...] விலக நேரிடும் எனத் தெரிவி[...] துள்ளார்.

இதேபோல் சுவீடன் மற்று[...] ஹங்கேரி நாடுகளின் தலை[...] வர்களும், ஜங்கருக்கு எதிர்[...] தெரிவித்துள்ளனர். (த)

# சூரிய சக்தி விமானம் வெற்றிகரச் சோதனை


சூரிய சக்தியில் இயங்கும் விமானம்

பேர்ன், ஜூன் 04
சூரிய சக்தியில் இயங்கும் விமானம் ஒன்று அடுத்த ஆண்டு உலகைச் சுற்றி பறக்கவிருக்கின்ற நிலையில், பரிசோதனை வெள்ளோட்டமாக சுவிட்ஸர்லாந்தில் அந்த விமானம் முதல் முறையாகப் பறக்கவிடப்பட்டுள்ளது.

சென்ற வருடம் அமெரிக்காவின் குறுக்காகப் பறந்த சோலார் இம்பல்ஸ் 1 என்ற விமானத்தின் பெரிய மற்றும் மேம்பட்ட வடிவம் தற்போது உருவாக்கப்பட்டுள்ள இந்த சோலார் இம்பல்ஸ் 2 விமானம் ஆகும்.

வடிவ முன்மாதிரியான இந்த விமானம் ஏற்கனவே பல உலக சாதனைகளை செய்துள்ளது.

மனிதரைச் சுமந்து தொடர்ந்து நெடுந்தூரம் பறந்த சூரிய சக்தி விமானமாக 26 மணி நேரம் இந்த விமானம் பறந்துள்ளது.

மாற்று ஆதார எரிசக்தியின் எல்லைகளை விரிவாக்கத் தூம் விரும்புவதாக இந்த விமானத்தின் விமானிகள் கூறுகின்றனர்.

கரிம இழைகளால் உருவாக்கப்பட்டுள்ள இந்த விமானத்தின் இறக்கைகள் போயிங் 747 ரக விமானத்தின் இறக்கைகளை விட அகலமானவை என்றாலும், இந்த விமானத்தின் எடையோ ஒப்பீட்டளவில் மிக மிகக் குறைவு. (த)


சிரியாவின் ஜனாதிபதித் தேர்தல் நேற்று நடைபெற்றது. இதன்போது சிரிய ஜனாதிபதி பஷார் ஆஸாத் வாக்களிப்பு நிலைய[...]மொன்றில் தனது வாக் கினை அளிக்கிறார். (த)

## ஜிகாத் குழு கைது



பரிஸ், ஜூன் 04
சிரியா உள்நாட்டு போரில் ஈடுபட்டதாகக் கூறி ஜிகாத் குழுவை சேர்ந்த 4 நபர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

பிரான்ஸ் தலைநகரான பரிஸில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 4 நபர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து பிரான்ஸ் உள்துறை அமைச்சர் கூறுகையில், தீவிரவாதிகளுக்கு எந்தவித வாய்ப்புகளும் கொடுக்கமாட்டோம் எனத் தெரிவித்துள்ளார். மேலும் கடந்த 30ஆம் திகதி அன்று யூத அருங்காட்சியத்தில் தாக்குதல் நடத்திய நபரைக் கைது செய்தோம். இவரும் சிரியாவில் ஒரு வருட காலமாக ஜிஹாத் குழுவில் போர் வீரராக இருந்தார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 700க்கும் மேற்பட்ட பிரான்ஸ் குடிமக்கள் சிரியா சென்றுள்ளதாகவும், இவர்கள் தான் தற்போது தாக்குதல் நடத்துவதாகவும் கூறியுள்ளார். (த)

# இஸ்லாமாபாத்தில் மாநாடு புறக்கணிக்கின்றது ஆப்கான்

காபூல், ஜூன் 04
இஸ்லாமாபாத்தில் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள பிராந்திய பாதுகாப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என்று ஆப்கானிஸ்தான் அறிவித்துள்ளது.

ஆப்கன் அதிபர் ஹமீத் ஹர்சாய் தலைமையில் அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் காபூலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதுபற்றி, அதிபர் மாளிகை வெளியிட்டிருந்த அறிக்கையில், ஆப்கானிஸ்தான் மீதான பாகிஸ்தான் ராணுவத்தின் அதிகரித்துவரும் ரொக்கெட் தாக்கு தலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஜூன் 14ஆம் திகதி நடைபெறவுள்ள அதிபர் தேர்தலுக்கான இரண்டாம் கட்டத் தேர்தலைச் சீர்குலைக்கும் வகையில் பாகிஸ்தான் இந்தத் தாக்குதல்களை நிகழ்த்தி வருகிறது.

இது தொடர்பான நாட்டின் கவலை குறித்து ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் வாயிலாக பாகிஸ்தான் அரசுக்கு எடுத்துரைக்கப்படும். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இன்று இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ள பிராந்தியப் பாதுகாப்பு உச்சி மாநாட்டில் ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகள் பங்கேற்கமாட்டார்கள்.

> “ஆப்கானிஸ்தான் மீதான பாகிஸ்தான் ராணுவத்தின் அதிகரித்துவரும் ரொக்கெட் தாக்கு தலை வன்மையாகக் கண்டிக்கிறோம். இரண்டாம் கட்டத் தேர்தலைச் சீர்குலைக்கும் வகையில் பாகிஸ்தான் இந்தத் தாக்குதல்களை நிகழ்த்தி வருகிறது.

பாகிஸ்தானின் செயல்களுக்கு அமெரிக்கா இதுவரை எந்தவித ஆட்சேபமும் தெரிவிக்காமல் அமைதி காத்து வருகிறது. இது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால ஒப்பந்தங்களை அமெரிக்கா மீறியுள்ளது என்பதைத்தான் காட்டுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# நைஜீரிய மைதானத்தில் பெரும் குண்டு வெடிப்பு

## 40 பேர் சாவு

கிவி, ஜூன் 04
ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் உதைபந்தாட்ட மைதானத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 40 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து பொலிஸார் கூறியதாவது:-

நைஜீரியாவின் வடக்குப் பகுதியிலுள்ள ஆடமாவா மாகாணத்தின் முபி நகரில் உள்ள உதைபந்தாட்ட மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதில் 40 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

உள்ளூர் அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியைப் பார்த்து விட்டு வெளியே வரும் ரசிகர்களை குறி வைத்து இந்தக் குண்டு வெடிப்பை தீவிரவாதிகள் நிகழ்த்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் உதைபந்து வீரர்கள் யாரும் உயிரிழந்தனரா என்பது உடனடியாகத் தெரியவில்லை. ஆனால், உயிரிழந்தவர்களில் பலர் ரசிகர்கள் என்று தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கமரூன் எல்லையையொட்டிய இதே பகுதியில் 2012ஆம் ஆண்டு கல்லூரி ஒன்றில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் ஏராளமான மாணவர்கள் உயிரிழந்தனர். கடந்த ஏப்ரல் மாதம் இரு இத்தாலியப் பாதிரியார் மற்றும் ஒரு கன்னியாஸ்திரியை போகோ ஹராம் தீவிரவாதிகள் கடத்திச் சென்றன[...] அவர்கள் 3 பேரும் மாரோவ[...] நகர் அருகே ஞாயிற்றுக்கிழமை[...] விடுவிக்கப்பட்டதாகத் தகவ[...]கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, நைஜீரிய[...] தலைநகர் அபுஜாவில் செய்[...] யாளர்களிடம் ராணுவச் செ[...]தித் தொடர்பாளர் கிறிஸ் ஒலு[...] கோலாடே கூறுகையில், குண்டு வெடிப்புக்கு முக்கிய காரண[...]மாகச் சந்தேகிக்கப்படும் நப[...] ஒருவரை ராணுவ வீரர்க[...] கைது செய்தனர். குண்டு வெடி[...] நிகழ்ந்த இடத்தில் இருந்து தப்[...] ஓட முயன்றபோது அந்த நப[...] சுற்றி வளைக்கப்பட்டார்" என[...]றார். (த)

# ஒருங்கிணைந்தது பலஸ்தீனம்

காஸா, ஜூன் 04
பலஸ்தீனத்தின் மேற்குக் கரை, காஸா பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த அரசு பொறுப்பேற்றது.

பலஸ்தீனப் பகுதிகளான மேற்குக்கரை, காஸா ஆகியவை கடந்த 7 ஆண்டுகளாக தனித் தனி நிர்வாகங்களின் கீழ் இருந்தன.

காஸா பகுதியில் ஹமாஸ் தீவிரவாத அமைப்பும், மேற்குக் கரை பகுதியில் அதிபர் மெஹ்மூத் அப்பாஸின் பதாஹ் கட்சியும் ஆட்சி நடத்தி வந்தன. இந்த இரு நிர்வாகங்களும் தொடர்ந்து பேச்சு நடத்தியதன் விளைவாக கடந்த ஏப்ரல் மாதம், ஒருங்கிணைந்த அரசை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி பலஸ்தீனத்தின் அனைத்துப் பகுதிகளுக்கு[...] உள்ளடக்கிய பிரதமராக ர[...] ஹம்தல்லா கடந்த திங்க[...] கிழமை பதவியேற்றுக்கொண்[...]டார். அவருக்கு அதிபர் மஹ்மூ[...] அப்பாஸ் பதவிப் பிரமாண[...] செய்து வைத்தார். 13 அமை[...]ச்சர்களும் பதவியேற்றுக்கொண்[...]டனர். (த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: பக்தியில் நாட்டம் ஏற்படும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை தீரும். உதவிகளைச் செய்து மனத் திருப்தி அடைவீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி திருப்தி நிலவும்.

**இடபம்**: வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாள்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

**மிதுனம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள். குழந்தைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சி தரும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள்.

**கடகம்**: வியாபாரத்துக்குத் தேவையான பண உதவி கிடைக்கும். தொழில் போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வாக்குவன்மையால் காரிய வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்**: நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முயல்வீர்கள். உத்தியோகத்தில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் விலகும். நீண்ட நாள்களாக முடிக்க முடியாமல் இருந்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி**: தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். தொழில் விரிவாக்கம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் இருந்த பிரச்சினை குறையும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். திருமண காரியங்கள் கைகூடும்.

**துலாம்**: தடைப்பட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அதனால் நன்மை உண்டாகும். உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும்.

**விருச்சிகம்**: அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். மற்றவர்கள் மூலம் உதவி கிடைக்கும். தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு**: குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடைநீங்கி சாதகமாக நடந்து முடியும். குழந்தைகளின் எதிர்கால கல்வி தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தேவையற்ற மருத்துவ செலவு ஏற்படக்கூடும். வீடு, பூமி மூலம் வரவேண்டிய வருமானம் தாமதப்படலாம்.

**மகரம்**: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர் கள் வீண் அலைச்சலையும் காரிய தாமதத்தையும் சந்திக்க வேண்டி இருக்கும். தொழில் வியாபாரப் போட்டிகள் குறையும்.

**கும்பம்**: வெளியூர் பயணங்களின்போது கவனம் தேவை. அடுத்தவர்களுக்காக பொறுப்புகளை ஏற்கும்போது ஒரு முறைக்கு பலமுறை யோசித்து முடிவு எடுப்பது நல்லது. புதிய நபர்களிடம் எச்சரிக்கை தேவை. மனதில் தைரியம் தன்னம்பிக்கை உண்டாகும்.

**மீனம்**: பலவகையிலும் பிறர் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். புத்தி சாதுரியம் அதிகரிக்கும். யாருக்கும் வாக்குறுதிகள் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பது வீண்பழி ஏற்படாமல் தடுக்கப்படும்.

## நாளை

**வைகாசி-22 வியாழக்கிழமை | 05.06.2014**

திதி: ஸப்தமி மு.ப.11.12 வரை
நட்சத்திரம்: மகம் மு.ப.09.11 வரை
சுபநேரம்: 07.22-08.52 வரை
இராகுகாலம்: 01.22-02.52 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### செயல்முறை வேதாந்தம்-3

நான் உங்களுக்கு மற்றொரு பகுதியைப் படிக்கிறேன். இதில் சுவேதகேது தனது தந்தையிடம் உண்மை என்பதைப் பற்றிப் பல கேள்விகள் கேட்கிறான். தந்தையும் பலவிதமான விடயங்களைப் பற்றிக் கூறி விட்டு முடிவாக, "எல்லாப் பொருள்களிலும் நுண்ணிய காரணமாக இருப்பது எதுவோ அதனாலேயே அனைத்தும் ஆக்கப்பட்டிருக்கின்றன. அதுவே எல்லாமாக இருக்கிறது ஓ சுவேத கேது அதுவே உண்மை, நீ அதுவாகவே இருக்கிறாய்" என்றார். பிறகு பலவிதமான உதாரணங்களைக் கூறினார்– "ஓ சுவேத கேது, தேனீ பலவிதமான பூக்களிலிருந்து தேனைச் சேகரிக்கிறது. அந்தத் தேனுக்கு, தாங்கள் பலவிதமான பூக்களிலிருந்தும், பலவிதமான மரங்களிலிருந்தும் வந்தவை என்பது தெரியாது. அது போலவே, மூலப் பரம்பொருளிலிருந்து தோற்றத்துக்கு வந்த நமக்கு, நாம் எப்படி வந்தோம் என்பது தெரியாது. அந்த மிக நுண்ணிய சுப் பொருளிலேயே அனைத்தும் இருக்கின்றன. இதுவே உண்மை அதுதான் ஆன்மா, ஓ சுவேத கேது, அதுவே நீ" என்றார். அவர் மற்றொரு உதாரணத்தையும் கூறினார். எல்லா நதிகளும் கடலில் கலந்த பிறகு அவை தாங்கள் தனித் தனியான நதிகள் என்பதை உணர்வதில்லை. அது போலவே, நாமும் தோற்றத்துக்கு வந்த பிறகு முதலில் இருந்த நிலையை அறிவதில்லை ஓ சுவேத கேது, நீ அதுவாகவே இருக்கிறாய்" இவ்வாறு அவரது உபதேசங்கள் தொடர்ந்தன.

## நிலவில் அமையவுள்ள முதல் வீடு



சுவீடன் கலைஞர் ஒருவர் நிலவில் தரையிறங்கியதும் சுயமாக வடிவமைத்துக் கொள்ளும் வீட்டை உருவாக்கி வருகின்றார்.

கடந்த 2003 ஆம் ஆண்டில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த கலைஞரும் தொழிலதிபருமான மைக்கேல் ஜென்பர்க் என்ற நபர் நிலவில் வீடு அமைக்கும் பணியை ஆரம்பித்துள்ளார்.

பலரால் நிதியுதவி பெறப்பட்டு வந்த இந்த பணி கடந்த 2010 ஆம் ஆண்டில் பொருளாதார பிரச்சினையின் காரணமாக பணியைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

ஆனால் தற்போது மீண்டும் தொடர்ந்து இடம்பெறும் இந்த வீட் டின் உருவாக்கம் சுமார் 75 சதவீதம் முடிந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

கார்பன் கட்டமைப்பின் மீது இதற்கெனத் தயாரிக்கப்பட்ட சிறப்பு துணி கொண்டு இந்த வீடு உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் நிலவில் சென்று இறங்கியவுடன் வாயுவால் இந்த கூடாரத்தை நிரப்பிய பின்னர் சில நிமிடங்களில் இந்த வீட்டின் கட்டமைப்பு சுயமாக உருவாகி விடும்.

சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் செய்யப்பட்டுவரும் இந்த வீடு சுவீடன் நாட்டில் காணப்படும் சிறிய குடிசை வீட்டை ஒத்திருக்கும்.

மூன்றுக்கு இரண்டு மீற்றர் பரப்பளவும், 2.5 மீற்றர் உயரமும் கொண்ட இந்த வீடு வளர்ந்த ஒரு மனிதன் வசிப்பதற்குப் போதுமான இடத்தைக் கொண்டிருக்கும்.

இதற்காக சுவீடனின் விண்வெளி பொறியியலாளர்கள் பல ஆண்டுகளாய் தொடர்ந்து ஆய்வு நடத்தி தங்களது கனவை நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாய் உள்ளனர்.

நாசாவையும் தங்களின் தொழில் முறை பங்குதாரர்களாகக் கொண்ட அஸ்ட்ரோபோடிக் என்ற அமெரிக்க விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் இந்த வீட்டை நிலவுக்கு எடுத்துச் செல்ல இணைந்துள்ளது மட்டுமல்லாமல் அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதம் இந்தப் பயணம் திட்டமிடப்பட்டுள்ளது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 3 | 4 | | | | 9 | 7 |
| 9 | 7 | | | | | 2 | | |
| | | | | | 8 | | | 6 |
| | 4 | | 6 | 3 | | | 1 | |
| 3 | 1 | | | 7 | | | 8 | 4 |
| | 6 | | | 8 | 4 | | 2 | |
| 7 | | | 9 | | | | | |
| | | 6 | | | | | 3 | 2 |
| 8 | 3 | | | | 1 | 4 | 7 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 5 | 4 | 2 | 8 | 1 | 7 | 6 |
| 2 | 7 | 6 | 3 | 1 | 5 | 4 | 9 | 8 |
| 8 | 1 | 4 | 6 | 7 | 9 | 2 | 3 | 5 |
| 9 | 5 | 8 | 7 | 6 | 4 | 3 | 1 | 2 |
| 4 | 3 | 2 | 8 | 9 | 1 | 6 | 5 | 7 |
| 1 | 6 | 7 | 2 | 5 | 3 | 8 | 4 | 9 |
| 5 | 8 | 9 | 1 | 4 | 6 | 7 | 2 | 6 |
| 7 | 4 | 3 | 5 | 8 | 2 | 9 | 6 | 1 |
| 6 | 2 | 1 | 9 | 3 | 7 | 5 | 8 | 4 |

## விற்பனை ஊக்குவிப்பு வாரம்

விவசாயத் திணைக்களத்தால் தேசிய விதை மற்றும் நாற்று விற்பனை ஊக்குவிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 02ஆம்திகதியிலிருந்து எதிர்வரும் 07ஆம் திகதி வரை இந்த வாரம் அனுஷ்டிக்கப்படுவதனால் எதிர்வரும் 06 ஆம் திகதி வரை யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள விவசாயக் கிளையில் பரிந்துரை செய்யப்பட்ட நல்லின விதை நடுகைப் பொருள்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. இங்கு பழமரக் கன்றுகள், மரக்கறி விதைகள், எம்.ஐ மிளகாய் விதைகளுக்குட்பட்ட ஏனைய வயற் பயிர் விதைகள் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் மாவட்ட விவசாயக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## அமெரிக்க தகவல் கூடம் நடத்தும் புகைப்படப் போட்டி

யாழ். அமெரிக்கத் தகவல் கூடத்தின் ஏற்பாட்டில் 14 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட புகைப்பட ஆர்வலர்களுக்காக 'நகரின் சுற்றுச் சூழல் மாசு' என்ற கருப்பொருளிலும், 19 வயதுக்கு மேற்பட்ட புகைப்பட ஆர்வலர்களுக்காக 'பசுமை நகரத்தை உருவாக்குவோம்' என்ற கருப்பொருளிலும் புகைப்படப் போட்டி ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கையில், இலத்திரனியல் மற்றும் அச்சு நகல் வடிவில் புகைப்படங்களைச் சமர்ப்பிக்க முடியும். புதுமையான படைப்பாற்றல் அடிப்படையில் வெற்றியாளர்களை கொழும்பு அமெரிக்க தகவல் கூட குழு ஒன்று தெரிவு செய்யும். வெற்றி பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு பரிசில்களும், தெரிவு செய்யப்பட்ட முதல் பத்து போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். வெற்றியாளர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு புகைப்பட கண்காட்சி ஆரம்ப விழாவில் நடைபெறும். புகைப்படம் மற்றும் ஏன் இப் புகைப்படம் எடுக்கப்பட்டது என்பது குறித்த ஒரு விளக்கமும் புகைப்படத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று அறிவித்துள்ளனர்.

போட்டியில் பங்குபற்றுபவர்கள் சீடி அல்லது டிவிடி மூலமாக இலத்திரனியல் நகல்களை சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கப்படும் இலத்திரனியல் நகல் புகைப்படங்கள் யாவும் 1024 x 720 பிக்ஸ்சல்க்கு மேற்படாதவாறு இருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் அச்சு நகல் புகைப்பட அளவு 4' x 6' ஆக அல்லது அதற்கு மேலாக இருத்தல் வேண்டும். ஒருவர் 3 புகைப்படங்கள் வரை சமர்ப்பிக்கலாம், போட்டியாளர்கள் தங்களது புகைப்படங்களை தங்களது விவரமடங்கிய கூப்பனுடன் சமர்ப்பிக்க வேண்டும், கூப்பனை அமெரிக்க தகவல் கூடத்தில் பெற்றுக்கொள்ளலாம். எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் மேலதிக விவரங்களை இணைப்பாளர், அமெரிக்க தகவல் கூடம், யாழ்ப்பாணம். இல. 23. அத்தியடி புதிய வீதி, நல்லூர் என்ற முகவரியிலோ அல்லது americancornerjaffna2011gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ பெறமுடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)


கொமர்ஷல் கிரெடிட் அண்ட் ஃபினான்ஸ் பீ.எல்.சீ.

# மாபெரும் ஏல விற்பனை

### 146 டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள்

ST & IS SINCE 1892

கொமர்ஷல் கிரெடிட

**2014 ஜுன் மாதம் 07ஆம் திகதி, சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் இல. 379 ஜயந்தி மாவத்தை, குருணாகலை வீதி, அநுராதபுரம் (ஆலங்குளம் பண்ணைக்கு முன்னால்) இடம்பெறவுள்ளது.**

| கார் | | |
|---|---|---|
| 17 | - 9XXX | ஹொன்டா ஸ்கோட் CB353MP / 1991 |
| 13 SRI | - 8XXX | மிட்சூபிசி மிராஜ் / 1982 |
| 19 | - 3XXX | டெவோக் /1995 |
| 16 SRI | - 1XXX | நிசான் பல்சர் /1985 |
| 17 | - 5XXX | L-KA67V டொயோட்டா கரீனா / 1987 |
| 13 SRI | - 9XXX | நிசான் சனி / 1982 |
| 17 | - 3XXX | கரீனா AT 150/1988 |
| 15 SRI | - 3XXX | டொயோட்டா ஸ்பிரின்ட்டர் / 1985 |
| 18 | - 5XXX | மிட்சூபிசி லான்ஷர் GLS/1991 |
| 14 SRI | - 4XXX | மெஸ்டா / 1983 |
| 13 SRI | - 5XXX | மிட்சூபிசி லான்ஷர் / 1984 |
| 301 | - 0XXX | டொயோட்டா கரீனா / 1995 |
| NWKT | - 5XXX | மருட்டி ASTAR / 2012 |
| 16 | - 0XXX | மெஸ்டா வேகன் / 1985 |
| **வேன்** | | |
| 40 SRI | - 1XXX | டொயோட்டா LH 20 / 1980 |
| 48 | - 0XXX | டொயோட்டா ஹைஏஸ் / 1978 |
| **பஸ்** | | |
| 30 SRI | - 2XXX | மிட்சூபிசி மோட்டர் கோச் /1983 |
| 60 | 9XXX | டாடா 909 / 1991 |
| 60 | - 7XXX | டாடா 909 மோட்டர் கோச் / 1990 |
| 60 | - 8XXX | லங்கா அஷோக் லேலன்ட், 42 SEAT / 1990 |
| 60 | - 6XXX | டாடா 909 / 1988 |
| **முச்சக்கர வண்டி** | | |
| NCQY | - 1XXX | சேனாகோ 2 ஸ்டேக் / 2008 |
| NWGI | - 2XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2001 |
| NWHK | - 7XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2003 |
| NCQF | - 4XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2006 |
| NCQD | - 9XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2006 |
| CPJH | - 1XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2004 |
| NCQA | - 0XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2005 |
| NCJR | - 3XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2004 |
| NCQQ | - 7XXX | பஜாஜ் ஒட்டோ - 4 ஸ்ட்ரோக் / 2008 |
| CPJF | - 6XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2004 |
| CPGH | - 6XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2000 |
| NCGY | - 1XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2002 |
| NCHT | - 1XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2003 |
| NCHK | - 8XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2003 |
| NCHQ | - 3XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2003 |
| NWQL | - 2XXX | பஜாஜ் ஒட்டோ - 4 ஸ்ட்ரோக் / 2007 |
| NCQK | - 6XXX | பஜாஜ் ஒட்டோ - 4 ஸ்ட்ரோக் / 2007 |
| NCJD | - 8XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2004 |
| NCQC | - 6XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2005 |
| NCGK | - 6XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2001 |
| NCGI | - 4XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2001 |
| NCQB | - 2XXX | பஜாஜ் ஒட்டோ - 4 ஸ்ட்ரோக் / 2005 |
| NCGH | 1XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2001 |
| NCQX | - 8XXX | பஜாஜ் ஒட்டோ - 4 ஸ்ட்ரோக் / 2010 |
| NWQR | - 7XXX | பஜாஜ் ஒட்டோ - 4 ஸ்ட்ரோக் / 2008 |
| NWQL | - 0XXX | பஜாஜ் ஒட்டோ - 4 ஸ்ட்ரோக் / 2007 |
| NCYA | - 3XXX | பஜாஜ் ஒட்டோ - 4 ஸ்ட்ரோக் / 2010 |
| NWYF | - 2XXX | பஜாஜ் ஒட்டோ - 4 ஸ்ட்ரோக் / 2010 |

| முச்சக்கர வண்டி | | |
|---|---|---|
| NCHG | - 1XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2003 |
| NCQF | - 6XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2006 |
| NCQJ | - 2XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2006 |
| NCQE | - 6XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2006 |
| WPQO | - 5XXX | பஜாஜ் ஒட்டோ - 4 ஸ்ட்ரோக் / 2008 |
| CPQA | - 2XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2005 |
| EPQY | - 4XXX | பியாஜியோ APE / 2013 |
| NCJN | - 7XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2004 |
| NCHT | - 0XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2003 |
| NCHZ | - 3XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2004 |
| CPQG | - 1XXX | பஜாஜ் ஒட்டோ - 2 ஸ்ட்ரோக் / 2006 |
| **ப்ரைம் மூவர்** | | |
| NCWX | - 0XXX | ப்ரோன்ஸ் / 2011 |
| NCXJ | - 9XXX | பஜாஜ் பிளடினா / 2011 |
| NCXH | - 2XXX | ஹீரோ ஹொன்டா கிளமர் / 2011 |
| NCVG | - 7XXX | யமகா கிளடியெடர் / 2009 |
| NCWF | - 1XXX | லொன்ஷீன் / 2010 |
| NCVF | - 5XXX | ஹீரோ ஹொன்டா கிளமர் / 2009 |
| NCXI | - 3XXX | பஜாஜ டிஸ்கவர் 150 CC / 2012 |
| NCBAG | 0XXX | ஹொன்டா டுவிஸ்டர் / 2012 |
| NCXK | - 5XXX | பஜாஜ் டிஸ்கவர் 100 CC / 2012 |
| NCXL | - 8XXX | TVS வெகோ / 2011 |
| NC XR | - 5XXX | பஜாஜ் டிஸ்கவர் 100 CC / 2012 |
| NCBAH | - 5XXX | ஹொன்டா டுவிஸ்டர் / 2013 |
| NCXK | - 7XXX | பஜாஜ் பல்சர் 180CC / 2011 |
| NCBAN | - 9XXX | ஹீரோ ஹொன்டா கிளமர் / 2013 |
| NCXL | - 2XXX | பஜாஜ் டிஸ்கவர் 125 CC / 2012 |
| NWXL | - 9XXX | பஜாஜ் பல்சர் 135 CC / 2012 |
| **டபல் கெப்** | | |
| NCPD | - 6XXX | போலெரோ கெம்பர் கோல்ட் 2WD / 2011 |
| **லொறி** | | |
| NCLG | - 7XXX | செங்கன் புள் பொடி / 2008 |
| 47 | - 8XXX | லங்கா அஷோக் லேலன்ட் IVECO LORRY 709 / 1995 |
| 27 SRI | 5XXX | இசுசு 14 ½ / 1974 |
| NCLD | - 6XXX | JAC NC-LD-6425 10 ½ / 2006 |
| NCLD | - 8XXX | டாடா ACE / 2007 |
| NWLF | - 9XXX | ஸ்வராஜ் மெஸ்டா 14 ½ / 2006 |
| NCLG | - 8XXX | டாடா ACE / 2009 |
| NCLB | - 1XXX | மிட்சூபிசி கேன்டர் பைபர் / 2000 |
| NCLF | - 9XXX | யூஜின் ஹாப் பொடி / 2008 |
| NCLD | - 1XXX | டாடா ACE / 2006 |
| NPJJ | - 2XXX | டாடா 709 / NP / 2004 |
| 47 | - 1XXX | டாடா புள் பொடி / 1990 |
| EPLG | - 6XXX | செங்கன் ட்ரக் / 2008 |
| EPLG | - 6XXX | செங்கன் ட்ரக் / 2008 |
| 48 | - 8XXX | டாடா 14 ½ / 1995 |
| 40 | 5XXX | இசுசு 12 ½ / 1981 |
| EPLF | - 7XXX | செங்கன் / 2008 |
| NCLD | - 9XXX | டாடா ACE / 2007 |
| 68 | - 5XXX | லங்கா அஷோக் லேலன்ட் காகோ 709 / 1997 |
| NELE | - 6XXX | செங்கன் SC1024CD12 / 2007 |
| NCLC | - 8XXX | டாடா ACE / 2006 |

| லொறி | | |
|---|---|---|
| NCGQ | - 5XXX | லங்கா அஷோக் லேலன்ட் 709 காகோ / 1997 |
| NCLE | - 4XXX | போடோன் 10 ½ / 2007 |
| NCLE | - 7XXX | செங்கன் புள் பொடி / 2008 |
| 48 | - 9XXX | லங்கா அஷோக் லேலன்ட் / 1997 |
| EPGB | - 4XXX | லங்கா அஷோக் லேலன்ட் கொமெட் சுப்பர் / 2000 |
| CPLG | - 3XXX | போடோன் / 2008 |
| 40 | - 2XXX | இசுசு ELF / 1979 |
| 42 | - 3XXX | இசுசு / 1985 |
| CPLD | - 0XXX | யூஜின் / 2006 |
| NCLE | - 8XXX | FAW / 2007 |
| 48 | - 1XXX | லங்கா அஷோக் லேலன்ட் 709 / 1996 |
| NCLG | - 7XXX | ச்சனா லொறி / 2008 |
| 28 SRI | - 8XXX | இசுசு 10 ½ / 1978 |
| NCLH | - 7XXX | போடோன் 2W / 2008 |
| 227 | - 9XXX | நிசான் எட்லஸ் 14 ½ / 1994 |
| NWHI | - 7XXX | சுசிகி ஹாப் போடி / 1998 |
| CPJC | - 3XXX | ஹொன்டா படி / 1999 |
| 48 | - 9XXX | டாடா 14 ½ / 1995 |
| EPPV | - 7XXX | சுபாரு மினி லொறி / 2009 |
| NCPP | - 7XXX | டாடா ACE / 2010 |
| 50 | - 9XXX | நிசான் வெனட் / 1983 |
| 226 | - 1XXX | நிசான் எட்லஸ் 14 ½ / 1993 |
| **டிப்பர்** | | |
| NCGU | - 5XXX | டாடா LPK1615 மோட்டர் லொறி / 2002 |
| NCHH | - 7XXX | டொயோட்டா 10 ½ / 1995 |
| 43 | - 7XXX | டாடா டம்க் ட்ரக் 3 CUBE / 1993 |
| WPLF | - 9XXX | டாடா LPK 1613 / 2008 |
| SPLE | - 4XXX | ஏஷெர் மோட்டர் லொறி 3 CUBE / 2007 |
| WPLE | - 1XXX | டாடா 3 CUBE / 2007 |
| NCLJ | - 5XXX | டாடா 3 CUBE / 2012 |
| NCLD | - 4XXX | லங்கா அஷோக் லேலன்ட் 10W / 2007 |
| NWLE | - 8XXX | மிட்சூபிசி கென்டர் / 2003 |
| CPLE | - 9XXX | JAC டம்க் ட்ரக் / 2007 |
| NPLA | - 4XXX | லங்கா அஷோக் லேலன்ட் / 2005 |
| NCLJ | - 5XXX | டாடா LPT 1613 / 2011 |
| WPLI | - 6XXX | டாடா / 2011 |
| **4W டிப்பர்** | | |
| 25SRI | - 1XXX | மெஷி பர்கஷன் 135 / 1963 |
| NWJO | - 6XXX | மெஷி பர்கஷன் 135 / 1979 |
| NCRA | - 7XXX | பாம்ட்ரக் FT-45 / 2006 |
| CPRA | - 1XXX | பஜாஜ் டெம்போ / 2005 |
| 37 SRI | - 1XXX | IMT-533 / 1980 |
| CPHT | - 8XXX | சேம்ப் க்ரெஸ்ஸ் / 2000 |
| NCRA | - 3XXX | மகேந்திரா 575DI / 2005 |
| NCRA | - 9XXX | மகேந்திரா 575DI / 2007 |
| WPRA | 4XXX | மகேந்திரா / 2006 |
| 49 | - 5XXX | மெஷி பர்கஷன் 135 / 1980 |
| **H/டிப்பர்** | | |
| NCSM | - 2XXX | பரகோன் RT125GN / 2012 |
| NCSK | - 3XXX | செமுத்து அக்ரோ GN 12 / 2011 |
| NCSM | - 2XXX | விக்கினோ RV 125/2011 |

**ஜுன் மாதம் 05ம் திகதி வியாழக்கிழமை முதல் ஏலவிற்பனை நடைபெறும் இடத்தில் இல. 379, ஜயந்தி மாவத்தை, குருணாகலை வீதி, அநுராதபுரம் (ஆலங்குளம் பண்ணைக்கு முன்னால்) மு.ப 9.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை இவ்வாகனங்களை பார்வையிடலாம். தொ.இல (நலிந்த) 0772 360 837**

**விற்பனைக்கான நிபந்தனைகள்**

- **அனுமதி** : ஏலம் நடைபெறும் நாளில், ரூ.500/= பெறுமதியான மீளப்பெற முடியாத தொகையையும் ரூ.5000/= பெறுமதியான மீளப்பெறக் கூடிய தொகையையும் செலுத்தி அனுமதி பெற முடியும்.
- **கொடுப்பனவுகள்** : சுத்தி வீழ்ச்சியின்போது மீளப்பெற முடியாத 25% அடிப்படை வைப்பு செலுத்தப்பட வேண்டும் மிகுதி 75% மற்றும் அகற்றுதல் 10ம் திகதி ஜுன் மாதம் 2014 பி.ப 3.00 மணிக்கு முன்பதாக கொமர்ஷல் கிரெடிட் அண்ட் ஃபினான்ஸ் பீ.எல்.சீ. இல.272, மைத்திரிபால சேனாநாயக மாவத்தை, அநுராதபுரம், எனும் இடத்திற்கு செலுத்தப்பட வேண்டும்.
- முன்னறிவித்தல் எதுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏலத்திலிருந்து மீளப்பெறும் உரிமை நிறுவனம் வசமானதாகும்.
- ஏலதாரரின் முடிவே இறுதியானது.

## ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

ஒரே நாடு. ஒரே ஏலதாரர்.
122 வருட நிகரற்ற சேவை

பிரதான காரியாலயம்:
24 டொரிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி: 0812 227 593,
தொலைநகல்: 0812 224 371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

UKAS

நகர காரியாலயம் மற்றும் காட்சியறை
290, ஹெவலொக் வீதி, கொழும்பு 5.
தொலைபேசி: 0112 502 680, 2 585 408,
தொலைநகல்: 0112 588 176
மின்னஞ்சல்: schokman@samera1892.com

www.sandslanka.com

# வடமாகாண சபை உருவாக்கப்பட்டும் எதுவும் நடக்கவில்லை

*சாடுகிறார் அலன்ரின்*

வடமாகாண சபை உருவாக்கப்பட்டு 8 மாதங்கள் கடந்துவிட்டபோதும் அவர்கள் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. அதனை நீங்களும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறீர்கள். என்று நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் நேற்றுமுன்தினம் பாடசாலை நிகழ்வொன்றி கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

வேலணை மத்திய கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்திறப்புநிகழ்வு மற்றும் தொழில்நுட்ப பீடத்துக்கான அடிக்கல் நடும்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். வடமாகாண சபை கடந்த செப்ரெம்பர் மாதம் இயங்க ஆரம்பித்ததில் இருந்து அவர்கள் எந்தவித அபிவிருத்தியும் மேற்கொள்ளவில்லை. எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை அதனை நீங்களும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறீர்கள். ஆனால் நாம் அதிக வேலைகள் செய்துள்ளோம். அது உங்களுக்குத் தெரியும். தாம் முன்னரும் பல வேலைத்திட்டங்களை உங்களுக்குச் செய்துள்ளோம் என்று அவர் கூறினார். நிகழ்வில் ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் மற்றும் விருந்தினர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். (வ-4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மலர் 26 . 01 . 1961



விண்மலர் 17 . 05 . 2013

### திருமதி சுயந்தி கணேசமூர்த்தி

(முன்னாள் பணியாளர் இலங்கை வங்கி - திருநெல்வேலி)

திதி: 04.06.2014

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தே மிளிர்ந்தீர்கள்
கூரறிவு கொண்டவராய் எமையென்றும் வளர்த்தீர்கள்
அன்பு அம்மாவே! நீங்கள் எம்மைப் பிரிந்து
ஆண்டு ஒன்றாகிவிட்டது ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா என்று அழைக்க நீங்கள் இப்பூவுலகில் இல்லை
ஆலமரமாய் நின்று எம்மை அரவணைத்தீர்கள்
கல்விச் செல்வத்தால் எம்மை நாடறிய வைத்தீர்கள்
குடும்பத் தலைவியுமாய் கடமையில் ஆசானாகவும்
இவ்வுலகில் மிளிர்ந்தீர்கள் உங்கள் புன்சிரிப்பு
நிதம் எமை வாட்டுகிறது அம்மா எமைப்பிரிந்து இப்போது
தெய்வமாகி விட்டீர்கள் அம்மா
நெஞ்சம் கனக்கிறது விழிநீர் சொரிகின்றது
உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

60, சேர் பொன் இராமநாதன் வீதி. யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர். (48837) (8.3.6)

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள PQ-xxxx யூஜுன் 10½ அடி கூட்டுடன் கன்ரர் வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 117 6689

## வேலையாள் தேவை

வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஒன்றுக்கு AAT, HNDAபடித்து முடித்த அல்லது படித்துக் கொண்டிருப்பவர்கள் உடனடியாகத் தேவை.

(48719) (12.3.6) தொடர்பு: 077 670 1495

## காணி விற்பனைக்கு

மண்டைதீவு, 4ஆம் வட்டாரம், முருங்கைப்புலம், பிரசித்தி பெற்ற புகையிலைத் தோட்டக் காணி 10 பரப்பு 2 கிணற்றுடன், பிரித்தும் கொடுக்கப்படும்.

(48698) (12.3.6) தொடர்பு: 077 685 0941

## ஆள் தேவை

வெள்ளவத்தை கொழும்பில் உள்ள பிரபல வர்த்தக நிலையத்திற்கு முன் அனுபவமுள்ள ஆள் தேவை . தங்குமிட வசதி வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (கி.13970)(7.6.3)

தொடர்பு: 077 749 5075, 077 983 5705

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

இல.74, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் 2 பரப்பும் 2குழியும் உள்ள காணியில் 5 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

நாக விகாரைக்கு மிக அண்மையில்.

(48712) (12.3.6) தொடர்பு: 077 530 0493

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 15.04.1931

மறைவு 05.05.2014

கடந்த 05.05.2014 திங்கட்கிழமை இறைபதமடைந்த எங்கள் அன்புத் தந்தை

### அமரர் வேலுப்பிள்ளை சண்முகம்

(அருணாசலம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.06.2014) புதன் கிழமை அதிகாலை 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று.கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரக்காரியம்புலம்,
வதிரி,கரவெட்டி.

குடும்பத்தினர்.

## 34ஆவது பிறந்த நாளும்

வாழ்வில் விழுது விட்டுப் படரவேண்டிய விருட்சம் ஒன்றின் வேரினை இழந்த ஆறாம் ஆண்டு நினைவலைகள்

# யோகரட்ணம் கீதன்

(Ceylinco Insurance)



தாயின் மடியில் 04.06.1980

பூமித்தாயில் 31.05.2008



பாசமிகு மைந்தனாய்
நேசமிகு சகோதரனாய்
நட்பின் நாயகனாய்
தலைநிமிர்ந்த வேளையிலே
வன்முறை என்ன என்று
தெரியாத உன்னை
பலியெடுத்தது - எம் தேசம்
அதன் விளைவு - அலைகடலில்
அகப்பட்ட துரும்பு போல்
தத்தளிக்கின்றது - உன் குடும்பம்

இறந்தகாலம் நிகழ்காலம்
எதிர்காலம் என்ற முக்காலத்திலும்
வாழ்ந்து கொண்டிருப்பான்
எம் கீதன் என்ற நம்பிக்கையில்
அவனை நினைவு கூரும்...

"யோகித்தா வாசம்"
1[illegible]1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சு[illegible]டுக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(48696)(10.6)

## மரண அறிவித்தல்



### ஞானரத்தினம் டேவிட் ஜெயரத்தினம்

(இளைப்பாறிய பொறியியலாளர் லங்கா சிமென்ற் லிமிடெட்)

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பு வெள்ள வத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானரத்தினம் டேவிட் ஜெயரத்தினம் 01.06.2014 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேல் ஞானரட்ணம்-மேரி ஜீவ மணி தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற S.A. குண நாயகம்-ஞானமலர் தம்பதியரின் மருமகனும், ரஞ்சினியின் அன்புக் கணவரும், றிச்சேட் ஜெயரஞ்சிற் (Australiya), சாமுவேல் ஜெயந் தன் (U.K), சொலமன் ஜெயரூபன் (Sky Computers) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வதனி (Australiya), அகிதா (U.K), நிஷாந்தி (பிரதேச செயலகம், தெகிவளை) ஆகியோரின் அன்பு மாமனும், ஜெருஷா, ரனுஷா ஆகியோரின் பேரனும், ஜெயமணி, ஜெயராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (03.06.2014) முற்பகல் 10 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 6 மணிக்கு ஆராதனை நடைபெற்று, இறுதி நல்லடக்க ஆரா தனை தோப்பு, ஏழாலை தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (04.06.2014) புதன்கிமை மாலை 3.30 மணிக்கு நடை பெற்று, C.A.C.M ஏழாலை தெற்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் J.S.ஜெயரூபன்
077 7311 772 / 011 259 0051

(C14442)(10)

## இந்து சமய பொது அறிவுப் போட்டி ஜூன் 28 இல்

யாழ்ப்பாணம், ஜூன் 4

இந்து சமய பொது அறிவுப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான பரீட்சை நிலையங்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். இதற்காக 27 நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர் களே பிரதான பரீட்ச கராக கடமையாற்றுவார்கள் என்று பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-7)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஜூன் 3

உடுவில் கோட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளரும் அதிபருமான அமரர் அப்புத்துரை தற்பரானந்தனின் நினைவு தினமும் நினைவுப் பேருரை நிகழ்வும், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஓ)

## இந்த வருடம் பிறந்த குழந்தைகளுக்கு தென்னம் பிள்ளைகள்

தென்மராட்சி, ஜூன் 4

தென்மராட்சி பிரதேசத்தில் இந்த வருடம் பிறந்த குழந்தைகளுக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தென்னம்பிள்ளைகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணிகளுக்கும் தென்னம்பிள்ளைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதற்கான விவரங்கள் அந்தந்த குடும்ப நலசேவையாளர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மரண அறிவித்தல்



### கந்தையா சின்னத்தம்பி

கைதடியைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப் பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்தம்பி நேற்று (03.06.2014) செவ்வாய்க்கிழமை பன்னாலையில் இறைபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்தி லிங்கம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற நர்கம்மாவின் அன்புக் கணவரும், நாகரத்தினம், லலிதாதேவி, நகுலேஸ்வரன் (அலுமினியம் தொழிற் சாலை) சிறீதரன் (சிறிமில் வைண்டிங் வேக் சொப்-இரு பாலை வீதி, கோண்டாவில்) சந்திராதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரா காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மனோரஞ்சிதம், தசகுமாரி சிறிகாந்தன் ஆகியோ ரின் அன்பு மாமனும், றிபித்வஜன், சயிதா, கீர்த்தனன், தரணிகா, ஜமேலா, கானுஜா, நிரோஜன், நிகுந்தன், குரு சாந்தன், மதுசா, பிரசாந்த், பிரியங்கா ஆகியோரின் அன் புப் பேரனும், விருட்சயனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2014) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயா னத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்,
சிறீதரன்
(மில், வைண்டிங் வேக் சொப்)
இருபாலை வீதி, கோண்டாவில்.
077 615 4941

பொன்னையா வீதி,
பன்னாலை, தெல்லிப்பழை.
077 147 4706

(48714) (10.3)


## யாழ் குடாநாட்டு மக்களுக்கு குடிநீருக்கும்சுகநல வாழ்வுக்கும் தீர்வே இல்லையா ?

யாழ் குடாநாட்டு மக்கள் பருகுவது மாசு கலந்த நீரே (கல்சியம், நைற்றேற்று, அயன், மங்கனீசு மற்றும் மலக்கழிவு கொண்டதே நாம் பருகும் நிலத்தடி நீர்).

யாழ் மாநகரப்பகுதிகள், தீவுப் பகுதிகள் அதிகம் பாதிக்கப்பட்ட இடங்களாகும்.

எமது நெருக்கடிக்கு எமது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தீர்வுகளை முன்வைப்பார்களா?

தீர்வுத் திட்டங்கள் வந்தபோதெல்லாம் அவற்றை அரசியலாக்கி மக்கள் நலன் பேணாமையே எமது கசப்பான வரலாறு.

### மக்களே விழிப்படைவீர்,குடிநீருக்காக குரல் கொடுப்பீர்





யாழ் மாநகரில் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் அருகருகே காணப்படும் கிணறு மற்றும் மலக்குழிகள்.



ஒரு மணித்தியாலத்திற்கும் குறைவான நீர் விநியோகத்தினைப்பெற்றுக்கொள்ள காத்துநிற்கும் தீவக மக்கள்.

நீங்கள் பருகும் குடிநீரின் தரத்தை பரிசோதியுங்கள், பின்னர் பருகுங்கள்

## தீவக அபிவிருத்தி கழகம்.

(48717)(5.3)

# முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள விசேட குழு

கொழும்பு, ஜூன் 04

நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெறும் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் எதிரான நடவடிக்கைகளை உடனுக்குடன் அறிந்துகொண்டு உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முஸ்லிம் புத்திஜீவிகள் மற்றும் தொழில்சார் வல்லுநர்கள் அடங்கிய குழு செயலில் ஈடுபட்டுள்ளது.

இந்தக் குழுவில்முஸ்லிம் சட்டத்தரணிகள், கல்வியியலாளர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், உளவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் என பல துறைகளைச் சேர்ந்த 30 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவினரால் 24 மணிநேர தொலைபேசி சேவையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசி எண்களுக்கு நாட்டில் எந்தப் பகுதியில் இடம்பெறும் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள், தாக்குதல்கள், நாசகாரச் செயல்கள் என்பவற்றை உடனுக்குடன் தெரியப்படுத்தலாம். அதற்கு முஸ்லிம் புத்தி ஜீவி கள் மற்றும் தொழில் சார் நிபுணர்கள் அடங்கிய குழு தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குவதுடன் சட்ட நடவடிக்கைகள் எடுப் பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவுள்ளது.

இந்தக் குழு மாவட்ட ரீதியில் சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையிலான நல்லுறவை வளர்ப்பதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது. இதற்காக சிங்கள மக்களின் உதவிகளையும் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ச-10)

# சூழல் விழிப்புணர்வு; நாளை படையினர் பேரணி

வலி. வடக்கு, ஜூன் 04

உலக சுற்றுச் சுழல் தினத்தை முன்னிட்டு பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

மாவிட்டபுரத்தில் இருந்து நாளை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஊர்வலத்தில் சுற்றுச் சுழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் 75 இற்கும் மேற்பட்ட சைக்கிள்கள் மற்றும் 30 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்த ஊர்வலம் காங்கேசன்துறை வீதி வழியாக யாழ்.நகரை வந்தடைந்து துரையப்பா விளையாட்டு அரங்கில் நிறைவடையும்.

இதேவேளை - பலாலியில் இருந்து ஆரம்பமாகும் மோட்டார் சைக்கிள்களின் ஊர்வலம் பலாலி வீதி வழியாக துரையப்பா விளையாட்டு அரங்கை வந்தடையவுள்ளது.

இந்தத் தகவலை யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுஜித் காரியகரவண தொவித்துள்ளார்.

(ஜ-86)


**ஐஸ்கிறீம் வான் விற்பனைக்கு உண்டு**

T.P: 077 450 4620, 077 814 5652 (48728) (10)

**சாரதி தேவை**

கனரக வாகன சாரதி (AD) அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (யாழ் மாநகர சபைக் குட்பட்டவர்கள்)

077 672 9641 (48721) (10)





**தூய ஆவியார் திருவிழிப்பு ஆராதனை**

07.06.2014 சனி இரவு 8.00 மணிமுதல் அதிகாலை வரை,
கரம்பொன் தூய வேளாங்கன்னி யாத்திரைத் தலத்தில்
ஆயத்த வழிபாடுகள்
ஜூன் 04,05,06 (புதன், வியாழன், வெள்ளி)
மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை இடம்பெறும்.
தூய ஆவியாரின் அபிஷேகம் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கரம்பொன் பங்கு மக்கள்

விளம்பர அனுசரணை A.C.D, Jaffna.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கண்காட்சி நிகழ்வில்
ஜனாதிபதி விருதுபெற்ற விஜய டி சில்வாவுடன் மகளிரும் இணைந்து வழங்கும்

**Magic Show**

மனதைக் கவரும்
" விநோத சாகச " அரங்கு
காலம் - ஜூன் - 5.6.7
காலை 9.00 - மாலை 6.00 மணி வரை
காணத்தவறாதீர்கள் !
பிரவேசம் -
பாடசாலை மாணவர்களுக்கு -40/=
ஏனையோருக்கு -70/=


## கருத்தரங்கு

யாழ்ப்பாணம் முகாமையாளர் மன்றம் நடத்தும் கருத்தரங்குகள் வரிசையில் 133 ஆவது கருத்தரங்கு இன்று புதன்கிழமை மாலை4.30 மணிக்கு நல்லூர் யூரோவில் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், பேராசிரியர் ரஷீன்சாலி உலக பொருளாதாரப் போக்கும் இலங்கையல் அதனைத் தீர்மானித் தலும் என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.


The Art of Living Happiness Program



" ஆனந்த அனுபவம் "
கிளிநொச்சியில்
• மன அமைதி • உற்சாகம் • ஆக்கத்திறன் • ஆரோக்கியம்
பயிற்சி நாட்கள் :- 05.06.2014 முதல் 07.06.2014 வரை
நேரம் :- மாலை 5.30
இடம் :- கிளிநொச்சி மகா வித்தியாலயம்.
மேலும் விவரங்களுக்கு :
0771000750, 0779186343


## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அவசரகால நிலைமை தேவை

### தேசியக் கட்சி அரசாங்கத்திடம் வேண்டுகோள்

கொழும்பு,ஜூன் 4

வேமாகப் பரவிவரும் டெங்கு நோயின் இடரை கட்டுப்படுத்த அரசு உடனடியாக அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜந்த கருணாதிலக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு தற்போது பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது. வடமத்திய மாகாணத்தில் மீண்டும் சிறுநீரக நோய் அதிகரித்துள்ளது. கொழும்பு மாவட்டம் உட்பட நாடளாவிய ரீதியில் டெங்கு வேகமாக பரவி வருகின்றது. இதனை கட்டுப்படுத்துவதற்கு அரசு தவறியுள்ளது. மருத் துவ மனையில் நோயாளி ஒருவருக்கான கட்டிலில் மூன்று நான்கு நோயாளிகள் தங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதார அமைச்சு தவறியுள்ளது. சுகாதார அமைச்சினுள் பிரச்சினைகள் காணப்படுகின்றன. சர்வதேச ரீதியில் விருது பெற்றவையைக் கொண்டாடிவரும் அரசு இவற்றை நாம் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்தபோதும் அதனை ஒருபொருட்டாக கருதவில்லை - என்றார்.


**கண்ணீர் அஞ்சலி**



துர்க்கா துரந்தரியின் வளர்ப்பு மகளாம்
அமரர் மஞ்சுளாவின் மகத்தான மைந்தனே !
தெல்லிநகர் தெய்வத்தின் தெவிட்டாத மகன் நீயே
துர்க்கா புரந்து மகளிர் இல்லத்தின்முத்த மகன்
துர்க்கா துரந்தரியின் வளர்ப்பு மகன்
அமரர் மஞ்சுளாவின் மகத்தான மைந்தன்
உதயகுமார் - தேவிகனே !
பார் போற்ற வேண்டிய பாலனே - எம்மை
பரிதவிக்க விட்டு சென்றதேனோ ?
பதறுகின்றது எம் தேகம் பரிதவிக்கின்றது எம் விழிகள்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

- தெல்லிப்பழை அன்பர்கள்



**மரண அறிவித்தல்**



**சோமலிங்கம் சிவலிங்கம்**
(ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு-8ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட சோமலிங்கம் சிவலிங்கம் (ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி) நேற்று (03.06.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமலிங்கம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் (ராசாவாத்தியார்)-கனகலெட்சுமி (சிவக்கொழுந்து) தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பிகையின்(கலா)வின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கமலசுதனின் தந்தையும் காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் சிவசுப்பிரமணியம், சிவஞானாம்பிகை, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராஜசேகரம் (ஆசிரியர்), சந்தரசேகரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, மக்களின் அஞ்சலிக்காக மடத்துவெளி முன்பள்ளி முன்றிலில் மு.ப. 11 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு பின் பூதவுடல் மணல்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 774 1388, 077 384 1023

தகவல்: குடும்பத்தினர்.

(C/13981) (10)



**மரண அறிவித்தல்**



**செல்லையா சிவப்பிரகாசம்**
(இளைப்பாறிய அதிபர், யா/ஒட்டுவெளி அ.மி.த.க. பாடசாலை)

கச்சாய், கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் முகமாலையை நிரந்தர வதிவிடமாகவும், மீசாலை வடக்கு, மீசாலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சிவப்பிரகாசம் நேற்று (03.06.2014)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நவரத்தினம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பாலலட்சுமியின் அன்புக் கணவரும், நந்தினியின் (ஆசிரியர்-மந்துவில் றோ.க.த.க. பாடசாலை) அனபுத் தந்தையும், விக்கினேஸ்வரனின் (ஆசிரியர்- பரந்தன் இந்து மகா வித்தியாலயம்) மாமனும், குருஷோத்மன், ரஸ்மினி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளை மற்றும் சடாச்சரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்லத்துரை, கனகசபை, புண்ணிய மூர்த்தி, பாலகிருஸ்ணன், பாலச்சந்திரன், சிவபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சியாமளா மில் லேன், மீசாலை வடக்கு. (C/13981) (10)

தகவல்: குடும்பத்தினர்.



**கண்ணீர் அஞ்சலி**



எமது ஆரம்பகால உத்தியோகத்தராகச் சேர்ந்து இன்று வரை எமது வைத்தியசாலை முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்ட

**திரு. இராஜதுரை இசிடோர் (ஜீவன்)**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துடி துடித்துப்போனோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

**அப்பலோ வைத்தியசாலை**
உரிமையாளரும், உத்தியோகத்தர்களும்.

(48718) (10)



**மரண அறிவித்தல்**

**போல் இராஜதுரை இசிடோர்**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட போல் இராஜதுரை இசிடோர் (ஜீவன்) நேற்று முன்தினம் (02.06.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற போல் இராஜதுரை மற்றும் அசம்டா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற நிர்மலா அவர்களின் அன்புக் கணவரும், ஜேசுதாசன்(கிராமசேவகர்), ரஜனி, ரஞ்சன், வசந்தா இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (04.06.2014) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் மானிப்பாய் அன்னாள் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.C.லேன், சுதுமலை றோட், மானிப்பாய். (48716)(4.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

# பல்கலை ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல் தொடர்கிறது

## யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்களை இராணுவத்தினரும் பொலிஸாரும் இன்னும் விசாரணை செய்கின்றனர். பல்கலைக் கழகத்தில் மாத்திரமன்றி அவர்களது கிராம அலுவலர்களிடமும் அவர்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்படுகிறது.
தாம் ஆசிரியர்கள் விடயத்தில் தலையீடு செய்வதில்லை என்று இராணுவப் பேச்சாளர் கூறியிருப்பினும் நடைமுறையில் அவ்வாறு இல்லை. அவர்களின் தலையீடு தொடர்ந்து கொண்டிருக்கிறது - இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம்.
இது தொடர்பில் ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது.
"யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டளைத் தளபதி பல்கலை ஆசிரியர்களை இரண்டு தடவைகள் சந்தித்துள்ளார். அதில் ஒருசந்திப்பில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரும் கலந்து கொண்டிருந்தார். பல்கலைக்கழக ஆசிரியர்கள் விடயத்தில் தாம் எனிமேல் தலையீடு செய்வதில்லை என்றும் அவர்களை தாம் அச்சுறுத்தும் வகையில் செயற்படமாட்டோம் என்றும் கூறியிருந்தனர். இராணுவப் பேச்சாளர்கூட அதனைக் கூறியிருந்தார்.
ஆனால் இங்கு நடப்பதோ வேறாகவுள்ளது. பல்கலை ஆசிரியர்கள் தொடர்பில் யாழ். பல்கலைக்கழகத்தினுள் சென்று புலனாய்வாளர்கள் தகவல்களைத் திரட்டி வருகின்றனர். அவர்களது கிராம அலுவலர்களிடமும் சென்று அத்தகைய தகவல்களைத் திரட்டி வருகின்றனர்.
கிராம அலுவலர்களிடம் செல்லும் நபர்கள் தம்மை சி.ஐ.டியி... என்றுகூறியே தகவல்கள... பெற்று வருகின்றனர். பல்க... ஆசிரியர்கள் விடயத்தில் த... தலையீடு செய்ய மாட்டே... என்று இராணுவப் பேச்சா... கூறியிருப்பினும் அதனை ந... முறையில்காண முடியவில்... அச்சுறுத்தல் தொடர்... கொண்டிருக்கிறது"- என... தெரிவித்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இந்திய

யினரால் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
இந்த நிலையிலேயே, இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவைப் பேண வேண்டி கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் அனைவரையும் விடுவிக்குமாறு, மீன்பிடி அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.
இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட மன்னார் மாவட்ட நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் மிரண்டா,
"ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய அனைத்து மீனவர் களும் விடுவிக்கப்படவுள்ளனர். சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து இன்று (நேற்று) பிற்பகல் 3 மணியளவிலேயே மீனவர்கள் விடுவிப்புத் தொடர்பான அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றது. அதையடுத்து தற்போது அனுராதபுரம் சிறையில் உள்ள இந்திய மீனவர்கள் இரவு கொழும்புக்குக் கொண்டு செல்லப்படவுள்ளனர். அவர்கள் நாளை (இன்று) விடுவிக்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளனர்"- என்று தெரிவித்தார்.
இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அந்நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதையடுத்து இலங்கை ஜனாதிபதியுடன் அவர் மேற்கொண்ட பேச்சின் எதிரொலியாகவே மீனவர்கள் விடுவிப்பு நடைபெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது.
கைதான மீனவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர் என்ற தகவலை அடுத்து அவர்களின் சொந்த இடமான இராமேஸ்வரத்தில் மீனவக் குடும்பங்கள் வெடி கொளுத்தி மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர் என்றும், அந்நாட்டின் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிக்கும் விதமான செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.
அதேவேளை, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் தடை செய்யப்பட்ட மீன்பிடிஉபகரணங்களைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்று இலங்கை மீனவர்கள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.
முன்னர் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்த போதும், அவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை உபயோகிப்பது தொடர்பிலான ஆதாரங்கள் எதுவும் இலங்கை நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படவில்லை.
ஆயினும் கடந்த சனிக்கிழமை இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட சமயம், அவர்களிடம் இருந்து - இலங்கை அரசால் தடை செய்யப்பட்ட இரட்டை மடி வலைகள் கைப்பற்றப்பட்டிருந்தன. மீனவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்திய சமயம் அந்த வலைகளும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீனவர்களை உடன் விடுவிக்குமாறு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார். (ற-14-5)

### அரசியல்

ளனர். அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.
பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் நியமனம் மாத்திரமன்றி பேரவை உறுப்பினர் நியமனம் என்று அனைத்து நியமனங்களிலுமே அரசியல் தலையீடு மேலோங்கியுள்ளது. அதனால் பல்கலைக் கழகங்களினது சுயாதீனம் மற்றும் கல்வித் தகைமையைப் பேண வேண்டியுள்ளது. அதனைத் தவிர்க்க வேண்டும். மொத்தத் தேசிய உற்பத்தியில் கல்விக்கு 6 வீத நிதியை ஒதுக்குதல் வேண்டும். ஆசிரியர்களுக்கான அடிப்படைச் சம்பளத்தை அதிகரித்தல் வேண்டும். அதனை மேலும் இறுக்கி பல்வேறு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தி சம்பளத்தைப் பெற முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனை நீக்குதல் வேண்டும். உரிய பொறிமுறையின்றி தனியார் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்படக்கூடாது. அது தொடர்பில் விடுத்த வர்த்தமானி அறிவிப்பை மீளப் பெறவேண்டும். பல்கலை மாணவர் ஒன்றிய தலைவர்கள் அழுத்தத்துக்கு உட்படுத்தப்படுவதால் அவர்களின் இயல்பான செயற்பாட்டைத் தடுப்பதாகவே உள்ளது. அதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்கள் உள்ளிட்ட கல்வியியலாளர்கள் மற்றும் பேரவை உறுப்பினர்களின் நியமனங்கள் அனைத்தும் அரசியல் தலையீடாகவே உள்ளது. அது நீக்கப்பட வேண்டும். பல்கலைக்கழக ஆசிரியர்களை விசேட குழுவாகக்கருதி அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதுவிடின், போராட்டத்தைத் தொடர்வது குறித்து பரிசீலனை செய்ய வேண்டி வரும்"- என்று தெரிவித்தனர்.
ஆசிரியர்களின் இந்தப் போராட்டத்துக்கு பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரவு தெரிவித்திருந்ததுடன், நேற்றைய தினம் பல்கலைக் கழகத்துக்கு சமுகமளிக்கவில்லை. (ற-4)

### காணி

கிளையில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர். அச்சுவேலி நகரப்பகுதியில் இராணுவத்தினரால் காணி கள் சுவீகரிப்புச் செய்யப்பட வுள்ளமை தொடர்பிலேயே அவர்கள் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.
9 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் ஆகியவை நீண்டகாலமாக இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ளன. தற்போது அந்தக் காணிகளை நிரந்தரமாகக் கையகப்படுத்தும் முயற்சிகளை முடுக்கிவிட்டுள்ள இராணுவம், அந்தக் காணிகளை சுவீகரிப்புச் செய்வது தொடர்பான அறிவித்தலை கடந்த 22 ஆம் திகதி விடுத்திருந்தது.
இராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்திருந்தனர். அதுகுறித்து பிரதேச செயலருக்கும் எழுத்துமூலம் தெரியப்படுத்தியிருந்தனர். ஆயினும் அவற்றைப் புறந்தள்ளி, காணிகளைச் சுவீகரிப்பதற்கான அடுத்த கட்ட முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காணிகளை அடையாளப் படுத்தி, நில அளவை மேற்கொள்வதற்காக நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் குறித்த பகுதிக்குச் சென்றிருந்தனர். ஆயினும் காணி உரிமையாளர்களின் கடும் எதிர்ப்பால் அந்த முயற்சி தோல்வியில் முடிந்திருந்தது.
இவற்றையடுத்தே, காணி உரிமையாளர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் தமது முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக்கிளையின் இணைப்பாளர் த.கனகராஜ், "பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் உடன்டியாகவே கொழும்பு தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தலைமைக் காரியாலயத்தின் ஊடாகவே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்"- என்று தெரிவித்தார். (ற-5)

### தனித்

என்பதையும் அந்தத் தீர்மானம் உள்ளடக்கி இருக்க வேண்டும்"- இவ்வாறு வலியுறுத்தி இருக்கின்றார் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.
இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற வைபவத்தை தமிழக முதலமைச்சர் புறக்கணித்திருந்தார். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்ததைக் கண்டித்தே அவர் பதவியேற்பு விழாவைப் புறக்கணித்திருந்தார்.
இதனையடுத்து இந்தியப் பிரதமருக்கும் தமிழக முதலமைச்சருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சம்பிரதாய சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே தமிழக மக்களின் எதிர்பார்ப்புகள், கோரிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 64 விடயங்களைக் குறிப்பிட்டு மனு ஒன்றை மோடியிடம் கையளித்தார் ஜெயலலிதா.
அந்த மனுவில், இரண்டாவது விடயமாகஈழத்தமிழர்பிரச்சினை பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்.
"இலங்கையின் சிறுபான்மைத் தமிழ் மக்கள் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்றும், இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்றும் குறிப்பிடப்படும் இலங்கையின் இறுதிப் போருக்குப் பின்னரான காலத்தில் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் குறித்து தமிழ் நாட்டிடமும், தமிழர்களிடமும் பல உணர்வு பூர்வமான பிரச்சினைகள் உள்ளன."- என்று அந்த மனுவில் உறுதியாகத் தெரிவித்திருக்கின்றார் ஜெயலலிதா.
இலங்கைத் தமிழர்கள் மீது தொடரும் ஒடுக்கல்கள் - அடக்குமுறைகளை- கண்டித்து தமிழ் நாடு சட்டசபையிலே நான்கு தடவைகள் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதையும் ஜெயலலிதா அந்த மனுவிலே சுட்டிக்காட்டியுள்ளார்.
அதேவேளை, இலங்கைத் தமிழ் மக்கள் தீர்வு தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது என்று, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் குறிப்பிடுகையில்;
"தமிழக முதல்வரால் இலங்கைத் தமிழ் மக்களின் தீர்வுத் திட்டம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை வரவேற்கின்றோம். அது ஜனநாயக ரீதியிலான கோரிக்கை. மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக அதனை நிலைநிறுத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.
நீண்டகாலமாக தமது உரிமைகளைக் கேட்டுப் போராடி அதனை இன்னமும் பெறமுடியாத நிலையில் இருக்கும் தமிழ் மக்களுக்காக, ஜனநாயக ரீதியில் அந்த உரிமைகளைப் பெறுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை.
13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டப்படும் என்று இலங்கை அரசு சொல்லிக் கொண்டிருந்தாலும் அவை எவையுமே செயலுருப் பெறவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காகவே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது"- என்று தெரிவித்தார். (உ-5)

### தன்னியக்க

யாழ்.நகரில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றின் கூரையின் மேல் நேற்றுமுன்தினம் இந்தச் சிறிய ரக தன்னியக்க விமானம் கண்டுபிடிக்கப்பட்டது. அதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம்பொலிஸார்விமானத்தை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். அது குறித்த விசாரணைகளையும் மேற்கொண்டிருந்தனர். அதே வேளை, தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்று, தாம் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைக்காகப் பயன்படுத்திய சிறியரக தன்னியக்க விமானம் காணாமற் போயுள்ளது என்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.
அதுதொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏக்கநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
"நேற்றையதினம் (நேற்று முன்தினம்) தனியார் விடுதி ஒன்றில் கூரையில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்ட தன்னியக்க விமானம் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றின் விளம்பர நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகும்.
இந்த நிறுவனம் மொனராகலை, தம்புள்ளை, குருநாகல் ஆகிய பிரதேசங்களிலும் இவ்வாறு சிறிய தன்னியக்க விமானங்களைக் கொண்டு விளம்பர நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.
அதேபோன்றே அவர்கள் யாழ்ப்பாணத்திலும் தமது விளம்பர நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். அதன்போது மின்கலம் (பற்றரி) போதியதாக இல்லாத காரணத்தினாலேயே குறித்த விமானம் கீழே விழுந்துள்ளது.
இந்தச் சிறிய தானியக்க விமானம் 100 மீற்றர் சுற்றுவட்டாரத்தில் பறப்பை மேற்கொள்ள வல்லதாகும். இவற்றைப் பயன்படுத்தி விளம்பரப்படுத்தலை மேற்கொள்வதற்கு அவர்கள் அனுமதியும் பெற்றிருக்கின்றார்கள். அதுகுறித்த ஆவணங்களையும், விமானத்தின் அடையாளங்களையும் எமக்கு காண்பித்ததை அடுத்து, விமானம் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### மதகுருவை

கொள்ளையர்களின் தாக்குதலில் அலம்பில் அந்தோனியார் ஆலய அருட்தந்தை எரிக் றொஷானே காயமடைந்துள்ளார்.
அலம்பில் அந்தோனியார் கோயில் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது. திருவிழா காரணமாக சுவாமி சொரூபத்துக்கு நகை அணிவிக்கப்பட்டு இரவில் குறித்த நகைகள் அருட்தந்தையால் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டு மறு நாள் கொண்டு வரப்படும்.
வழமைபோன்று திருவி... முடிந்த பின்னர் சுவாமி ந... களை அருட்தந்தை வழ... போலவே கொண்டு சென்... ளார். சுமார் 300 ஏக்கர் ... தீரணம் கொண்ட சுவ... தோட்டத்தின் நடுவே அ... தந்தை தங்கியுள்ள வீடு ... ளது. குறித்த வீட்டுக்கு நே... அதிகாலை ஒரு மணியள... ஆறு பேர் கொண்ட கெ... ளைக் கும்பல் சென்றுள்ள... முகத்தை மூடி துணி எது... அணிந்திருக்காத குறித்த ... பல், கொச்சைத் தமிழில் பே... படியே வீட்டின் காவல... யைத் தாக்கியுள்ளனர். ... னர் அருட்தந்தையையும் த... யுள்ளனர். அதன் பின்... அவர்கள் இருவரையும் க... றில் கட்டி விட்டு வீட்டிலிரு... சுவாமியின் 20 பவுண் ந... மற்றும் ஒரு லட்சம் ரூ... பணத்தை கொள்ளையடித்... சென்றுள்ளனர். அத்துடன்... யங்கள் எதுவும் மோப்ப ந... டம் சிக்கக் கூடாதென் ப... காக வீடு முழுவதும் மிள... தூளையும் தூவியுள்ளனர். இது தொடர்பில் முல்லைத்... பொலிஸ் நிலையத்தில் முறை... பாடு செய்யப்பட்டுள்ளது. (ற...)

### மதத்

அந்தப் படிவங்கள் எதிர்வ... 15ஆம் திகதி அவர்கள... மீளப் பெறப்படும்.
இந்தநிலையில், வாக்களி... தகுதியான அனைவரை... பதிவு செய்யும் நோக்கு... மதத் தலங்களில், வழிப... கள் முடிவடைந்த பின்... பி.சி. படிவத்தை விநியோ... பதற்கு நடவடிக்கை எடு... மாறு தேர்தல்கள் ஆணை... யாளர் மஹிந்த தேசப்பிரிய... சகல உதவித் தேர்தல்... ஆணையாளர்களுக்... பணிப்புரை விடுத்துள்ள... இதன்மூலம் வாக்காள... ளாகப் பதிவு செய்யும் செ... பாட்டை அதிகரிக்க முடி... என்று எதிர்பார்க்கப்படுகின்... இதற்கமைய, அடுத்த வ... முதல் இந்த நடவடிக்... செயற்படுத்தப்படவுள்ள... பள்ளிவாசல்களில் வெள்... கிழமைகளில் தொழு... முடிந்த பின்னரும், தேவ... யங்களில் ஞாயிற்றுக்கிழ... களில் ஆராதனை முடிந்த... னரும், அறநெறிப் பாடசா... கள் மற்றும் இந்துக்... ஒன்றுகூடும் இடங்களி... பி.சி. படிவங்கள் விநியோ... செய்யப்படவுள்ளன. (ற...)

### யாழ்தேவியில்

யாளம் காணப்படவில்லை... பளை நோக்கிப் பயண... யாழ்தேவி, மாங்குளம் ... யில் சென்றுகொண்டி... போதே இந்தச் சம்பவம் ... துள்ளது. உயிரிழந்தவ... சடலம் தற்போது வவு... மருத்துவனையில் ஒப்ப... கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பி... விசாரணைகளைப் பொ... ஸார் முன்னெடுத்து வரு... றனர். (ற-4-...)

# வெல்லப்போவது யார்?



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் அடுத்த டெஸ்ட் அணித் தலைவர் பதவிக்கு டிவில்லியர்ஸ் மற்றும் அம்லாவுக்கு இடையே கடும் போட்டி நிலவுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
தென்னாபிரிக்காவின் டெஸ்ட் அணித் தலைவராக இருந்த கிரேம் சிமித், கடந்த மார்ச் மாதத்துடன் ஓய்வை அறிவித்தார்.
இந்நிலையில், அடுத்த மாதம் இலங்கை செல்லும் தென்னாபிரிக்க அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க வுள்ளதால், புதிய அணித் தலைவரைத் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்துக்குத் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தள்ளப்பட்டுள்ளது.
தற்போதுள்ள நிலையில் இப்பதவிக்கு டிவில்லியர்ஸ், அம்லாவுக்கு இடையே கடுமையான போட்டி ஏற்பட்டுள்ளது.
ஒருநாள் போட்டிக்கு அணித் தலைவராக உள்ள டிவில்லியர்ஸ் டெஸ்ட்டில் துணை அணித் தலைவராகச் செயற்பட்டுள்ளார்.
அம்லாவைப் பொறுத்தவரை கடந்த 2002 இல் நியூஸிலாந்தில் நடந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில் அணித் தலைவராகச் செயற்பட்டுள்ளார்.
இது தவிர இவர், உள்ளூர் அணியான, டொல்பின்ஸ் அணிக்கு அணித் தலைவராக இருந்தார். ஆனால் துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்துவதற்காக, பதவியில் இருந்து விலகினார்.
மேலும், ஒருநாள் போட்டியில் இவர், துணை அணித் த்லைவராக தற்போது உள்ளார்.
சிறந்த துடுப்பாட்டக் காரர்களான இருவரும், வெளிப்படையாகத் தங்களுக்கு டெஸ்ட் அணித் தலைவர் பதவி கொடுத்தால் சிறப்பாகச் செயல்படுவோம் என தெரிவித்ததால், தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை குழப்பத்தில் உள்ளது. (த)

# நெய்மாரின் ரசிகை அஷ்வினி


அஷ்வினி

பிரபல இந்திய பட்மின்டன் நட்சத்திர வீராங்கனை அஷ்வினி பொன்னப்பா, தான் பிரேஸில் அணியின் உதைபந்து வீரர் நெய்மாரின் தீவிர ரசிகை எனக் கூறியுள்ளார்.
இன்னும் பத்து நாள்களில் உலகக்கிண்ண உதைபந்து போட்டிகள் தொடங்கவுள்ளன. இப்போழுதே உலகம் முழுவதும் அதனைக் கொண்டாட ரசிகர்கள் தயாராகி விட்டனர்.
இந்த நிலையில் இந்திய பட்மின்டன் வீராங்கனை அஷ்வினி கூறுகையில், உதைபந்தாட்டப் போட்டிகளில் வீரர்கள் கோல் அடிக்கும் திறனைப் பார்த்து வியந்துள்ளேன். ஒரு சில நேரங்களில் மிக நீண்ட தூரங்களில் இருந்து கோல் அடிப்பதைப் பார்க்கும் போதெல்லாம், நம்புவதற்கே கடினமாக இருக்கும்.
என்னைப் பொறுத்தவரையில் நான் பிரேஸில் வீரர் நெய்மாரின் ரசிகை. பார்ப்பதற்கு அழகாக இருக்கும் அவர், களத்திலும் அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்துகிறார். மேலும், பிரேஸில் அணி கிண்ணத்தை வெல்ல அதிக வாய்ப்புள்ளது என்று கூறியுள்ளார். (த)

# காலிறுதியில் ரபேல் நடால்

பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர்கள் ரபேல் நடால், டேவிட் பெரர் ஆகியோர் கால் இறுதிக்குத் தகுதி பெற்றனர். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் போட்டி பாரிஸ் நகரில் நடந்து வருகிறது.
இதில் 9ஆவது நாளான நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 8 முறை சம்பியன் பட்டம் வென்றவரும், உலக தர வரிசையில் முதலிடத்தில் இருப்பவருமான ரபெல் நடால் (ஸ்பெயின்), 83ஆம் நிலை வீரர் டுசன் லாஜோவிச்சை (செர் பியா) எதிர் கொண்டார்.
இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ரபேல் நடால் 6-1, 6-2, 6-1 என்ற நேர்செட்டில் லாஜோவிச்சை தோற்கடித்து காலிறுதிக்குத்தகுதி பெற்றார். கால் இறுதியில் ரபெல் நடால், சக நாட்டு வீரர் டேவிட் பெரரை சந்திக்கிறார். பெரர் 6-3, 6-3, 6-7, 6-1 என்ற செட் கணக்கில் தென் ஆப்பிரிக்கா வீரர் கெவின் ஆண்டர்சனை வீழ்த்தி கால் இறுதிக்குள் நுழைந்தார்.
பெண்கள் ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் இத்தாலி வீராங் கனை சாரா எர்ரானி 7-6 (7-5), 6-2 என்ற நேர்செட்டில் ஜெலீனா ஜோன்கோவிச் (செர்பியா) சாய்த்து கால் இறுதிக்கு தகுதி பெற்றார். மற்றொரு ஆட்டத்தில் ஆந்த்ரே பெட்கோவிச் (ஜெர்மனி) 1-6, 6-2, 7-5 என்ற செட் கணக்கில் கிகி பெர்டென்ஸ்சைத் (நெதர்லாந்து) தோற்கடித்து காலி றுதிக்குள் நுழைந்தார்.
இன்னொரு ஆட்டத்தில் ருமேனியா வீராங்கனை சிமோனா ஹாலெப் 6-4, 6-3 என்ற நேர்செட்டில் சலோன் ஸ்டீபன்சை (அமெரிக்கா) தோற்கடித்து கால் இறுதிக்குள் அடியெடுத்து வைத்தார். (த)


ரபேல் நடால்

# நீச்சல் உடையில் திருமணத்துக்கு வந்தார் சேரீனா வில்லியம்ஸ்



தோழியின் திருமணத்தில் நீச்சல் உடையில் கலந்து கொண்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் பிரபல ரென்னிஸ் வீராங்கனை.
பிரபல ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸின் தோழி கரோலின் வோஷ்னியாகி என்பவர் பிரபல கோல்ப் வீரர் ரோரி மொக்லோரியை கடந்த 3 வருடங்களாகக் காதலித்து வந்தார்.
இவர்களுக்கு கடந்த டிசெம்பர் மாதம் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. இவர்களது திருமணம் சமீபத்தில் மியாமிக் கடற்கரையில் வெகு விமரிசையாக நடந்தது. திருமணத்தில் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.
இந்தத் திருமணத்தில் செரீனா வில்லியம்ஸும் கலந்து கொண்டார். படுகவர்ச்சியான சிறுத்தையின் தோல் போல் புள்ளிகள் போட்ட நீச்சலுடையில் திருமணத்துக்கு வந்திருந்த செரீனா வில்லியம்ஸ், தனது தோழியை வாழ்த்தியதோடு விலையுயர்ந்த பரிசையும் கொடுத்தார்.
செரீனா வில்லியம்ஸின் நீச்சலுடையைப் பார்த்து திருமணத்துக்கு வந்திருந்தவர்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். ஆனால் எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல் நீச்சலுடையிலேயே புகைப்படக்காரர்களுக்குப் போஸ் கொடுத்தார்.
திருமணத்தில் கலந்துகொண்டவுடன் அப்படியே அருகில் உள்ள கடலில் குளிக்கச் சென்றுவிட்டார். இவரது படங்கள் அவரது இன்ஸ்டா கிராம் பக்கங்களிலும் இடம் பெற்று உள்ளது. (த)

# குஷியில் குத்தாட்டம் போட்ட ஷாருக்கான்



ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் கொல்கத்தா அணி கிண்ணம் வென்றதைத் தொடர்ந்து அதன் உரிமையாளர் ஷாருக்கான் உற்சாகத்தில் துள்ளிக் குதித்து நடனம் ஆடினார்.
பெங்களூர் சின்னச்சாமி அரங்கில் நடைபெற்ற ஐ.பி.எல். இறுதிப்போட்டியில் கொல்கத்தா அணி பஞ்சாப் அணியை வென்று கிண்ணத்தை இரண்டாவது முறையாகக் கைப்பற்றி அசத்தியது.
இந்த வெற்றி குறித்து பேசிய கொல்கத்தா அணியின் உரிமையாளர் ஷாருக்கான், மகத்தான இந்த வெற்றியை எனக்கு பெற்று தந்த கம்பீர் மற்றும் அவரது குழுவினருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வெற்றிக்கிண்ணத்தை எனது இளையமகன் அப்ரமுக்கு பரிசாக அளிக்கிறேன் என்று கூறியுள்ளார்.
மேலும் தனது உற்சாகத்தை வெளிப்படுத்தும் வண்ணம் மைதானத்தில் அவர் நடித்த படத்தின் பாடலுக்கு நடனம் ஆடி வெற்றியைக் கொண்டாடினார். (த)

# வடக்கு மாகாண வலைப்பந்தாட்டம் இன்று முதல் ஓமந்தையில் ஆரம்பம்

வலி.வடக்கு, ஜூன் 4

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே மாகாண மட்டத்தில் நடத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டிகளில் இன்று முதல் நாளை மறுதினம் வரை வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள வலைப்பந்தாட்டப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

கிளிநொச்சி முட்கொம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா மகா வித்தியாலயம்.

யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் எதிர் மன்னார் மாவிலங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

முல்லைத்தீவு கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.

வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் எதிர் மன்னார் ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் மன்னார் தூய யோசேப்வாஸ் மகா வித்தியாலயம்.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி எதிர் முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயம்.

கிளிநொச்சி மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் இருந்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மோதவுள்ளது.

**17 வயதுப் பிரிவு**

வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் எதிர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயம் எதிர் மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம்

யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம்.

முல்லைத்தீவு ஐயன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் மன்னார் சென். சேவியர் பெண்கள் கல்லூரி

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி எதிர் மன்னார் தூய யோசப் வாஸ் மகா வித்தியாலயம்.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி எதிர் கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

வவுனியா முதலியார்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் முல்லைத்தீவு தாண்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. இரண்டாம் சுற்றில் இருந்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

**19 வயதுப் பிரிவு**

வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரி எதிர் மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி எதிர் மன்னார் தூய யோசப் வாஸ் மகா வித்தியாலயம்.

வவுனியா பெரிய கோமரசன் குளம் மகா வித்தி யாலயம் எதிர் முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயம், முல்லைத்தீவு கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம்.

வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயம்.

கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு ஐயன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

இரண்டாம் சுற்றில் இருந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மோதவுள்ளது.

(த-86)

## அராலி ஜேம்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 4

சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையில் அராலி ஏ.எல். இளைஞர் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் அராலி ஜேம்ஸ் இளைஞர் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அராலி ஏ.எல். விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் அராலி ஜேம்ஸ்இளைஞர்கழகஅணியை எதிர்த்து வட்டுக்கோட்டை இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. இதில் அராலி இளைஞர் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்த வீரனாக அராலி ஜேம்ஸ் இளைஞர் கழக அணி வீரர் றினாத் தெரிவானார்.

சிறந்த கோல் காப்பாளராக ஜேம்ஸ் இளைஞர் கழக அணியின் கோல் காப்பாளர் கிருபா தெரிவானார். (த- 23)

## ஆட்டம் சமநிலையில்

**இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 6 பழங்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.**

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் லீக் முறையில் நடத்தும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணிக்கும் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 6 பழங்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

# தெல்லிப்பழை மகாஜன 36 ஓட்டங்களால் வெற்றி

வலி.வடக்கு, ஜூன் 4

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவுடன் நடைபெறும் 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 36 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 46.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ்.சர்மிலன் 38 ஓட்டங்களையும், ஜே.டிலோஜன் 26 ஓட்டங்களையும், ரி.தேனுஜன் 20 ஓட்டங்களையும், எம்.கமல்ராஜ் 17 ஓட்டங்களையும், ஜே.அனோஜன் 15 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 53 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.கலைச்செல்வன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுடன் 17 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளையும், வை.விதுசன் 3.2 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 06 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், எம்.ஜனுசன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 37 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், ஆர். தனுசன், ஜே.கீதசபா, எம்.கோபிராம் முறையே 08, 24, 28 ஓட்டங்களை கொடுத்து தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 45.1 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது.

எம்.கோபிராம் 40 ஓட்டங்களையும், ஆர்.அரவிந்தன் 26 ஓட்டங்களையும், வை.விதுசன் 22 ஓட்டங்களையும், கே.கிரித்தகணேஸ் 15 ஓட்டங்களையும், ஜே.சலுஜன் 12 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 31 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த எம்.பகீரதன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 16 ஓட்டங்களுக்கு 06 இலக்குகளையும், ஜே.அனோஜன் 04 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றத்துடன் 15 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும் எஸ்.சர்மிலன் 8.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றத்துடன் 26 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (த-86)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

அதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

மாலை 6 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கு இடையிலான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறும் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி மோதவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறும் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை சிவப்பு அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் லீக் முறையில் நடத்தும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை இ[illegible]வு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 4

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23-108)

# பாடசாலைகளுக்கு உதைபந்து வழங்கல்

பாடசாலைகளில் உதைபந்தாட்டத்தை வளர்க்கும் நோக்குடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் பாடசாலைகளுக்கு நேற்றுமுன்தினம் உதைபந்துகள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். நவநீதமணி தலைமையில் வடமராட்சிக் கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் பாடசாலைகளுக்கான உதைபந்துகளை வழங்கினார்.

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம், வல்வை சிதம்பராக் கல்லூரி, கலட்டி றோ.க.த.க. பாடசாலை, கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை, பொலிகண்டி பாலாவி வித்தியாலயம், வல்வை சிவகுரு வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, அல்வாய் றோ.க.த.க.பாடசாலை, அல்வாய் ஸ்ரீலங்காப் பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம், மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, ஆழியவளை அ.த.க.பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கே உதைபந்துகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் ஏ.அருளானந்தசோதி, பருத்தித்துறைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீராமச்சந்திரா, வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வக்குமரன், வல்வெட்டித்துறை நகரசபை உபதலைவரும், லீக்கின் உறுப்பினருமான எஸ்.சதீஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



*பாடசாலைகளுக்கான உதைபந்துகளை வழங்கும்போது...*

இதேவேளை முதல் முதலாக மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதி பெற்ற அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலையின் ஊக்குவிப்பிற்காக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் ஒரு தொகைப் பணம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்தப் பணத்தை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.

(த-108)



# உலகக் கிண்ண ரஷ்ய அணி

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடவுள்ள 23 பேர் கொண்ட ரஷ்ய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுபவம் வாய்ந்த தடுப்பாட்டக்காரர் செர்ஜி இக்னேஷேவிச், நடுவரிசை வீரர் ரோமன் ஷிரோகோவ், முன்கள வீரர் அலெக்சாண்டர் கெர்ஸாகோவ் ஆகியோருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

அணி விவரம்: இகர் அகின்பீவ், யூரி லோடிஜின், செர்ஜி ரிஷிகோவ். பின்களம்: வேஸிலி பெரேஸுட்ஸ்கை, செர்ஜி இக்னேஷேவிச், ஜார்ஜ் ஷென்னிகோவ், விளாடிமிர் கிரானாட், அலெக்ஸி கோஸ்லோவ், ஆன்ட்ரேய் யெஸ்சென்கோ, டிமிட்ரி கோம்பரோவ், ஆன்ட்ரேய் செமினோவ். நடுகளம்: இகர் டெனிசோவ், யூரி ஷிர்கோவ், ஆலன் ஷேகோவ், ரோமன் ஷிர்கோவ் டெனிஸ் குளுஷாகோவ், விக்டர் பெய்ஸுலின், ஒலெக் ஷாடோவ். முன்களம்: அலெக்சாண்டர் கெர்ஸாகோவ், அலெக்ஸி இயோனோவ், அலெக்சாண்டர் கோகோரின், மேக்ஸிம் கனுன்னிகோவ், அலெக் சாண்டர் சமேதோவ். (த)

# உலகக் கிண்ணப் போட்டிக்காக கட்டார் 50 லட்சம் டொலர்கள்

22 உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிச் சுற்றைக் கட்டாரில் நடத்துவதற்கு சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் சர்ச்சைக்குரிய வகையில் அனுமதித்தமை தொடர்பாக புதிது புதிதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

கட்டாரின் உலகக் கிண்ண மனுவை வெல்லச் செய்யும் பொருட்டு உதைபந்தாட்ட அதிகாரிகளின் ஆதரவை பெறுவதற்காகக் கட்டார் உதைபந்தாட்ட முன்னாள் அதிகாரியான மொஹமத் பின் ஹமாம் நன்கொடைகளை வாரி வழங்கியதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. [partly cut: ...விந்தவண்ணம் உள்ளன.]

50 லட்சம் அமெரிக்க டொலர்களை (சுமார் 30 கோடி இந்திய ரூபா) மொஹமத் பின் ஹமாம் வழங்கியதாக இலட்சக் கணக்கான இரகசிய ஆவணங்கள் கிடைத்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் உதவித் தலைவர் 2010 டிசெம்பர் மாதம் நடைபெற்ற வாக்கெடுப்பில் வெற்றி பெறும்பொருட்டு சட்டவிரோதமாக பணம் செலவிடப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச் சாட்டை கத்தார் உலகக் கிண்ண ஏற்பாட்டுக் குழவினரும் பின் ஹமாமும் முழுமையாக நிராகரித்துள்ளனர்.

பின் ஹமாம் ஒரு வருடத்துக்கு முன்னர் பணம் வழங்கியமை தொடர்பான தகவல்கள் மின்னஞ்சல்கள் மூலமாக வெளிவரத் தொடங்கியுள்ளன.

கட்டாரின் மனுவுக்கு ஆதரவு திரட்டும் பொருட்டு ஆபிரிக்காவில் உள்ள உதைபந்தாட்ட அதிகாரிகளுக்கு பின் ஹமாம் நேரடியாக பணம் வழங்கியதை இந்த ஆவணங்கள் எடுத்துக்காட்டுவதாக ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் இதனை கட்டார் உறுதியாக நிராகரித்துள்ளது. பின் ஹமாம் எவ்வித தவறும் செய்யவில்லை எனவும் கட்டாரின் மனு தொடர்பான விடயங்களில் பின் ஹமாம் உத்தியோகபூர்வ ஒத்துழைப்பு எதனையும் வழங்கவில்லை எனவும் கட்டார் 2022 பிரசார நடவடிக்கைகளில் அவர் சுயாதீனமாக செயற்பட்டதாகவும் கட்டார் தெரிவித்துள்ளது. (த)



# யூசுப் பதான் சாதனை

ஐ.பி.எல். தொடரில் 3 முறை சாம்பியன் பட்டம் வென்ற வீரர் என்ற சாதனையை யூசுப் பதான் படைத்துள்ளார்.

அறிமுக ஐ.பி.எல். போட்டி 2008 ஆம் ஆண்டு தொடங்கியது. இதில் கிண்ணம் வென்ற ராஜஸ்தான் றொயல்ஸ் அணியில் இடம் பெற்றிருந்தார்.

இதேபோல் 2012 ஆம் ஆண்டு மற்றும் தற்போது கிண்ணம் வென்ற கொல்கத்தா அணியிலும் யூசுப் பதான் இடம் பெற்றுள்ளார். மேலும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தொடர்ந்து 9 ஆட்டத்தில் வெற்றி பெற்றது. இது ஐ.பி.எல்.போட்டியில் சாதனையாகும். இதற்கு முன்பு பஞ்சாப் அணி தொடர்ந்து 8 வெற்றி பெற்றதே சாதனையாக இருந்தது. (த)

# 2014 ஐ.பி.எல். கனவு அணியில் விர்த்திமான் சகா, மொகித் சர்மா





7ஆவது ஐ.பி.எல். போட்டியின் அடிப்படையில் கிரிக்இன்போ இணையதளம் கனவு அணியை வெளியிட்டுள்ளது.

இதில் பஞ்சாப் அணி வீரர் விர்த்திமான் சகா, சென்னை சூப்பர்கிங்ஸ் வீரர் மொகித் சர்மா இடம் பெற்று உள்ளனர்.

ஐ.பி.எல்.கனவு அணி வருமாறு:

1. உத்தப்பா (கொல்கத்தா), 2. டேவிட் வோர்ணர் (ஐதராபாத்), 3. ரெய்னா (சென்னை), 4. விர்த்திமான் சகா (பஞ்சாப்), 5. மக்ஸ்வெல் (பஞ்சாப்), 6. டோனி (சென்னை), 7. அக் ஷர்படேல் (பஞ்சாப்), 8. புவனேஸ்வர்குமார் (ஐதராபாத்), 9. மொகித்சர்மா (சென்னை), 10. மலிங்க (மும்பை), 11. சுனில்நரைன் (கொல்கத்தா), 12ஆவது வீரர் சகிப்அல்ஹசன் (கொல்கத்தா). (த)

இலவசமாக ஆங்கிலம் கற்க அரிய வாய்ப்பு
CAMBRIDGE ENGLISH
Pre-starters முன்பள்ளி, தரம் 1, 2 | Young Learners தரம் 03, 04, 05
Teens தரம் 06-11 O/L தயார்ப்படுத்தல் | General User ஏனையோர்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ். அடிப்படையில் இருந்து கற்கலாம்.
பிரிவொன்றில் 07 மாணவர்கள் மட்டுமே. மல்ரி மீடியா வசதியுள்ள வகுப்பறை.
பாடஅலகு ஒன்று இலவசமாகக் கற்கலாம்.
ALISON DIGILITE
3, (பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்) பொற்பதி வீதி, கொக்குவில். 0779866409

மிகக் குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு–மதுரை | –16500 | RTN |
| கொழும்பு–சென்னை | –21900 | RTN |
| கொழும்பு–திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு–டோகா | –26000 | O/W |
| கொழும்பு–பெங்களூர் | –27600 | RTN |
| கொழும்பு–மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு–சிங்கப்பூர் | –30200 | RTN |
| கொழும்பு–பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழும்பு–லண்டன் | –44800 | O/W |
| கொழும்பு–சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு–கனடா | –105700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0214 920 920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

தேவை
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வியாபார நிலையத்துக்கு பின்வரும் வேலையாளர்கள் தேவைப் படுகிறார்கள்.
Cashier, Sales man, Bill Clerk
அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகட்கு:- 077 5442717
021 222 4544

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது, யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்
பிரான்ஸ் செல்வோர் அனுமதிகளுக்கு முந்துங்கள் 14.6.2014 11am
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கச்சேரி → எக்காளத்தொனி கிறிஸ்தவ ஆலயம் → AF
ஆரியகுளம் → நக்கா றோட் (J/John Bosco's School) → AF

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

ST.Antony's Jaffna Town
Computer Repair
Laptop Repair
Tap Pc Repair
Digital Camera repair
I Phone Repair
ஆலோசனை இலவசம்
021-222-4865,075-0698 608
16 வது வருட சேவையில்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சிந்திக்க மறக்கும் மனிதர்கள்

ராஜராஜன்

பிரேத ஊர்வலம் ஒன்றின் போது வெடி கொளுத்தியமை தொடர்பாக இருபகுதியினருக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் வாள்வெட்டிலும் வீடு எரிப்பிலும் முடிந்துள்ளது. மரண வீடு என்பது சோகத்தைப் பிரதிபலிக்கும் ஓர் இடமாகும். இறந்தவர் மீண்டும் எழுந்து வரமாட்டார் என்ற நினைப்பு இதயங்களில் ஊசியால் குத்துவதைப் போன்றதொரு வலியை ஏற்படுத்த இறந்தவரின் உறவினர்களும், தெரிந்தவர்களும் சோகம் கப்பிய முகங்களுடன் இருப்பதையும், சிலர் பிரிவுத் துயரைத் தாங்க முடியாது அழுது புலம்புவதையும் முன்பெல்லாம் காணமுடிந்தது.

மேலும், தகனக்கிரியைகள் முடிந்து வீடு திரும்பிய போதிலும் தலைக்கு நீர் ஊற்றாமல் வாயில் பச்சைத் தண்ணீரைக் கூட ஊற்றாமல் இருக்கும் வழக்கமும் அன்று காணப்பட்டது. ஆனால் இன்று சாவு வீடு கூட ஒரு வைபவம் போன்று மாற்றியமைக்கப்பட்ட அலங்கோலத்தைக் காண்கின்றோம். அங்கு வருபவர்களுக்கு குளிர்பானம் வழங்குவது வழக்கமாகி வருவதுடன், சில இடங்களில் தேநீர் கூட வழங்குகின்றனர். புகைத்தல் பொருள்களை வழங்குவதும், மதுபான வகைகள் தாராளமாகவே பரிமாறப்படுவதும் சர்வ சாதாரண விடயங்களாக மாறிவிட்டன. எமது முன்னோர்கள் சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு சாவு வீட்டில் உண்பதற்கும், பானங்களைப் பருகுவதற்கும் தடை விதித்தனர். ஆனால் இன்றோ நாகரிகத்தின் பெயரால் இவையாவும் மீறப்பட்டு வருகின்றன. இதன் பயனாகவே மோதல்களும் ஏற்பட்டுவருகின்றன.

மேலே குறிப்பிட்ட சம்பவம் கூட அதில் ஈடுபட்டவர்கள் சுய நினைவில் இருந்துகொண்டு புரிந்ததாகக் கூற முடியாது. அவர்களின் வயிற்றினுள் புகுந்து கொண்ட மது என்ற அரக்கன் ஒருவனின் தூண்டுதல் காரணமாகவே இவை நிகழ்த்தப்பட்டுள்ளன.

இதில் மேலும் ஒரு விடயத்தையும் நாம் அவதானிக்க முடிகின்றது. மனிதர்களின் மன்னிக்கும் குணமும், பெருந்தன்மையும் இப்போதெல்லாம் மெல்ல-மெல்ல மறையத் தொடங்கிவிட்டன. சிறிய சிறிய விடயங்களையெல்லாம் பெரிதாக எடுத்துக்கொண்டு மோதிக் கொள்ளும் மனோபாவம் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. இது எங்கு கொண்டு போய் விடப்போகின்றதோ என்ற கவலையும் எழுந்துள்ளது.

மனிதர்கள் நாகரிகத்திலும், விஞ்ஞானத்திலும் எவ்வளவுதான் வளர்ச்சி பெற்றாலும் தமது முன்னோர்கள் காட்டிய வழிகளில் தமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர வேண்டும். ஏனென்றால் அவைதான் இன்றளவும் இந்த உலகத்தை நிலைநிறுத்தி வைத்துள்ளன.

ஆனால், இன்றைய மனிதர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற வகையில் தமது வாழ்க்கையை அமைக்கப் பழகிவிட்டனர். திருமணம், சாவு வீடு ஆகியவை வெறும் சடங்குகளாகவே இன்று பார்க்கப்படுகின்றன. தமது பணப் பெருமையையும், ஆட்பலத்தையும் வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பமாகவும் சிலர் இவற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். பணம் தண்ணீராகச் செலவழிந்தாலும் பரவாயில்லை. தாம் சமூகத்தில் பேசப்பட்டால் போதுமென்ற மனநிலையில் இவர்கள் காணப்படுகின்றனர். ஆனால் வசதிகுறைவானவர்களின் நிலைதான் பரிதாபமாக மாறிவிட்டது.

கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே உரியது. அது ஆண்களை எந்த வகையிலும் கட்டுப்படுத்திவிட முடியாது என்ற எண்ணம் இன்று கூட அழியாமல் காணப்படுகின்றது. என்ன நேர்ந்தாலும் பாதிக்கப்படுபவள் பெண் என்பதற்காக இத்தகையதொரு தவறான எண்ணம் விதைக்கப்பட்டு விட்டது. ஆனால் எயிட்ஸ் என்னும் உயிர்க்கொல்லி நோய் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கற்பு என்பது பொதுவானது என்பதை எடுத் துக் காட்டி விட்டது. ஆகவே இனியாவது கற்பு என்பது ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவான ஒன்றுதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் மனக் கட்டுப்பாட்டுடன் இருந்தால் எம்மை எவராலும் எதுவும் செய்துவிட முடியாது. முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விளையாட்டுப் போட்டியின்போது வெற்றி பெற்றவர்களுக்கு பியர் பானம் பரிசாக வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இது இளைஞர் சமுதாயத்தைச் சீரழிக்கும் ஒரு செயலென தமிழர் தரப்பிலிருந்து கடும் கண்டனங்களும் எழுந்தன. தவிர்க்க முடியாத நிலையில் பியரைப் பரிசாகப் பெற்ற இளைஞர்கள் அதை அருந்த வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. அதனைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து விடலாம். இலவசமாகக் கிடைக்கின்றது என்பதற்காக கொடிய விஷத்தை அருந்துபவர்கள் எவருமே இருக்க முடியாது. இந்த பியர் விடயத்திலும் இதனையே பின்பற்றலாம். அப்போதுதான் அதனை அன்பளிப்புச் செய்தவர்கள் தலைகுனிந்து நிற்க முடியும்.

மேலும் ஒரு செயலைச் செய்வதற்கு முன்னர் அது தொடர்பாகப் பலமுறை சிந்திக்க வேண்டும். அதன் பின்விளைவுகளும் ஆராயப்பட வேண்டும். ஆத்திரத்தில் எத்தனையோ செய்துவிட்டுப் பின்னர் அழுது கொண்டிருப்பதில் பயனேதும் இல்லை. ஆகவே சிந்தனைக்கே மனிதர்கள் முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

இன்று உலகளாவிய ரீதியில் பணத்தின் ஆட்சியே இடம்பெற்று வருகின்றது. பணம் புகுந்து விளையாடாத இடமே இல்லையென்று கூறுமளவுக்கு நிலைமை மாறிவிட்டது. இதனால்தான் பணம் பாதாளம்வரை பாயுமென்று கூறினார்கள் எமது முன்னோர். ஆனால் பணமே வாழ்க்கை ஆகிவிடாது. வாழ்க்கைக்குப் பணம் தேவைதான். ஆனால் அதனைப் பூசித்து வணங்கிக் கொண்டிருப்பது வாழ்க்கைக்கு உதவாது. உறவுகளைக் கூட பணத்தின் அளவுகோல் கொண்டு அளந்து வைத்திருப்பது எந்த வகையிலும் நியாயமானதல்ல. பணம் உள்ளவர்களுடன் நெருக்கத்தை வைத்துக் கொள்வதும். இல்லாதவர்களை ஒதுக்கி வைப்பதும்தான் இன்று வழக்கமாகி விட்டது. இதனால் உறவு முறைகள் சிதைக்கப்படுகின்றன. உறவினர்கள் எட்டி எட்டிச் செல்லும் நிலை உருவாகின்றது. இது எதிர்காலத்தில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

ஆகவே மனிதனாகப் பிறந்தவர்கள் எதனையும் சிந்தித்துப் பார்த்த பின்னரே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவசர கோலத்தில் முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந்தப் பரந்த உலகிலே வாழ்க்கைக்கான வாய்ப்புக்கள் நிறையவே காணப்படுகின்றன. அவற்றைத் தேடிப் பிடித்துக் கொள்வது மனிதர்களின் தெரிவுக்கே விடப்பட்டுள்ளது. இதில் ஏற்படும் வெற்றியும் தோல்வியும் ஒவ்வொருவரது இயல்பையும் பொறுத்தே அமைந்துள்ளது. ஆகவே சிந்திக்கத் தெரிந்த மிருகம் என அழைக்கப்படும் மனிதர்கள் அதற்கேற்றவாறு சிந்தனைக்கு முக்கிய இடம் வழங்க வேண்டும். இதனைவிடுத்து மிருகங்களைப் போன்று நடந்து கொண்டால் வாழ்க்கை எப்போதுமே சுமையாகவே தோன்றும். அதில் வேதனையும், வெறுப்பும், சோகமும் கலந்திருக்கும்.

மனிதர்கள் அதற்கேற்றவாறு சிந்தனைக்கு முக்கிய இடம் வழங்க வேண்டும். இதனை விடுத்து மிருகங்களைப் போன்று நடந்து கொண்டால் வாழ்க்கை எப்போதுமே சுமையாகவே தோன்றும்.



# பட்டதாரியுடன் அவரது நாயையும் கௌரவித்த பல்கலைக்கழகம்

அமெரிக்காவில் பார்வை இழந்த நபரொருவருக்கு துணையாக இருந்த அவரது செல்ல நாய்க்கும் பட்டம் வழங்கப்பட்டது.

அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் வில்லியம் ஓ டொன்னெல் என்ற நபர் வசித்து வருகிறார்.

பிறவியிலேயே கண் பார்வைய்யை இழந்த அவர், தனது சோகத்தை மறந்து மிகுந்த தன்னம்பிக்கையுடனும்ஆர்வத்துடனும் ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். இதன் பின்னர் பிரபல பல்கலைக் கழகமான யூமாஸ் பொஸ்டனில் தனது பட்டப்படிப்பை முடித்த அவருக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் வில்லியத்துக்குப் பல்வேறு விதங்களில் உறு துணையாக இருந்த அவரது செல்ல நாய்க்கும் பல்கலைக்கழக நிர்வாகம் கௌரவப் பட்டம் வழங்கி மகிழ்வித்துள்ளது.







# நுரையீரல் புற்றுநோயை தடுக்கும் மரக்கறிகள்

> பச்சை நிறத்திலான மரக்கறிகளை நாம் அதிகம் உண்பதால் தொண்டைப் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதில் இருந்து தப்பிக்கலாம்.

காய்கறிகள் என்பது இயற்கை நமக்கு அளித்துள்ள கொடை எனலாம். காய்கறிகளில் நார்ச்சத்து, விற்றமின், கனிமச் சத்துகள் உள்ளிட்ட உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான எண்ணற்ற சத்துகள் உள்ளன.

மரக்கறிகளை உண்பதால் உடல் எடை அதிகரிக்காது. கலோரி அளவும் குறைவாகவே இருக்கும். பச்சை நிறத்திலான மரக்கறிகளை நாம் அதிகம் உண்பதால் தொண்டைப் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதில் இருந்து தப்பிக்கலாம்.

இந்த வகை காய்கறிகளில் உடலுக்கு விற்றமின் 'ஏ' சத்தை அளிக்கக்கூடிய பொருள்கள் உள்ளன. கரட், உருளைக்கிழங்கு போன்றவை இந்த வகைக் காய்கறிகளில் அடங்கும்.

நெல்லிக்காய், எலுமிச்சை ஆகியவற்றில் அதிக அளவு விற்றமின் சி இருப்பதால் இவற்றைச் சாப்பிடுவதாலும் புற்றுநோய் வராமல் தவிர்க்கலாம்.

மிளகு, முட்டைகோஸ், தக்காளி, கீரைகள் உள்ளிட்ட பயறு வகைகள், பீற்றூட், உருளைக்கிழங்கு ஆகியவற்றில் அதிக அளவு இரும்புச் சத்து உள்ளது. வேறு சில காய்கறிகளில் இரும்புச் சத்துகள் அதிகம் இருக்கும்.

இவற்றால் உடலின் இரத்தம் தூய்மையாவதுடன் உடலுக்குத் தேவையான சக்தியும் கிடைக்கிறது. இரும்புச் சத்து மிகக் குறைவாக இருப்பின் அனீமியா எனப்படும் இரத்தச் சோகை நோய் ஏற்படும்.

பட்டாணி, கொண்டைக் கடலை உள்ளிட்ட பயறு வகைகள், பீற்றூட், உருளைக்கிழங்கு ஆகியவற்றில் அதிக அளவு இரும்புச் சத்து உள்ளது. முட்டைகோஸ் உள்ளிட்ட கரும்பச்சை நிறத்தில் உள்ள காய்கறிகளில் அதிகளவு கல்சியமும் உள்ளதால் ஆரோக்கியமான எலும்பு மற்றும் பற்களுக்கு அவை அவசியமாகின்றன.

அனைத்துக் காய்கறிகளுமே நார்ச்சத்தைக் கொண்டிருக்கின்றன.



# காலையில் உடற்பயிற்சி செய்வது நல்ல தூக்கத்தை தரும்

உடற்பயிற்சி என்றால் அது கடினமானதாகத் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. தற்போதுள்ள கால கட்டத்தில் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கான வழிகளில் ஒன்றாக உடற்பயிற்சி உள்ளது.



உடற்பயிற்சியின் மகத்துவத்தை உணர்ந்தவர்கள் மட்டுமே தினமும் உடற்பயிற்சியை மேற்கொள்கிறார்கள். ஆனால் சிலர் உடற்பயிற்சி செய்ய வேண்டுமென்று நினைப்பார்கள். எனினும் சோம்பேறித்தனத்தால், உடற்பயிற்சி தானே நாளை செய்து கொள்ளலாம் என்று விட்டுவிடுவார்கள். குறிப்பாக உடற்பயிற்சியை காலையில் செய்தால் அதனால் கிடைக்கும் பயன்கள் என்னவென்று தெரிந்து கொள்வோம்.

பசியின்மையால் அவஸ்தைப்படுபவர்கள், காலையில் உடற்பயிற்சியைச் செய்து வந்தால், நன்கு பசி எடுக்கும். அதனால் மூன்று வேளையும் சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல் செரிமான மண்டலம் மற்றும் குடலியக்கம் சீராக வேலை செய்ய ஆரம்பிக்கும்.

தினமும் காலையில் உடற்பயிற்சி செய்து வர, உடலின் ஆற்றல் அதிகரித்து, நாள் முழுவதும் நன்கு ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்புடனும் உங்கள் வேலைகளைத் தொடர முடியும். காலையில் செய்யப்படும் உடற்பயிற்சியினால் மனம் நன்கு இலேசாகி இருப்பதுடன், எதிலும் நன்கு கவனத்தைச் செலுத்த முடிவதுடன், புத்தி கூர்மையாக , சுறுசுறுப்பாக இருக்கும்.

தினமும் காலையில் 20 நிமிடம் உடற்பயிற்சியை செய்தால், மன அழுத்தம் மற்றும் மன இறுக்கத்தில் இருந்து விடுபடலாம். மேலும் எப்போதாவது மனம் மிகவும் கஷ்டமாக இருக்கும் போது, காலையில் சிறிது தூரம் நடந்தால், நல்ல காற்றைச் சுவாசிக்க நேரிடும்.


இதனால் மனம் லேசாகிவிடும். எடையைக் குறைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள், காலையில் உடற்பயிற்சியைச் செய்து வந்தால், உடலின் கலோரிகள் விரைவில் கரைக்கப்படும். ஆய்வு ஒன்றில் மாலையில் உடற்பயிற்சி செய்பவர்களை விட, காலையில் உடற்பயிற்சி செய்வோருக்குத் தான் நல்ல நிம்மதியான தூக்கம் வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

ஏனெனில் தசைகளானது தளர்வடைய நேரம் அதிகம் தேவைப்படுவதால், காலையில் உடற்பயிற்சி செய்தால் தான், உடற்பயிற்சியின்போது இறுக்கமடைந்த தசைகள் தளர்வடையும். அதுவே மாலையில் செய்தால், அது தூக்கத்துக்கு இடையூறு விளைவிக்கும்.



காலையில் உடற்பயிற்சி செய்தால், உடலின் மெட்டபாலிசம் அதிகரிப்பதுடன், இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு மற்றும் தசைகளுக்கு செல்லும் இரத்தத்தின் அளவை சீராக வைத்துக் கொள்ளும். எனவே தினமும் காலையில் 30 நிமிட நேரம் உடற்பயிற்சி செய்து வந்தால் அதிக நன்மைகளை அடையலாம்.

# மனதை மயக்கும் மாயப் புதிர்



'ரூபிக்ஸ் கியூப்' பற்றிக் கேள்விபட்டிருக்கிறீர்களா? மூளைக்கு வேலை தரக்கூடிய சவாலான ஒரு விளையாட்டு. அது எப்படி வந்தது தெரியுமா?

ஹங்கேரியைச் சேர்ந்த கட்டடக் கலைப் பேராசிரியர் எர்னோ ரூபிக் 1974 இல் ஒரு புதுமையான, புதிரான கன சதுரத்தை உருவாக்கினார். இதை உடைக்கவோ பிரிக்கவோ முடியாது. ஆனால், தனித்தனியாகச் சுற்றும் வகையில் அது அமைக்கப்பட்டிருந்தது. இதில் வண்ண மயமான ஸ்டிக்கர்களை ஒட்டி அதை ஒரு விளையாட்டுப் பொருளாக்கினார். முதலில் உருவாக்கப்பட்ட ரூபிக் கன சதுரம் ( Rubik's Cube) எனப் பெயர் பெற்றது இவ்வாறு தான்.

ஒரே மாதிரியான நிறங்களை ஒரே பக்கத்தில் கொண்டு வந்து தனது புதிரை விடுவிக்க அவருக்கு ஒரு மாதம் எடுத்தது. இதன்பின்னர் உலகத்திலேயே மிக அதிகமாக விற்பனையாகும் விளையாட்டுப் பொருளாக ரூபிக் கனசதுரத்தை உருவாக்க ஆசைப்பட்டார். ஒரு சில மாற்றங்களை அதில் ஏற்படுத்திய பின்னர் மிகவும் பிரபலமான விளையாட்டுப் பொருளானது ரூபிக் கன சதுரம்.

முதலில் தனது மாணவர்களிடமும் நண்பர்களிடமும் அதை அறிமுகப்படுத்தினார். முதன் முதலில் பொலைட்செனிகா என்னும் நிறுவனம் ரூபிக் கன சதுரத்தைத் தயாரித்து விநியோகித்தது.

தொடக்க காலத்தில் தயாரிக்கப்பட்ட ரூபிக் கன சதுரம் 'மஜிக்' 'க்யூப்' என அழைக்கப்பட்டது. எடையும் இரு மடங்கு அதிகமாக இருந்தது. ஹங்கேரியில் பிரபலமாகியிருந்த இந்த ரூபிக் கன சதுரத்தைக் கணித அறிஞர்கள் உலகெங்கும் நடைபெற்ற கருத்தரங்குகளுக்குக் கொண்டு சென்றனர்.

1979 இல் நுரெம்பெர்க் விளையாட்டுப் பொருள் கண்காட்சியில் இது இடம்பெற்றது. அப்போது அங்கே வந்திருந்த டாம் க்ரெமெர் என்னும் விளையாட்டுப் பொருள் நிபுணர், உலகம் முழுவதிலும் இதை விற்பனைக்கு விடச் சம்மதித்தார். அதைத் தொடர்ந்து ஐடியல் டாய் நிறுவனம், மஜிக் க்யூப் என்னும் பெயரை ரூபிக் நினைவாக 'ரூபிக்' 'க்யூப்' என மாற்றி விநியோகித்தது.

1980 இல் இது உலகச் சந்தையில் அறிமுகமானது. அந்த ஆண்டு ஜேர்மனியின் சிறந்த விளையாட்டுக்கான விருதைப் பெற்றது. உலகத்தில் இதுவரை விற்பனையான ரூபிக் கன சதுரத்தின் எண்ணிக்கை 35 கோடி என்கிறார்கள். இன்று உலகத்தில் மிக அதிகமான விற்பனையாகும் விளையாட்டுப்பொருளும் இதுதான். 40 ஆண்டுகளைத் தாண்டியும் வெற்றி நடைபோடுகிறது இந்தக் கன சதுரப் புதிர்.




# ஒப்புரவை அறிந்த போதகர் அருட்திரு பென்யமின் ஜெயராஜா



அறிமுகம்

*"ஒத்தறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப்படும்"*

குறள் 214.

ஒப்புரவை அறிந்து போற்றிப் பிறர்க்கு உதவியாக வாழ்கின்றவன் உயிர் வாழ்கின்றவன் ஆவான்; மற்றவன் செத்தவருள் ஒருவனாகச் சேர்த்துக் கருதப்படுவான், என்பது குறள். இந்தக் குறளின் படி ஒழுகியவர் பென் யமின் ஜெய ராஜா அடிகளார். கடந்த சித்திரை மாதம் 28ஆம் திகதி (2014), மருதனார்மடம் இறையியல் கல்லூரியி லிருந்து வந்த தொலைபேசி அழைப்பொன்று பென்ய மின் போதகர் இறந்த செய்தியை உறுதிப்படுத்தியது. அன்னாரின் இழப்பு அவரது மூன்று சகோதரர்களுக்கும், மூன்று சகோதரிகளுக்கும், மனைவி, பிள்ளைகள், மருமகன் யூட்கமிலஸ் அனைவருக்கும் ஒரு பேரிழப்பாகும்.

தோற்றம்

அன்னார் காலஞ்சென்ற அலிஸ் நாகம்மா, பெஞ்யமின் ஆகியோரின் மூத்த புதல்வராவார். 1949ஆம் ஆண்டு ஆனி 8ஆம் திகதி காரைநகரில் கிறிஸ்தவ குடும்பம் ஒன்றில் பிறந்தார்.

அன்னார் தம்து ஆரம்பக் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்றார். விஞ்ஞானத் துறையில் மிகவும் ஆர்வமுள்ள மாணவனாக இருந்தமையால், உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய பின்னர் ஐந்து வருடங்கள் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் இலங்கை பாற் சபையில் தொழில்நுட்பவியலாளராக 15 வருடங்கள் பணி புரிந்தார். இக்காலத்தில் திருமண வாழ்வில் தம்மை இணைத்துக் கொண்டார்.

இறையியல் ஈடுபாடு

உலகத் துறைகளிலிருந்து ஒவ்வொன்றாக இளைப்பாறிய போதகர் தமது இறுதி இலக்காக இறை பணியில் ஈடுபாடு கொண்டார். இறை அழைப்பை உணர்ந்து கொண்ட அவர், தென்னிந்திய திருச்சபையின் யாழ். திருமண்டலத்தின் இரண்டாவது பேராயர் அருட் கலாநிதி டேவிட் ஜெயரட்ணம் அம்பலவாணர் அவர்களிடம் விண்ணப்பித்தார். விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட பேராயர் 1987ஆம் ஆண்டு இறையியல் கல்லூரி (மருதனார் மடம்)யில் சேர்ந்து இறையியல் பட்டப் படிப்பைத் தொடர அனுமதித்தார்.

## நீத்தார் நயப்புரை

இறை பணி

1992ஆம் ஆண்டு தமது இறையியல் அடிப்படைக் கல்வியைப் பெற்று வெளியேறிய போதகர், வன்னிப் பெரு நிலப்பரப்பில் நிலை கொண்டிருந்த கோணாவில், அக்கராயன்குளம் ஆகிய திருச்சபைகளின் ஊழியனாக ஆதீனத்தினால் நியமிக்கப்பட்டார்.

இறையியல் கல்லூரியில்

இறையியல் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்ற பின்னர் 2001ஆம் ஆண்டு முதல் ஏழாலை வடக்கு-தெற்கு ஆகிய இரு திருச்சபைகளிலும் பணியாற்றிய பென்யமின் போதகர் 2003ஆம் ஆண்டு தொடக்கம் இறையியல் கல்லூரி (மருதனார்மடம்)யில் ஒரு விரிவுரையாளராக இணைக்கப்பட்டார். தமது மரணம்வரை இறையியல் கல்லூரியில் தங்கியிருந்த போதகர் பென்யமின் விரிவுரையாளராகவும், மாணவர் நலன் காப்பாளராகவும், பதிவாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இறுதிக் காலம்

அன்னார் இறுதிக் காலம்வரை பல நிர்வாகப் பொறுப்புகளில் பங்குகொண்டு ஆதீனத்துக்கும் குடும்பத்துக்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்கள். தென்னிந்திய திருச்சபையில் மகா சபைப் பிரதிநிதியாகவும், மருத்துவ சபையின் பிரதிநிதியாகவும், நிதி மற்றும் சொத்துப் பராமரிப்பு சபையின் பிரதிநிதியாகவும் செயற்பட்டுள்ளார். யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபை பிரதிநிதியாகவும், உடுவில் மகளிர் கல்லூரி நிர்வாக சபை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். இத்தனை நிர்வாகங்களிலும் பங்குகொண்ட அவர் தமது முதன்மைப் பணியாக, பங்குத் தந்தையாகவும், பிரதேச முகாமைக் குருவாகவும் இருந்து பணியாற்றியுள்ளார். நீண்ட காலமாக தெல்லிப்பழை, உடுவில், இணுவில், தேவகிராமம் திருச்சபைக் குருவாகவும் பணி செய்துள்ளார். மருதனார்மடம் விவசாயக் கல்லூரியின் வளாகக் குருவாகவும், மக்லியொட் மிஷன் வைத்தியசாலையின் வளாகக் குருவாகவும் இருந்து பணி புரிந்துள்ள பென்யமின் போதகர் அவர்களின் ஆத்மா சாந்தியடையவும், குடும்ப அங்கத்தவர்கள் தேற்றப்படவும் இறை வனிடம் பிரார்த்திக்கிறேன்.

*வண. தேவ அருட் செல்வம், விரிவுரையாளர்,*
*இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்*





# இயற்கையின் ஆக்கமும் அழித்தலும் எரிமலைகள்

ஜெயச்சந்திரன்

இயற்கையின் பல சக்திகள் இந்தப் பிரபஞ்சத்தில், அழிவையும், ஆனால் அதே சமயம் அதிசயிக்கும் வகையில் ஆக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளன. உதாரணத்திற்கு எரிமலைகளை எடுத்துக் கொள்வோம். எரிமலைகள் ஆக்க சக்தியா?'. என்று ஆச்சரியம் வரத்தான் செய்யும். எரிமலைகள் இந்த பூமியில் இல்லை என்றால் இந்த கட்டுரை எழுத நானும் இருந்திருக்க மாட்டேன், படிப்பதற்கு நீங்களும் இருந்திருக்க மாட்டீர்கள். இப்படிச் சொன்னால் நம்புவதற்கு மிகவும் கடினமாகத்தான் இருக்கும். புவியில் உயிர்கள் வாழ்வதற்கு எரிமலைகள் அந்த அளவுக்குப் பெரும் பங்களித்திருக்கின்றன.

எரிமலைகளின் அழிக்கும் சக்தியை முதலில் பார்ப்போம். எரிமலைகள் நமக்கு அருகிலேயே, அமைதியாக இருக்கும். ஆனால், திடீரென்று ஒருநாள் தீவிரவாத தாக்குதல் போல வெடித்துச் சிதறும். சில எரிமலைகள் எங்கே ஒளிந்திருக்கின்றன என்பதே தெரியாது. கடலுக்கு அடியில் ஒளிந்திருக்கும் எரிமலை ஹவாய் தீவுகளில் அதிகம் காணப்படுகின்றன. அவை லாவா எனப்படும் நெருப்பு குழம்புகளை கடலில் கக்கும் போது, கடலுக்கு உள்ளேயே அந்த நெருப்புப் பாறைகள் தீப்பற்றி எரிந்தபடியே விழுவது, கண் கொள்ளாக் காட்சி.

சமீபத்தில், ஐஸ்லாந்தில் பனிக்கு அடியில் இருந்து வந்த எரிமலைகள் வெடித்து, பெரும் புகையைக் கக்கி, ஐரோப்பாவின் அந்தப் பகுதியில் விமானப் போக்குவரத்து பல நாள்கள் தடைப்பட்டது. பூமியின் வினோதத்தைப் பாருங்கள். எங்கு பார்த்தாலும் பனி படர்ந்த நிலம். ஆனால், அங்கே பூமிக்கு அடியில் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் எரிமலைக் குழம்புகள். அவை வெடித்து வானில் இருபது கிலோ மீற்றர் உயரம் வரை புகை கிளம்பியது.

ஐஸ்லாந்திலும் பூமியின் வேறு பல பகுதிகளிலும் வெப்ப நீரூற்றுக்களும், வெப்பமான குட்டைகளும் காணப்படுகின்றன. குளிர்ப் பிரதேசமான ஐஸ்லாந்து போன்ற பகுதிகளில் உள்ள வெப்பநீர்க் குட்டைகளில் மக்கள் ஆர்வத்துடன் குளிப்பார்கள். அவர்களுக்கு ஓர் உண்மை தெரியாது. தெரிந்தால் அந்தப் பக்கமே தலை வைத்துப் படுக்கமாட்டார்கள். என்னவென்றால் அந்த இடங்களிலெல்லாம் பூமிக்கு அடியில் மிக அருகில் 'மாக்மா' எனப்படும் உருகிய பாறைகள் பெருமளவில் இருப்பதுதான். அந்த உருகிய பாறைகளின் வெப்பதினால்தான் நீர் வெப்பமடைகிறது. அவை எப்போது வேண்டுமானாலும் எரிமலை யாக வெளியே வந்து, ஆனந்தக் குளியலை அந்திமக் குளியலாக மாற்றிவிடலாம்!

நாம் வாழும் நிலப்பரப்புக்குக் கீழே நடப்பது என்ன வென்று தெரிந்தால் ஆச்சரியமாகவும், அதே சமயம் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் இருக்கும்.

## பேராபத்து ஏற்படுத்தும் நடனம்

நாம் வாழ்வது, பூமியின் மேல் தட்டு (CRUST) என்ற பகுதியில். இந்த மேல் தட்டு, பூமியில் 'மேண்டில்' (mantle) என அழைக்கப்படும் பாகு நிலையிலுள்ள (உருகிய) பாறைகளின் மேல் அமைந்திருக்கின்றது. அதற்கு கீழே, புவியின் மத்திய பகுதி இருக்கின்றது. இவைகள்தான் புவியின் மூன்று முக்கிய பகுதிகள். புவியின் மத்திய பகுதி இரும்பு -நிக்கல் கலவையினால் ஆனது. இந்தப் பகுதியின் வெப்பம், சூரியனின் வெளிப்புற வெப்பமான சுமார் 540000 டிகிரி சென்டிக்ரேடுக்கு நிகராகும்.

பூமியின் மத்தியில் உள்ள வெப்பம், பூமி உருவானபோது உண்டான ஆரம்பகால வெப்பமும், கதிரியக்கத்தினால் உண்டாகும் வெப்பமும் சேர்ந்ததே ஆகும். பூமியின் மத்தியில் இருந்து அந்த வெப்பம் வெளியே வரும்போது 'மாண்டில்' எனப்படும் பகுதியிலுள்ள பாறைகளை உருக வைக்கின்றது. உருகிய பாறைகள் அடர்த்தி குறைவானதால் மேலே எழும்புகின்றன. மேலே உள்ள குளிர்ந்த பாறைகள் அடர்த்தி அதிகம் உள்ளதால் கீழே (பூமியின் மத்திய பகுதிக்கு) இறங்குகின்றன. வெப்பமடைந்த பாறைகள் கீழிருந்து மேலாகவும், மேலே உள்ள குளிர்ந்த பாறை மேலிருந்து கீழே நகர்வதுமான மிக மெதுவான ஒரு சுழற்சியே மாண்டில் எனப்படும் பகுதியில் நடந்து கொண்டிருக்கின்றது. அதாவது, நாம் ஆனந்தமாக வாழும் பூமியின் மேல் தட்டுக்கு கீழே தான் இந்த உருகிய பாறைகளின் நடனம் நடந்து கொண்டிருக்கின்றது. மேண்டில் பகுதியில் நடக்கும் அந்த சுழற்சியினால், அதன் மேல் அமர்ந்திருக்கும் நாம் வாழும் மேல்தட்டு மெல்ல நகர்ந்து கொண்டே இருக்கின்றது. நகம் வளரும் வேகத்தில்தான் தட்டுக்களும் கோடிக்கணக்கான வருடங்களாக (tectonic plate movements) நகர்ந்து கொண்டே இருக்கின்றன. இதனை நாம் உணர்வதில்லை.

ஆபத்து என்னவென்றால், நாம் வாழும் பூமியின் மேல்தட்டு, ஆங்காங்கே பிளவு பட்டுள்ளது. பிளவுபட்டுள்ள தட்டுக்கள், அதற்கு கீழே உள்ள மேற்கூறிய உருகிய பாறைகளின் நகர்வினால், ஒன்றன் மீது ஒன்று மோதுவதும், பக்கவாட்டில் உரசிக் கொள்வதும், ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து செல்வதுமாக இருக்கின்றன. மேல் தட்டின் இந்த அசைவுகளால் அதன் கீழேயுள்ள உருகிய பாறைகள், மேல்தட்டின் பிளவுகளுக்கிடையேயும், மேல்தட்டை பிளந்துகொண்டும் பூமிக்கு வெளியே லாவா எனப்படும் அக்கினிக் குழம்பாக வெளிவருகின்றது.

## அமைதிப்பூங்கா?

ஒரு காலத்தில் எரிமலைகள் தொடர்ந்து நெருப்பை கக்கிக் கொண்டிருந்தன என்றும், ஆனால் இப்போது அவையெல்லாம் குளிர்ந்து இந்த பூமி, அமைதிப்பூங்காவாக மாறி விட்டது என்றும் வழக்கம்போல தப்பு கணக்கு போட்டுக் கொண்டார்கள் மக்கள். அதனால் தான் உலகம் முழுவதும் பல கோடி மக்கள் அமைதியாக இருக்கும் எரிமலை அருகே வீடுகள் கட்டி வாழ்கின்றனர். அறிவியலாளர்கள் பூமியின் அமைப்புப் பற்றியும், எரிமலைகள் எப்போது வேண்டுமென்றாலும் வெடிக்கலாம் என்று பல வருடங்கள் ஆராய்ந்து முடிவு செய்து கூறினாலும், அதைக் கேட்காமல் பெரிய நகரங்களை உருவாக்கி, பிறகு அதன் அழிவைக் கண்டு துயரப்படுகிறார்கள்.

கடவுளின் விரோதியான சாத்தான்களும், பேய்களும், பூமிக்குள் புதைக்கப் பட்டிருப்பதாகவும், அவைகள் அவ்வப்போது பூமியை விட்டு வெளியே வர எத்தனிப்பதனால் தான் எரிமலை வெடிப்புகளும், பூகம்பங்களும் தோன்றுவதாகவும், கடவுளை வேண்டிக்கொண்டால் இத்தகைய நிகழ்ச்சிகள் நடக்காது என்றும் நீண்ட காலமாக மக்கள் நம்பிக் கொண்டிருந்தனர். அதனால்தான் எரிமலைக்கு அருகில் குடியமர்ந்தனர். உலகில் சுமார் 1500 உயிரோட்டமான எரிமலைகள் உள்ளன. பசுபிக் கடலைச் சுற்றி 'நெருப்பு வளையம்' எனப்படும் வளையத்தில்தான் பெரும்பாலான எரிமலைகள் இருக்கின்றன. மேலும் இத்தாலி, இந்தோனேசியா, அமெரிக்கா, சிலி, கொலம் பியா, மெக்ஸிகோ மற்றும் அர்ஜென்டினா ஆகிய நாடுகளில் எரிமலைகள் பெருமளவில் காணப்படுகின்றன.

## குறிப்பிடத்தக்க சில வெடிப்புக்கள்

அமெரிக்காவில் செயின்ட் ஹெலென்ஸ் எனப்படும் ஒரு எரிமலை 120 ஆண்டுகளுக்கு முன்னர் வெடித்தது. வெடிப்பின் சக்தி 30,000 அணு குண்டுகளுக்கு நிகராக இருந்தது என்றால் அதன் சக்தியை என்ன வென்று சொல்வது! 1980 இல் இது மீண்டும் வெடித்து, மலையின் ஒரு பகுதியையே தூக்கி எறிந்தது. 1991 ஜூன் மாதத்தில் பிலிப்பின்ஸ் நாட்டில் உள்ள பினாடுபோ என்ற எரிமலை வெடித்ததில் எழுநூறு பேர் பலியாகினர். எரிமலையில் இருந்து வெளியேறிய அக்கினிப் பாறைப் பொடிகள் நானூறு சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்கு எறியப்பட்டன. 70,000 மக்களை ஊரை விட்டு அப்புறப்படுத்த வேண்டியிருந்தது.


இந்தோனேசியாவில் உள்ள டம்போரா எரிமலை 1815 இல் வெடித்து, சுமார் ஒரு லட்சம் மனிதர்களைக் கொன்றது. வெடிப்பில் இருந்து வந்த புகையும் தூசும் பூமியின் வடக்கு பாகத்தையே சூரியனிடமிருந்து மறைத்து விட்டது. சூரிய ஒளி இல்லாமல் போனதால் அடுத்த ஆண்டு பயிர்கள் விளைச்சல் பாதிக்கப்பட்டது. அந்த பகுதி கடும் குளிரினால் பாதிக்கப்பட்டது. இந்தோனேசியாவில் 1883 இல் வெடித்த ஒரு எரிமலையின் ஒலி, 2,000 மைல்கள் தொலைவில் உள்ள ஆஸ்த்திரேலியாவில் கேட்டது. அதனால், உண்டான சுனாமி பல ஆயிரம் மைல்கள் தொலைவில் உள்ள தெற்கு அமெரிக்காவில் தாக்கி 36,000 உயிர்களைக் காவு கொண்டது. ஒரு வருடத்தில் புதிதாக உண்டான எரிமலை என்ற விதத்தில் 1943 இல் மெக்ஸிகோ நாட்டில் ஒரு வயலிலிருந்து சாம்பல் வெளியே வர ஆரம்பித்தது. அதுவே ஒரு வருடத்தில் 1200 அடி உயர முள்ள ஒரு எரிமலை ஆனது. அருகிலுள்ள ஒரு நகரை நாசப்படுத்தியது. அங்கு ஒரு எரிமலை புதிதாக உருவானதைப் பார்க்க முடிந்தது. முதலில் சாம்பல் வெளியே வந்து, பிறகு ஒரு மலை தோன்றிய நிகழ்ச்சி நம் நாட்டில் நடந்திருக்குமேயானால், இங்கு பல கதைகள் புனையப்பட்டிருக்கும். (நெல்லை மாவட்டத்தில் பூமிக்குள்ளிருந்து நெருப்புக் குழம்பு வெளியேறும் சம்பவங்கள், புவியோட்டின் அருகே மேக்மா இருப்பதைக் காட்டுகின்றன. தமிழகத்தின் தென்மாவட்டங் களில் எரிமலை உருவெடுத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை)

கொலம்பியா நாட்டில் 1985 இல் ஒரு எரிமலை வெடித்தது. அது ஒரு பெரிய வெடிப்பு இல்லையென்றாலும், வெடிப்பால் ஏற்பட்ட மண் சரிவால், ஐஸ் உருகி 23000 பேர் நீரில் மூழ்கி இறந்தனர். எரிமலை வெடித்த சமயம் அவர்கள் உயரமான பகுதிக்கு சென்றிருப்பார்களேயானால் உயிர் பிழைத்திருப்பார். எரிமலைகள் வெடித்த போது அருகிலுள்ள மக்களைப் பாதுகாப்பான பகுதிக்கு கொண்டு செல்வதன் அவசியம் இந்த பெரும் உயிரிழப்பு சம்பவத்திற்குப் பிறகு ஒரு பாடமாக அமைந்தது. அறிவியலாளர்கள் பூமியின் உள்ளமைப்பையும், எரிமலைகளின் அடிப்படை உண்மைகளையும் கண்டறிந்து, எரிமலைகளின் வெடிப்பைத் துல்லியமாகக் கணக்கிட முடியாவிட்டாலும், அதனால் எப்போது ஆபத்து வரும் என்று ஓரளவு அனுமானித்து பல உயிர்களைக் காத்துள்ளனர்.

ஒரு எரிமலையின் அடுத்த வெடிப்பை கண்டுபிடித்து அருகிலுள்ள மக்களை காப்பாற்றும் முயற்சியில், கொலம்பியாவில் ஒன்பது அறிவியலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அந்த எரிமலை மிகவும் உயிரோட்டமானதாக இருக்கின்றது என்று அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் உயிரைப் பணயம் வைத்து, அடுத்த வெடிப்பை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, எரிமலை சற்றும் எதிர்பாராத வகையில் நெருப்பைக் கக்கியதில் அந்த ஒன்பது அறிவியலாளர்களும் நெருப்புக்கு இரையானார்கள். இதுபோல இன்னும் பல அழிவுகளை எரிமலைகள் ஏற்படுத்தியுள்ளன.


## சூப்பர் எரிமலைகள்

இதுவரை நாம் பார்த்தது சாதாரண எரிமலைகள் குறித்தே. ஆனால் சூப்பர் எரிமலை என்று பூமியில் ஆங்காங்கே இருக்கின் றன. அவை சாதாரண எரிமலைகளை விட ஆயிரம் மடங்கு அபாயகரமானவை. அவைகள் கக்கும் நெருப்புக் குழம்புகள் பெருத்த சேதத்தை ஏற்படுத்துவதுடன் அதனுடைய புகை பூமி முழுவதும் சுற்றி, சூரிய ஒளியை பல ஆண்டுகளுக்கு மறைத்து ஒரு சிறிய பனியுகத்தையே உண்டாக்கி, பூமியில் உயிர்வாழ் தலைக் கடினமாக்கிவிடும். பூமியை அழிக்கும் வல்லமையுள்ள இந்த எரிமலைகள் சில கடலுக்கு அடியி லும் மற்ற இடங்களிலும் ஒளிந்திருக் கின்றன. அவைகளை கண்டுபிடிக்க அறிவியலாளர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர்.



சுபாஷ்





நயாகரா அருவி அல்லது நயாகரா நீர்வீழ்ச்சி என்பது வட அமெரிக்காவின் வட கிழக்குப் பகுதியில் உள்ள புகழ் மிக்க ஒரு பேரருவி. இது உலகத்திலேயே உள்ள அருங்காட்சிகளில் ஒன்றாக போற்றப்படுகிறது. ஆண்டுதோறும் இதனைப் பார்த்து ரசிக்க 10 மில்லியன் மக்கள் வருகின்றனர். இந்தப் பேரருவி கனடாவுக்கும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்குமான எல்லையில் ஓடும் சுமார் 56 கி.மீ நீளமுள்ள நயாகரா ஆற்றின் பாதி தொலைவில் அமைந்துள்ளது. இது தனியான இரண்டு பெரிய அருவிகளைக் கொண்டது. சுமார் 85 வீத நீர் கனடாவில் உள்ள ஹோஸ் (ஹார்ஸ்) ஷூ அருவி என ஆங்கிலத்தில் வழங்கப்படும் குதிரை இலாட அருவியிலும், மீதம் உள்ளது அமெரிக்கப் பகுதியில் உள்ள அமெரிக்கன் அருவியிலும் விழுகின்றது. இவை இரண்டும் அல்லாமல் ஒரு சிறிய பிரைடல் வெய்ல் அருவியும் உண்டு. குதிரை இலாட அருவி 792 மீ அகலம் கொண்டது. உயரம் 53 மீ. அதிக உயரமானதாக இல்லாவிடினும் நயகாரா அருவியானது மிகவும் அகலமானது. அமெரிக்கன் அருவி 55 மீ உயரமும், 305 மீ அகலமும் கொண்டது. நயாகராப் பேரருவியில் ஆறு மில்லியன் கன அடிக்கு (168,000 m³) அதிகமான நீர் ஒவ்வொரு நிமிடமும் இந்த அருவியினூடு பாய்ந்துசெல்கிறது. உலகில் மிகவும் பரவலாக அறியப்பட்ட இந்த அருவி, வட அமெரிக்காவின் அதிசக்தி வாய்ந்த அருவியாகவும் இருக்கிறது.

# தவளைகளின் ஓட்டப் பந்தயம்



அபிசன்

தவளைகள் பல சேர்ந்து தமக்குள் ஓட்டப் பந்தயம் ஒன்றை ஏற்பாடு செய்வதென முடிவு செய்தன.

ஓட்டப் பந்தயத்துக்கான நாளும் நெருங்கி வந்தது. தவளைகளின் ஓட்டப் பந்தயத்தைக் காண பலரும் கூடி இருந்தார்கள். ஓட்டப் பந்தயத்தில் தவளைகள் ஓடி, அருகில் உள்ள ஒரு உயரமான கோபுரத்தை தொட வேண்டும். அதுதான் போட்டி விதி. முதலில் தொடுபவர் வெற்றியாளர்.

போட்டியும் ஆரம்பமானது. கூட்டமாய் கூடி இருந்தோர் பலரும் இது சுலபமான போட்டி இல்லை. உங்களால் அந்தக் கோபுரத்தை அடைய முடியாது என்று தவளைகளை நோக்கிக் கத்திக் கொண்டிருந்தனர். ஒரு சிலர் இந்தத் தவளைகளால் இந்தக் கோபுரத்தின் உச்சியைத் தொடவே முடியாது ! சாத்தியமே கிடையாது ! எனக் கூறினார்.

கூட்டத்திலிருந்து இப்படியாகப் பல்வேறு கோஷங்கள் வந்த வண்ணம் இருந்தன.

இதைக் கேட்ட தவளைகள் தங்களால் முடியாது என்ற வகையில் சோர்ந்து போய் போட்டியிலிருந்து நீங்கிக் கொண்டன.

எந்தத் தவளையும் அந்த உச்சியைத் தொடப் போவதில்லை. அது மிகவும் கடினமானது எனக் கூடியிருந்தோர் தமது கோஷங்களைத் தொடர்ந்து கொண்டேயிருந்தனர்.

தவளைகள் பலவும் போட்டியிலிருந்து நீங்கிக் கொண்டன. ஆனால் ஒரேயொரு தவளை மட்டும் மேலே மேலே முன்னேறிக் கொண்டிருந்தது. அந்தச் சின்னஞ்சிறிய தவளை மட்டுமே கோபுரத்தின் உச்சியை நோக்கி முன்னேறிக் கொண்டு இருந்தது.

சில விநாடிகளில் உச்சியைத் தொட்டு வெற்றியும் கண்டது.

அனைவரும் வியந்து போய் எப்படி அந்தச் சிறிய தவளையினால் மட்டும் இது முடிந்தது என ஆராய்ந்தார்கள்.

அப்போதுதான் தெரிந்தது கோபுர உச்சியைத் தொட்ட அந்தத் தவளைக்குக் காது கேட்காது என்று-

முடியாதவர்கள் அவர்களால் முடியாததை உன்னாலும் முடியாது என்று சொல்லுவார்கள். சொல்லுபவர்கள் சொல்லட்டும். அவர்களிடம் நீ செவிடாக இருப்பதே சில நேரங்களில் பொருத்தமானது.


உன் காதில் சங்கே ஊதினாலும் உன்வழி.செல். வெற்றி உனக்கே.

# பொது அறிவு

- உலகில் மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?
  ஏஞ்சல்
- உலகில் மிக அகலமான நீர்வீழ்ச்சி யாது?
  நயாகரா
- உலகில் மிகப் பெரிய பாலைவனம் எது?
  சஹாரா
- உலகிலே மிகவும் வறண்ட பாலைவனம் எது?
  அடகாமா (சிலி)
- உலகில் நதிகளே இல்லாத நாடு எது?
  சவூதி அரேபியா
- உலகிலே ஆயிரம் ஏரிகளின் நாடு என்று அழைக்கப்படும் நாடு எது? பின்லாந்து
- உலகில் மிகப் பெரிய நதி எது? நைல்
- உலகில் மிகப் பெரிய தீவு எது?
  கிறீன்லாந்து

டியூலா

# எடிசனின் கண்டுபிடிப்புகளின் கண்ணோட்டம்



"நிலவரை நீள் புகழ் ஆற்றின் புலவரைப் போற்றாது புத்தேள் உலகு"

உலகளவு புகழ் பெற்றவர்களை வானுலகம் போற்றாது. புகழ் பெற்றவரையே போற்றும்.

தனது வாழ்நாளில் மொத்தமாக 1,368 கண்டு பிடிப்புகளை நிகழ்த்தியிருக்கிறார் எடிசன். அவர் குறித்த கண்ணோட்டமே இது.

எடிசன் வெறும் விஞ்ஞானியாக , புது அறிவியல் தொழில்நுட்பங்களைக் கண்டுபிடிப்பவராக மட்டும் இல்லாமல் அந்தத் தொழில்நுட்பங்களை மக்கள் பயன்படுத்தும் பொருளாகவும் மாற்றினார். அதாவது குறைந்த விலைக்கு அதிகமான அளவில் உருவாக்கப்படும் (massproduction) பொருள்களாக மாற்றினார்.

எடிசனின் கண்டுபிடிப்புகளாக வாக்குப்பதிவு இயந்திரம் (கடைசிவரை பயன்படவில்லை), வினாடிக்கு வினாடி மாறும் பங்குச் சந்தைத் தகவல்களை அளிக்கும் இயந்திரம், தட்டச்சு இயந்திரம், மின்சார இழை விளக்கு, டி.சி மின்சார மோட்டர், மின்சாரப் புகையிரதம், சோம மின்கலங்கள், கொங்கிறீட் கலவை, பேச்சைப் பதிவு செய்யும் கருவி, பேசும் , அசையும் படங்கள், தொலை பேசியில் நடக்கும் ஒரு விவாதத்தை இரு முனையிலும் பேசுவதைப் பதிவு செய்யும் கருவி ஆகியவையும், தற்பொழுது உலகுக்கு ஒளியூட்டும் மின் குமிழும் குறிப்பிடத்தக்கது.

1929 ஆம் ஆண்டு எடிசன் மின்குமிழைக் கண்டுபிடித்ததை நினைவு கூரும் விதத்தில் பொன் விழாவையும் கொண்டாடிவிட்டார்கள். ஒவ்வோர் ஆண்டும் பெப்ரவரி (மாசி) மாதம் ஃ போர்ட் மையர்ஸ் நகரில் மிகப் பெரிய அளவில் மின்விளக்குத் திருவிழா மூன்று நாள்கள் நடத்துகிறார்கள்.

எடிசன் மறைந்தாலும் அவர் கண்டு பிடித்த மின் விளக்கு என்றென்றும் உலகத்தை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கும். நாம் எடிசனை மறந்தாலும் அவரின் கண்டுபிடிப்புகளை எப்போதும் மறக்கமாட்டோம்.



நேச- வித்யாசாகர்,
கிளிநொச்சி.

# ராஜராஜ சோழனின் மெய்கீர்த்தி (பட்டம்) பெயர்கள்

| | | |
|---|---|---|
| அழகிய சோழன் | ராஜமார்த்தாண்டன் | சோழ மார்த்தாண்டன் |
| மும்முடிச் சோழன் | ராஜேந்திரசிம்மன் | திருமுறை கண்ட சோழன் |
| காந்தலூர் கொண்டான் | ராஜவிநோதன் | தெலிங்ககுலகாலன் |
| சோழநாராயணன் | உத்தமசோழன் | நித்யவிநோதன் |
| அபயகுலசேகரன் | உத்துங்கதுங்கன் | பண்டித சோழன் |
| அரிதுர்க் கலங்கன் | உய்யகொண்டான் | பாண்டிய குலாசனி |
| அருள்மொழி | உலகளந்தான் | பெரிய பெருமாள் |
| ரணமுகபீமன் | கேரளாந்தகன் | மூர்த்தி விக்கிரமாபரணன் |
| ரவிவம்சசிகாமணி | சண்ட பராக்கிரமன் | ஜனநாதன் |
| ராஜபாண்டியன் | சத்ருபுஜங்கன் | ஜெயகொண்ட சோழன் |
| ராஜசர்வக்ஞன் | சிங்கனாந்தகன் | சத்திரிய சிகாமணி |
| ராஜராஜன் | சிவபாதசேகரன் | கீர்த்தி பராக்கிரமன் |
| ராஜகேசரி வர்மன் | சோழகுலசுந்தரன் | தைலகுலகாலன். |
| சோழேந்திரசிம்மன் | | |



# 500 ஆண்டுகளாக உறையாமலிருக்கும் 15 வயதுச் சிறுமியின் உடல் இரத்தம்!

அவளது முடியை வைத்து, அவள் என்ன மாதிரியான உணவுப் பழக்க வழக்கக் களைக் கொண்டவள் என ஆராய்ந்ததில், இன்கா மக்கள் தங்கள் குழந்தை களைநன்கு கொழுக்கவைத்து கடவுளுக்கு அர்ப்பணித்தது தெரியவந்துள்ளதாம்.



இறந்து 500 வருடங்களுக்கு மேலாகியும், இன்னமும் உடலில் உள்ள இரத்தம் கூட உறையாத 15 வயது சிறுமியின் உடல் குறித்த செய்தி வெளியாகியுள்ளது. ஆர்ஜென்டினாவில் உள்ள சால்டா அருங்காட்சிய கத்தில் இத்தகைய மூன்று இந்த மம்மிக்களை மக்கள் பார்வைக்கு வைக் கத் திட்டமிட்டுள்ளார்கள்ாம். 1999 ஆம் ஆண்டு லுல்லைலிகோ மலையில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. உறைந்த நிலையில் இருந்த அந்த உடல்களில் பாகங்கள் எதுவும் கெட்டுப் போகவில்லையாம், இரத்தம் கூட உறையாத அள வுக்கு பதமாக பாதுகாப்பாக இருந்திருக்கின்றன அந்த உடல்கள். தோல் கூட புத்துணர்ச்சியுடன் இருப்பது தான் ஆச்சரியம்.
இறந்து ஐநூறு வருடங்களுக்கு மேலாகியும், இன்னமும் உடலில் உள்ள இரத்தம் கூட உறையாத மூன்று மம்மிக்களைக் கண்டு பிடித்துள்ளனர் ஆராய்ச்சியாளர் கள். ஏதோ, நோய் வாய்ப்பட்ட சாதாரண பெண்ணை மருத்துவர்கள் பரிசோதிப்பதுபோல தோன்றும் அந்தப் புகைப்படத்தில் இருப்பவர் தான் சுமார் 500 ஆண்டு களுக்கு முன் பனியில் உறைந்து இறந்து போன 15 வயதுச் சிறுமி. நாகர கதைகளில் வருமே. அது போல மதத்தின் பெயரால், பனியில் புதைக்கப்பட்ட இச்சிறு மிக்கு லா டென்சிலா', அதாவது திருமணமாகாத இளம் பெண் என்று பெயரிட்டுள்ளனர் ஆராய்ச்சியாளர்கள்.
1999 இல் ஆர்ஜென்டினாவில் உள்ள லுல்லைலிகோ என்ற இடத்தில் சுமார் 6739 மீற்றர் ஆழத்தில் கண் டெடுக்கப்பட்டது. டென்சிலாவின் உடல் இன்கா இனத் தைச் சேர்ந்த இப்பெண் கடவுளுக்காக அர்ப்பணிக் கப்பட்டு, கடவுளுடன் வாழ ஆசைப்பட்டு, மதத்தின் பெயரால் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.
டென்சிலாவின் உடல் உறுப்புகள் எதுவும் அழுகாமல், உடையாமல் அப்படியே இருக்கின்றன என்று ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்ஆராய்ச்சியாளர்கள். டென்சிலாவின் உடல் உறுப்புகளை ஆராய்ந்து பார்த்த போது, அது சில வாரங்களுக்கு முன்னர் இறந்த உட லைப் போன்று இருந்ததாம்.
அவளது முடியை வைத்து, அவள் என்ன மாதிரியான உணவுப் பழக்க வழக்கக் களைக் கொண்டவள் என ஆராய்ந்ததில், இன்கா மக்கள் தங்கள் குழந்தைகளை நன்கு கொழுக்க வைத்து கடவுளுக்கு அர்ப்பணித்தமை தெரியவந்துள்ளதாம்.
கடவுளுக்கு அர்ப்பணிப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே, விலங்குகளின் கொழுப்புகள் மற்றும் தானி யங்களைக் கொடுத்து அந்தக் குழந்தைகளை நன்கு செழிப்பாக்குவார்களாம் அவர்கள் குடும்பத்தார்.
டென்சிலாவின் வயிற்றுப்பகுதியை ஆய்வு செய்த போது, அவள் இறப்பதற்கு சில மணி நேரத்துக்கு முன்னதாக ஏதோ காய்கறி போன்ற உணவை உட்கொண்டிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். டென்சிலாவின் உடல் இருந்த நிலையை வைத்து பார்க்கும்போது, அவள் இறப்பதற்கு முன்ன தாக ஏதேனும் மருந்து உட்கொண்டிருக்கலாம். அதன் மூலம் அவளது இறப்பு நிகழ்ந்திருக்கலாம் என்று ஊகிக்கின்றனர் ஆய்வாளர்கள்.



60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு 16 அடி நீளமும் 900 பவுண்டு எடையும் கொண்ட மிகப்பெரிய முதலைகள் 58 அடி நீளம் கொண்ட ரைற்னநோபோ பாம்புகளுடன் சண்டையிட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
அண்மையில் ஆராச்சியாளர்கள் தாம் நடத்திய ஒரு ஆய்வு மூலம் கண்டறியப்பட்ட ஒரு விடயத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது உலகின் மிகப் பழமையான மழைக்காடுகள் என அறியப்பட்ட பகுதிகளில் உள்ள ஆறுகளில் 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு 58 அடி நீளம் கொண்ட ரைற்னநோபோ பாம்புகள் 900 பவுண்டு எடையுடைய முதலைகளுடன் சண்டையிட்டதாகக் கூறியுள்ளனர்.
மிகப்பெரிய முதலைகள் மற்றும் ரைற்னநோபோ பாம்புகள் அசாதாரணமான வகையில் திகிலூட்டும் ஊர்வனவாக மழைக்காடுகளில் இருந்தன என்று தமது ஆரம்பக் கண்டுபிடிப்பு மூலம் அறிந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
இன்றைய மாறிவரும் சூழலுக்கு ஏற்ப முதலைகள் எவ்வாறு வாழுகின்றன என்பது குறித்த அம்சங்களை ஆய்வு செய்கையில் சில விடயங்களை நாம் கண்டறிந்துள்ளோம்.
எல்லோரும் முதலைகள் கடந்த 250 மில்லியன் ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட மாறாமல் இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் நாம் புதைபடிவ பதிவுகளில் கண்டவை ஒரு வித்தியாசமான கதையைச் சொல்கின்றன. உண்மையில் இங்கு காணப்பட்ட இந்த விலங்குகளின் புதைபடிவங்கள் முதலை போன்ற விலங்குகளை விட முற்றிலும் வேறுபட்ட விலங்காக இருந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்

# 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ராட்சத விலங்குகள்





# வெங்காயத்தின் வெளிப்புறத் தோல் அடுக்கை இனி வீசாதீர்கள்!

## இரத்த அழுத்தத்தைக் குறைக்குமாம்

**வெங்காயம் உலகில் விலை குறைந்த உணவாகவும் அதே நேரம் மிக அரிதான இத்தகைய மருத்துவ குணங்களும் அதற்கு உண்டு என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.**

பொதுவாக சமையலில் பயன்படுத்தப்படும் வெங்காயத்தின் மிகக் கடினமான உட்பகுதி அடுக்கை அடையும் வரை அதன் தோலை உரித்து எறிந்து விடுவது வழக்கம்.

ஆனால் இன்றிலிருந்து இப்பழக்கத்தை மாற்றிக் கொள்ளுங்கள். ஏனெனில் வெங்காயத்தின் தோலுக்கு இரத்த அழுத்தத்தைப் போக்கும் சக்தியும் உண்ணக் கூடாது எனத் தவிர்க்கும் அதன் வெளிப்புறத் தோல் அடுக்குகளுக்கு இரத்தக் குழாய் அடைப்புக்களை நீக்கும் சக்தியும், உண்டென புதிய ஆய்வு தெரிவிக்கின்றது.

மேலும் வெங்காயம் உலகில் விலை குறைந்த உணவு என்பது மட்டுமின்றி, மிக அரிதான மருத்துவக் குணங்களும் அதற்கு உண்டு என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் ஒவ்வொரு நாளும் நாம் உட்கொள்ளும் மிக முக்கிய சத்துக்களைக் கொண்ட பழங்கள் மற்றும் மரக்கறிகளில் இருந்து பூரண பலனைப் பெறுவதில்லை என்றும் வழக்கத்தில் அவற்றின் தோல் மற்றும் முக்கிய பாகங்களை நீக்கி எறிந்து விடுவதாகவும் குறித்த நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நாம் வீசி விடும் உணவுப் பொருள்களில் வெங்காயத் தோலுடன் முலாம்பழப் பட்டை (melon rind) மற்றும் ஓரேஞ் பழத்தின் தோல் ஆகியவை முக்கிய உடல் நலத்துக்குத் தேவையான சத்துக்களைக் கொண்டிருப்பவை என்றும் கூறப்பட்டுள்ளது.

வெங்காயத் தோலில் அடங்கியுள்ள quercetin என்ற பதார்த்தம் இரத்த அழுத்தத்தைக் குறைக்க வல்லது என்பதுடன் அழற்சி எதிர்ப்பு உடையவையும் உள்ளது. இதைவிட வெங்காயத்தின் இலையான வெங்காயத் தாளும் விட்டமின் C, பெனோலிக்ஸ் மற்றும் சக்தி வாய்ந்த ஆக்ஸிஜனேற்ற (antioxidants) தன்மை உடையதாகும். இந்த antioxidants பதார்த்தம் புற்று நோய், இதய நோய் என்பவற்றுக்கு எதிராகப் போராடும் தன்மையைக் கொண்டது மட்டுமன்றி வயதாவதையும் குறைக்கும் தன்மை உடையவை என்று கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.



---



# கண்களை திறந்து கொண்டே தூங்குவது சாத்தியமா?


**குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட வயது வரை தூங்கும் போது இமைகள் முழுமையாக மூடாமல் கொஞ்சம் திறந்தபடி தூங்குவது (அரைக்கண்) இயல்பு. மேல் இமை தசைகள் சரியான வளர்ச்சி அடைந்த பின்னர் இமைகளை முழுவதுமாக மூடியபடியே தூங்குவர். சிலருக்கு இளம்பருவம் வரைக்குமே இந்த பிரச்சினை இருக்கலாம்.**

மனிதன், மருத்துவம், விலங்குகள் இணைந்தே நொக்டெர்னல் லெகோப்தல மஸ் Nocturnal lagophthal mos என்று மருத்துவத்துறையில் குறிக்கப்படும் கண்களைத் திறந்து கொண்டே தூங்குவது குழந்தைகளில் பலருக்கு இருக்கும். ஆனால் பெரியவர்களுக்கு என்பது ஓரளவு கடினமான பிரச்சினைதான்.

குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட வயுது வரை தூங்கும்போது இமைகளை முழுமையாக மூடாமல் கொஞ்சம் திறந்தபடி தூங்குவது (அரைக்கண்) இயல்பு. மேல் இமைத் தசைகள் சரியான வளர்ச்சி அடைந்த பின்னர் இமைகளை முழுவதுமாக மூடிய படியே தூங்குவர். சிலருக்கு இளம்பருவம் வரைக்குமே இந்தப் பிரச்சினை இருக்கலாம். பெரியவர்களுக்கு என்றால் தோல் நோய் பிரச்சினை அல்லது முகத்தில் ஏதேனும் சத்திரசிகிச்சை செய்திருந்தால் இந்தப் பிரச்சினை இருக்கும். பெரியவர்களுக்கு இந்த பிரச்சினையால் இமை முடிகள் கண்களில் பட்டு எரிச்சலை ஏற்படுத்தும். தொடர்ந்தால் பார்வைப் பிரச்சினை ஏற்படும். அப்படிப்பட்ட பிரச்சினை உள்ளவர்களுக்கு மருத்துவர்கள் ஐ மாஸ்க் என்று சொல்லக் கூடிய முக மூடியை அணிந்து கொள்ளுமாறு பரிந்துரை செய்கிறார்கள்....

ஒரு கண்ணை மட்டும் திறந்தபடி தூங்க முடியுமா ?

இயல்பில் மனிதனுக்கு இதுவும் முடியாத காரியந்தான். பறவைகள், விலங்குகள் அந்த மாதிரி தூங்குவது உண்டு. பெரும்பான்மையான விலங்குகள் ஒரு கண்ணை மட்டுமே மூடித் தூங்குகின்றன. அப்போது அவைகளுக்கு ஒரு பக்க மூளையும் விழிப்புடன் இருக்கும். இது எதிரிகளிடம் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ள இயற்கை வழங்கிய கொடை. இமைகளே இல்லாத விலங்குகள் அதிகம் உள்ளன. மீன்களுக்கு இமைகளே இல்லை பிரச்சினை இல்லை. டொல்பின்கள் ஒரு கண்ணை மூடிய படிதான் தூங்கும். கண்டம் விட்டு கண்டம் பறக்கும் பறவைகளும் தூங்கிக் கொண்டே பறக்கும்.



# வாழ வைக்கும் போராட்டம்

■ யதீ கே.என். ராமசந்திரன்

‘ போராட்டம் என்பது ஆயுதம் ஏந்தி இரத்தம் சிந்துவதைக் குறிக்கவில்லை. ஓர் ஊசியில் நூலைக் கோர்ப்பதுகூட ஒரு போராட்டம்தான். அதில் வெற்றி பெறும்போது மனதில் லேசாகத் துளிர்க்கும் மகிழ்ச்சியைப் பலரும் கவனித்திருக்க மாட்டீர்கள் ’

மனிதர்களானாலும் சரி, விலங்குகளானாலும் சரி, சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் போட்டிகளும், போராட்டங்களும் அவசியம்' என்று டெஸ்மாண்ட் மாரிஸ் என்ற மானிட வியலாளர் கூறுகிறார். வன விலங்குகள் உணவுக்காகவும், காதலுக்காகவும், உயிர் வாழ்வதற்காகவும் ஏனைய விலங்குகளுடன் இடைவிடாது போட்டியிட்டுக் கொண்டும் போராடிக் கொண்டுமிருக்கின்றன. ஆதி மனிதர்களும் அப்படித்தான் இருந்தார்கள். நவீன யுகத்தில் வன்முறையற்ற போட்டிகளுக்கும் போராட்டங்களுக்கும்கூட தேவை குறைந்து கொண்டே போகிறது. அதன் காரணமாகவே மனித சந்தோஷ அளவுக் குறியீட்டு எண் படிப்படியாகக் குறைந்து கொண்டே வருவதாக வியன்னாப் பல்கலைக்கழகத்தின் உளவியல் ஆய்வாளர் குழு ஒன்று தெரிவிக்கிறது.

பல ஆண்டுகளாக, தமது அலுவலகத்தில் பலவிதமான சவால்களையும் போட்டிகளையும் போராட்டங்களையும் சந்தித்துக் கொண்டிருந்தபோது ஒரு மனிதருக்கு இருந்த உற்சாகமும், உத்வேகமும், விறுவிறுப்பும், சுவாரசியமும் அவர் ஓய்வு பெற்றபின் மறைந்து போகின்றன. ஓய்வு பெற்ற பின்னர் பலருக்கு உடல்நலம் விரைவாகக் குலைகிறது. ஒரு சிலர் மரணமும் அடைகிறார்கள். புத்திசாலிகள் ஓய்வு பெற்றபின் தமக்கேற்ற போட்டிகளையும், போராட்டங்களையும் உருவாக்கிக் கொண்டு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

நாய்களும் பூனைகளும் தம் வால்களைத் துரத்தியவாறு சுற்றிச் சுற்றிச் சுழலும். அதற்குக் காரணம் அலுப்புத்தான். அவற்றுக்கு வேட்டையாட வேண்டிய அவசியமில்லாமலே உணவு கிடைத்து விடுகிறது. எனவே அவை தமது வால்களை வேட்டை இலக்குகளாகக் கற்பனை செய்து கொண்டு துரத்திப் பிடிக்க முயலுகின்றன. அது ஒரு தூண்டலாக அமைந்து ஊக்கமுண்டாக்குகிறது.

தற்காலத்தில் நகரங்களிலும் ஊர்களிலும் மனிதர்களுக்குப் பாதுகாப்பான சூழல்கள் உள்ளன. நவீன எந்திரங்கள் மனித உழைப்பைத் தேவையில்லாமல் செய்து விட்டன. இப்போதெல்லாம் யாராவது ஓய்ச்சல் ஒழிவின்றி உழைத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் அவர் வேண்டுமென்றே ஐந்து நிமிடங்களில் செய்து முடிக்க வேண்டிய வேலையை அரை மணி நேரத்துக்கு இழுத்தடிக்கிறார் என்றுதான் பொருள். அல்லது அவசியமேயில்லாத வேலைகளைச் செய்து கொண்டிருப்பார். நாயும் பூனையும் தத்தமது வால்களைத் துரத்துவதைப் போல அவர் செயற்கையாக ஒரு தூண்டலை உண்டாக்கிக் கொள்கிறார். அவர் செய்வதை விடக் குறைந்த அளவில் அவர் உழைத்தாலும் அவரால் உயிர் வாழ முடியும். ஆனால் அதில் சுவாரசியமிருக்காது.

ஆதி மனிதன் கட்டாயமாக உழைத்தே ஆக வேண்டியிருந்தது. ஆனாலும் அவன், தான் செய்யும் வேலையின் தன்மையை மாற்றிக் கொண்டேயிருந்ததால் அவனுக்கு அலுப்பு ஏற்படவில்லை. ஆனால் இன்று நவீன எந்திரங்களின் ஆதிக்கத்தில் தொழிலாளிகளின் புதுப்புனைவுத் திறன்கள் மழுக்கப்பட்டு விட்டன. கன்வேயர் பெல்ட்டில் வரிசையாக வருகிற கார்களின் கதவுகளில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு திருகாணியை மட்டுமே பொருத்திக் கொண்டு தமது பணிக்காலம் முழுவதையும் கழிக்கிற தொழிலாளிகள் உள்ளனர். அவர்களுடைய மூளை அந்த ஒரு குறிப்பிட்ட பணிக்காக மட்டுமே தயார் செய்யப்பட்டதாக மாறியிருக்கும். அவ்வாறானவர்கள் ஓய்வு நேரங்களில் அடிதடிகள் நிறைந்த சினிமாக் கள், குத்துச் சண்டைகள் போன்ற விறுவிறுப்பான விஷயங்களைப் பார்த்துத் தமது உபரி ஆற்றலைச் செலவழிப்பார்கள்.

சில பெண்கள் வழக்கமான அடுக்களைப் பணிகளை முடித்த பின்னர் புதுவிதமான சிற்றுண்டிகளைச் செய்து பார்ப்பதன் மூலம் தமது படைப்புத் திறன்களுக்குச் சவால் விட்டுப் பார்க்கிறார்கள். வீட்டு வேலைகளுக்குப் பணியாட்களை வைத்துக் கொள்ளும் வசதி பெற்ற பெண்கள் கலைப் பயிற்சிகளிலும் சமூக சேவைகளிலும் ஈடுபட முனைகிறார்கள். தன்னால் முடியும் என்று தமக்குத் தாமே சவால் விட்டுக் கொண்டு வெற்றி பெறுவதற்கான ஒரு வகையான போராட்டமாகவே அது அமையும். இது போன்ற தூண் டல் தேவைகளுக்கு வடிகால் அமைத்துக் கொள்ளாத பெண்கள் தொலைக்காட்சித் தொடர்களையும் சினிமாக்களையும் பார்த்து அவற்றில் வரும் கதாநாயகிகளுக்காக அழுது பொழுதைக் கழிக்கிறார்கள். சவால்களோ போராட்டங்களோ இல்லாமல் இவ்வாறு கற்பனை உலகில் மன நிறைவு காணும் பெண்களில் பலர் சிடுமூஞ்சிகளாகவும் மனப் பிறழ்வு அடைந்தவர்களாகவும் மாறிவிட வாய்ப்புகள் உள்ளன.

சுய உதவிக் குழுக்களில் சேர்ந்து கொண்டு சிறு தொழில்களில் ஈடுபட்டு பணம் சம்பாதிக்கும் எளிய இல்லத்தரசிகள் முதல் பெரும் தொழில் நிறுவனங்களில் உயர்நிலை நிர்வாகிகளாக வலம் வரும் பெண்மணிகள்வரை எல்லோரும் வெற்றி பெற்ற போராளிகள்தான். அவர்களுடைய முகங்களிலே ஆளுமையும் பெருமிதமும் மிளிரக் காணலாம். அவர்களுக்கு மனரீதியாகவோ உடல் ரீதியாகவோ நோய்க்குறிகள் அரிதாகவே ஏற்படுகின்றன.

ஒரு சிறு குழந்தை முதன்முதலாக எழுந்து நிற்பதிலும், தள்ளாடித் தள்ளாடி இரண்டு அடி எடுத்து வைப்பதிலும் வெற்றி பெறும்போது அதன் முகத்தில் தோன்றும் வெற்றிக் களிப்பைக் கவனித்திருக்கிறீர்களா? தனது போராட்டத்தில் வெற்றி பெற்றதால் ஏற்படும் சந்தோஷம் குழந்தையை மேலும் திறமையுடன் நடக்கவும் அடுத்து ஓடவும் உந்துகிறது.

போராட்டம் என்பது ஆயுதம் ஏந்தி ரத்தம் சிந்துவதைக் குறிக்கவில்லை. ஓர் ஊசியில் நூலைக் கோர்ப்பதுகூட ஒரு போராட்டம்தான். அதில் வெற்றி பெறும்போது மனதில் லேசாகத் துளிர்க்கும் மகிழ்ச்சியைப் பலரும் கவனித்திருக்க மாட்டீர்கள். பெரிய கோவிலையும் தாஜ்மஹாலையும் கட்டி முடித்த சிற்பிகள், சக்கரத்தைக் கண்டுபிடித்த ஆதி மனிதன், சூப்பர் கம்ப்யூட்டர்களை உருவாக்கிய விஞ்ஞானிகள் என எல்லாருமே தத்தம் போராட்டங்களில் வெற்றி பெற்றவர்களே. வயிற்றுப் பிழைப்புக்காக மட்டுமே உழைத்து வந்த மனிதர்களை ஆத்ம திருப்திக்காக உழைக்க வைத்த பெருமை இந்தப் போராட்டங்களுக்கு உண்டு.

உடலுக்கும் மனதுக்கும் போதுமான வேலை தருகிற அளவுக்குத் தூண்டல்களும் உந்துதல்களும் இல்லாதபோது அலுப்பு உண்டாகிறது. இதற்கு மாறாக, அளவுக்கு மீறிய தூண்டல்களிருந்தாலும் மனிதர் உட்பட எல்லா விலங்குகளும் முதலில் அவற்றிலிருந்து விலகிப் போக முயலும். புதிதாக ஒரு நாய்க்குட்டி ஒரு தெருவில் நுழையும்போது பழைய நாய்களின் விரட்டல், சிறுவர்களின் கல்வீச்சு, கார் மற்றும் லாரிகளின் இரைச்சல் ஆகியவற்றால் மிரண்டு போய் ஏதாவது ஒரு சாக்கடைக்குள் போய்ப் பதுங்கிக் கொள்ளும். காட்டிலிருந்து பிடித்து வரப்பட்ட ஒரு விலங்கை விலங்குக் காட்சிச் சாலையில் அடைத்தால் புதிய கூண்டு, புதிய சூழ்நிலை, புதிய ஓசைகள் போன்றவற்றால் அது அதீதமாகக் கிளர்ச்சி அடையுமானால் அது தனது கூண்டின் இருண்ட மூலையில் போய்ச் சுருண்டு கொள்ளும். மனிதர்கள்கூட உடல்நலம் குன்றியிருக்கும்போது சந்தடிகளும் சத்தங்களுமற்ற தனியறையில் முடங்கிவிட முயலுகிறார்கள்.

அலுவலகங்களில் பெரிய பொறுப்பிலிருப்பவர்களுக்கு நாலா திசைகளிலிருந்தும் பல தூண்டல்களும் உந்துதல்களும் வந்து கொண்டேயிருக்கும். தலைமையகத்திலிருந்து வரும் உத் தரவுகள், குறிப்புகள், நினைவூட்டல்கள் எனப் பலவிதமான கோப்புகளைக் கையாள வேண்டியிருக்கும். பிரச்சினைகளும் சிக்கல்களும் புதிர்களும் தீர்வுக்காக வந்து குவியும். பகல் முழுவதும் உழைத்தாலும் பாதி வேலைதான் முடிந்திருக்கும். மறுநாள் காலையில் புதிதாகக் கூடுதல் சவால்கள் காத்திருக்கும். இந்த நிலையில் பலரும் முடங்கி விடுவார்கள்.

இந்தப் போராட்டங்களால் உடலும் மனதும் பாதிக்கப்படாமலிருக்க, கனவு காணுங்கள்' என ஸ்வீடன் நாட்டு உளவியல் ஆய்வாளர் ஒருவர் கூறுகிறார். இரவில் நாம் உறங்கும்போது நமது அகமனம் மூளையில் குவிந்திருக்கும் தகவல்களை ஆய்ந்து அவசியமானவற்றை நினைவுப் பகுதிகளில் அடுக்கி, தேவையற்ற குப்பைகளை வெளியேற்றி விடுகிறது. இதன் மூலம் மறுநாள் காலையில் புதிதாக வரவிருக்கிற தூண்டல்களுக்கு இடம் ஒதுக்கப்படுகிறது. இந்தச் செயற்பாட்டின்போது நமது அகமனத் திரையில் கனவுகள் உண்டாகின்றன. உறக்கத்தின் முதன்மையான நோக்கம் இப்படிக் கனவு காண்பதுதானே தவிர உடலுக்கு ஓய்வளிப்பது ஒரு துணைப் பயன் மட்டுமே.

பிற்பகலில் ஓரிரு மணி நேரம் உறங்கினாலும் கனவு கண்டு மூளையைச் சுத்தப்படுத்திக் கொள்ள முடியும். இரவில் அல்லது பகலில் உறங்கத் தொடங்கும்போது கண்களை மூடிக் கொண்டால் தெரிகிற கரிய பரப்பில் ஓர் அமைதியான காட்சியை வரவழைத்துக் கொண்டு அதில் முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டேயிருந்தால் அந்தக் காட்சி கனவாக மாறித் தொடரும். நாம் அறிந்தும் அறியாமலும் தூங்குகிற நேரம் முழுவதும் கனவுகள் உண்டாகிக் கொண்டேயிருக்கின்றன. அதன் மூலம் ஒரு சுறுசுறுப்பான வேலைக்காரி வீட்டைப் பெருக்கித் துடைத்துச் சுத்தம் செய்வதைப்போல அகமனம் மூளையைச் சுத்தப்படுத்தி மறுநாள் காலையில் புதுப் பொலிவுடனும் உற்சாகத்துடனும் விழித்தெழ வைக்கிறது.

இவ்வாறு கனவு கண்டு மூளையையும் மனதையும் அவ்வப்போது சுத்தம் செய்து சுமைகளைக் குறைத்துக் கொள்ள முடியாதவர்கள், பலவிதமான உடல் மற்றும் மனக் கோளாறுகளினால் பீடிக்கப்படுகிறார்கள். எப்போதோ அடிபட்ட இடத்தில் திடீர் என்று வலி தோன்றும். எக்சிமா, சோரியாசிஸ் போன்ற தோல் வியாதிகள் வரும். பல் வலிக்கும், தலை வலி ஏற்படும். இவையெல்லாம் எச்சரிக்கைகள் தானே தவிர நோய்க்குறிகள் அல்ல. நமது பழக்க வழக்கங்களைச் சரியாக மாற்றிக் கொண்டால் அவை யாவும் மறைந்து போகும்.